
உனக்கெனவே...
உலகினிலே...
பிறந்தவளே!
விஜி பிரபு

# உனக்கெனவே... உலகினிலே... பிறந்தவளே!



# 1

'ஸ்ரீ நிவாசம்.'

பித்தளைத் தகட்டில் கருமை நிறத்தில் பளபளத்த எழுத்துக்களைத் தாங்கிய பெயர்ப்பலகை கம்பீரமாக ஒரு கோட்டையின் வாயிலைப் போல ஓங்கி உயர்ந்து நின்ற காம்பவுண்டுச் சுவரின் வாயிலில் பதிக்கப்பட்டு மின்னிக் கொண்டிருந்தது.

பெயருக்கு ஏற்றாற்போலவே மகாலட்சுமியின் பரிபூரண அனுக்கிரகத்துடனும் அன்புடனும் ஆடம்பரம் கலந்த தெய்வீக அழகுடன் நிமிர்ந்து நின்றது காம்பவுண்டிற்குள் இருந்த அந்த மாளிகை.

அந்த அதிகாலை நேரத்திலும் தங்களது கடமை தவறாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்த மாளிகையின் வேலைக்காரர்கள் அனைவருமே கடமைக்காக மட்டும் இன்றி ஒரு ஒழுக்கத்துடனும் உண்மையுடனும் தத்தமது வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந் தார்கள்.

வீட்டிற்குள் இருந்து வந்த பூஜை மணியின் ஓசை கேட்ட அனைவரும் ஒரு நிமிடம் தங்களின் வேலை களை நிறுத்தி கைகூப்பி நின்றுவிட்டுத் தங்களின் வேலைகளைத் தொடர்ந்தனர். அந்த வீட்டு எஜமானரின் தெய்வ பக்திக்கு அவர்கள் அனைவரும் செலுத்திய மரியாதை அது.

ஒரு கோவிலின் தோற்றத்தைப் போல தெய்வீக அழகுடன் அனைத்து தெய்வங்களின் உருவப் படம் மற்றும் சிலைகளுடன் இருந்த பூஜையறையில் பயபக்தி யுடன் கற்பூர ஆராதனையைக் காட்டிக் கொண்டிருந்த கணவரின் பக்திக்குக் குறையாத பயபக்தியுடன் கைகூட்டிக் கண்மூடி நின்றிருந்த தன் அன்னையின் அருகில் அவசரமாக வந்து நின்று கை கூப்பிக் கண்மூடி நின்றாள் ஆராதனா. அந்தப் பெரிய மாளிகையின் சொந்தக்காரரான நந்தகுமாரன், வாசுகி தம்பதியினரின் ஒரே செல்வ மகள் அவள்.

வேகமாகக் குளித்து வந்த அவசரத்தில் தன் தலையில் துண்டைக்கூட கட்ட மறந்து இடைதாண்டி நீண்ட கூந்தலில் இருந்து வழிந்த நீர் தனது நைட்டியின் பின் பாகத்தை நனைத்ததைக் கூட அறியாமல் ஈரம் சொட்ட நின்ற அண்ணனின் மகளை அன்புடன் பார்த் தாள் வைரமணி.



நந்தகுமாரனின் அன்புத் தங்கை அவள். தன் தங்கையைத் தன்னுடைய உயிருக்கும் அதிகமாக அன்பு செலுத்திய காரணத்தால் நந்தகுமாரன் அவளை தன் ஆருயிர் நண்பர் தில்லைநாயகத்திற்குத் திருமணம் செய்து வைத்துத் தன்னுடனேயே தன் மாளிகையிலேயே அவர்களையும் இருக்கச் செய்திருந்தார். மனைவியின் மேல் கொண்ட அன்பாலும், நண்பரின் மேல் கொண் டிருந்த உண்மையான நட்பாலும் தில்லைநாயகமும் அந்த மாளிகையைத் தன்னுடைய மாளிகையாக எவ் விதமான மன வேறுபாடும் இல்லாம ஏற்றுக் கொண்டார்.

நந்தகுமாரனின் அந்தஸ்திற்கும், செல்வத்திற்கும் சற்றும் குறையாத அந்தஸ்தையும் செல்வாக்கையும் கொண்டிருந்த தில்லைநாயகத்திற்குப் பெற்றோர் இல்லாத காரணத்தால் அவர் தன் மனைவியின் பெற் றோரையும் உடன் பிறந்தவரையும் தனது சொந்த மாகவும் கருதியதும் அதற்கு ஒரு காரணம்.

''என்னடா ஆராதனா? தலையைக் கூடக் கட்டாமல் இப்படியா ஈரம் சொட்ட வந்து நிற்பது?'' அன்புடன் கேட்டுக் கொண்டே அவள் தலையைத் துண்டினால் சுற்றிக் கட்டிய தன் அத்தையைப் பார்த்துப் புன்னகைத் தாள் ஆராதனா.

''அப்பா பூஜையை முடிச்சிடுவாங்கன்ற பயத்தில் ஓடி வந்திட்டேன் அத்தை.'' மெல்லிய குரலில் கூறிய மகளைத் திரும்பிப் பெருமையாகப் பார்த்தார் நந்த குமாரன்.

"அப்படி பயமா இருந்தால் கும்பகர்ணியைப் போல வெயில் வந்ததுகூடத் தெரியாமல் தூங்கியிருக்கக் கூடாது. நல்லாக் குறட்டை விட்டுத் தூங்கிவிட்டு வந்து எல்லோர் முன்னாடியும் ஒன்றுமே தெரியாதவளைப் போல நிக்கிறதைப் பாருங்கம்மா" கேலியுடன் அவள் தலையில் தட்டிய வைகுந்தனைப் பார்த்து முறைத்தாள் ஆராதனா.

"பாருங்கத்தை.. இந்தக் குரங்குக்கு காலையில் என்னை வம்பிழுக்காட்டிப் பொழுதே விடியாது. எங்கிருந்துதான் இதைப் பிடிச்சிட்டு வந்தீங்களோ..." சிணுங்கியபடியே முறையிட்ட ஆராதனாவின் தலையில் மறுபடியும் செல்லமாகத் தட்டினான் வைகுந்தன்.

"என்னைக் குரங்குன்னு இன்னொரு குரங்கே சொல்லுது பாருங்கம்மா. இந்த ஆச்சரியம் எல்லாம் நம்ம வீட்டில் மட்டும்தான் நடக்கும்..."

"அத்தை... இவனை" தன் தலையைத் தடவிக் கொண்டே அவனைப் பிடிக்க வந்த ஆராதனாவின் கையில் அகப்படாமல் போக்குக் காட்டிய மகனை தன் கைகளால் பிடித்து நிறுத்தினாள் வைரமணி.

"டேய்... மாமா சாமி கும்பிட்டுக்கிட்டு இருக்கிறது தெரியவில்லையா? இப்படித்தான் சாமி கும்பிடும்போது அவளை அழ வைப்பதா? ஆள்தான் வளர்ந்திருக்கே வைகுந்த்..."

"அறிவு வளரவே இல்லை. அப்படித்தானே அத்தை?" வைரமணியின் வார்த்தைகளை அவளை முந்திக் கொண்டு கூறி முடித்த ஆராதனா வைகுந்தின்



கைகளுக்கு எட்டாத தூரத்திற்கு தள்ளி நின்று கொண்டு அவனை நோக்கி நாக்கை துருத்தி விழிப்புக் காட்டினாள்.

சிறியவர்களின் சேட்டைகளை மனதிற்குள் ரசித்துக் கொண்டே பூஜையை முடித்த நந்தகுமாரன் அனைவரின் முன்பாகக் கற்பூரத் தட்டை நீட்ட அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்ட வைகுந்த் நெற்றியில் திருநீரைப் பூசிக் கொண்டே நகர்ந்த ஆராதனாவைக் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தினாள்.

"மக்கு... இவ்வளவு திருநீறை அள்ளிப் பூசிக்கிட்டு ஊதி விடாமல் போறியே.. கண்ணில் விழுந்து விடாது. இங்க வா.." அவளை அருகில் இழுத்துத் தன் முன் நிறுத்தி அவளது கண்களைத் தன் கைகளால் மறைத்துக் கொண்டே வெற்றியில் ஊதி விட்டான் முகுந்தன்.

"போதும்ப்பா.. போதும். இன்னிக்கு இந்தப் பாசமழை போதும். இதுக்கு மேலயும் இந்த மழையில் நனைகிற சக்தி எங்களுக்கு... சேச்சே... எனக்கு இல்லை. தயவு பண்ணி நிறுத்திக்கங்க வைகுந்த் அண்ணா..." தன் கண்களை துடைப்பது போல பாவனை செய்தான் ஆதித்யா. ஆதித்யா ஆராதனாவின் தம்பி. நந்தகுமாரன் வாசுகி தம்பதியினரின் இளைய மகன் அவன்.

"டேய்.. உன்னை யாராவது இங்க பஞ்சாயத்துக்கு கூப்புட்டாங்களா? நீயா ஏன்டா சம்மன் இல்லாமல் ஆஜராகிற? போடா.. போய் படிக்கிற வேலையைப் பாரு" அவனைப் பார்வையில் சுட்டுக் கொண்டே அங்கிருந்து சென்ற தம்பியைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தாள் ஆராதனா.

அவளது சிரிப்பை அன்புடன் பார்த்துக் கொண்டே தானும் இணைந்து சிரித்தபடியே அகன்ற தங்களது ஒரே மகனைக் கண் நிறையப் பார்த்து ரசித்தாள் வைரமணி. அவள் திரும்பித் தன் கணவனைப் பார்க்க, தில்லை நாயகமும் அதே எண்ணத்துடன் மனைவியைப் பார்த்தார். இருவரின் பார்வையும் ஒருநொடி கலந்து மகிழ்ச்சியுடன் மீழ, தன் இதழ்களில் ஒரு குறுநகையுடன் மனைவியைப் பார்த்தார் தில்லைநாயகம்.

''நம்மைப்போலவே நம்மோட பிள்ளைகளும் ஒற்றுமையாக இருப்பதைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்குங்க. என் கண்ணே பட்டுவிடும்போல இருக்கு'' கண்களைத் துடைத்துக் கொண்ட தன் மனைவியைப் பார்த்த தில்லைநாயகத்தின் சிரிப்பு அதிகமானது.

''என்னடி பைத்தியக்காரத்தனமாகப் பேசற. நம்ம பிள்ளைகள் பிறந்ததில் இருந்தே ஒன்றாக வளர்த்துக்கிட்டு இருப்பவங்க. அவங்களுக்கு இடையில் விகல்பமான எண்ணங்கள் இல்லாமல் உடன்பிறந்த சகோதரர்கள் போலப் பழகுவதை நினைச்சுத்தான் நாம சந்தோசப்படணும். ஒற்றுமையாக இருப்பது பெரிய விசயமா என்ன?'' கணவரின் கேள்வியில் இருந்த உண்மை வைரமணிக்கும் புரிந்துதான் இருந்தது. அத்தை மகன், மாமா மகள் என்ற எண்ணமே இல்லாமல் வைகுந்தனும் ஆராதனாவும் உடன் பிறந்தவர்களைப் போன்ற அன்புடன்தான் வளர்ந்து வந்தார்கள். ஆராதனாவைப் பொருத்த வரையில் அவருக்கு வைகுந்தனும் ஆதித்யாவும் ஒன்றுதான்.





# 2

''அன்னம்மாக்கா.. சாப்பிட்டு ரெடியா இல்லையா? லேட் ஆகும்னா நான் வெளியில் சாப்பிட்டுக் கொள்கிறேன்க்கா'' கிச்சனைப் பார்த்துக் குரல் கொடுத்த ஆராதனாவின் முன்பாக வேகமாக டிபன் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள் அன்னம்மா.

''என்ன கண்ணு நீ? வெளியில் எல்லாம் சாப்பிட்டா உன் வயித்துக்கு ஒத்துக் கொள்ளுமா? நான்தான் அவசரமா தயார் பண்ணிக்கிட்டு இருந்தேனே... அதுக்குள்ள கோபிச்சுக்கிட்டா எப்படி கண்ணு'' தட்டில் சட்டினியை வைத்துவிட்டு சாம்பார் கிண்ணத்தை எடுத்துவர கிச்சனுக்குள் ஓடினாள் அன்னம்மா.

''எனக்குப் போதும்க்கா. வேற எதையும் கொண்டு வந்து சாப்பிடச் சொல்லி கம்ப்பெல் பண்ணிடாதீங்கக்கா'' அவள் கூறியதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் நெய் தோசையைக் கொண்டு வந்து தட்டில் வைத்து சாம்பாரை ஊற்றிய அன்னம்மாவை முறைத்தாள் ஆராதனா.

''இப்பத்தானக்கா சொன்னேன். போங்க.. எனக்கு வேண்டாம். இதை நீங்களே சாப்பிடுங்க'' கூறிக் கொண்டே அழப்போன ஆராதனாவின் தோள்களைப் பற்றி அமர வைத்தாள் அன்னம்மா.

''என் கண்ணுல்ல.. இந்த ஒரு தோசையை மட்டும் சாப்பிட்டு விடு. ஒரு இட்லி எப்படி கண்ணு வயித்துக்குப் பத்தும்? இந்த தோசையையும் சாப்பிட்டுவிடு கண்ணு...'' கெஞ்சிய அன்னம்மாவைப் பார்த்துக் கோபமாக சிணுங்கிக் கொண்டே தோசையைப் பிய்த்து வாயில் வைத்தாள் ஆராதனா.

''ஏய் வாலு.. இப்ப எதுக்கு இப்படி டைனிங் டேபிளை ரெண்டு பண்ணிக்கிட்டு இருக்க? அப்படி அவசரமா இந்த மகாராணி எந்தக் கோட்டையைப் பிடிக்கக் கிளம்பறாங்கக்கா?'' அன்னம்மாவிடம் கேட்டுக் கொண்டே தன் பிளேட்டில் ஹாட் பாக்ஸில் இருந்து இட்லியை எடுத்து வைத்து சாப்பிட ஆரம்பித்தான் வைகுந்தன்.

''கோட்டையைப் பிடிக்கணும்னு என் கண்ணுக்கு என்ன அவசியம் ராசா? அது மாளிகையில் பிறந்து வளர்ந்த மகாராணிதான் ராசா...'' பெருமையுடன் கூறிய அன்னம்மாவைப் பார்த்த தன் தலையைப் பெரிதாக ஆட்டினான் வைகுந்தன்.

''இப்படி உசுப்பேத்தியே இவளை ஒண்ணும் இல்லாம ஆக்குங்க. இப்ப எதுக்காக உங்க மகாராணி இத்தனை அலப்பறையைக் குடுத்துக்கிட்டு இருக்கா. அதை முதலில சொல்லுங்க அன்னம்மாக்கா.''

''என் கண்ணு இன்னியில இருந்து காலேஜூம் போகுதுல்ல? அதுவும் இன்னிக்கு முதல் நாள் வேற.. முதல் நாளே லேட்டா போனா நல்லாவா இருக்கும்..'' என்னவோ ஜனாதிபதியாக பதவியேற்கப் போகிற



வளைப் போன்ற பெருமையுடன் ஆராதனையைப் பார்த்தாள் அன்னம்மா.

''போதும்க்கா.. போதும். இதுக்கும் மேல ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வார்த்தையைக்கூடத் தாங்கிக்கற சக்தி என்னோட சின்ன இதயத்துக்கு இல்லக்கா. அதனால இதோட உங்க பேச்சை நிறுத்திக்கங்க.. ப்ளீஸ்..'' கையெடுத்துக் கும்பிட்டவனைப் பதறிப் போய் பார்த்தாள் அன்னம்மா.

''ராசா!''

''பின்ன என்னக்கா? இவ இன்னிக்கு முதல் நாளா போகப்போகிற காலேஜூல நாள் நாலு வருசமாப் படிச்சுகிட்டு இருக்கேன். என்னிக்காவது ஒரு நாள் நான் இதைப்போல அலப்பறையைக் கொடுத்துப் பார்த்து இருக்கீங்களா? இவ என்னடான்னா...''

''நீ காலேஜூக்கு கடலை போடப் போற! நான் இஞ்சினியராகப் படிக்கிறதுக்காகக் காலேஜ் போறேன். இரண்டுக்கும் வித்தியாசம் இல்லையா?'' வைகுந்தனின் பேச்சை இடைமறித்துக் கண்களில் மின்னல் வெட்டக் கேட்ட ஆராதனாவைப் பார்த்துக் கொண்டே வந்து அவர்கள் எதிரில் அமர்ந்தார் நந்தகுமார்.

அவரது அருகில் வந்து அமர்ந்த தில்லைநாயகமும் மைத்துனரைப் போலவே ஆராதனாவின் பேச்சை ரசித்துக் கொண்டிருந்ததைப் பெருமையுடன் பார்த்தாள் அன்னம்மா.

''ஆண்டவனே - பணத்தால மட்டுமில்லாமல் குணத்தாலும் உயர்ந்து நிற்கிற இந்தக் குடும்பத்தின்

ஒற்றுமை என்னிக்கும் இதே போல நிலைச்சு இருக்கணும்பா'' மனமார வேண்டிக் கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்து சுடச்சுட தோசைகளை வார்த்தெடுக்க ஆரம்பித்தாள் அன்னம்மா.''

''டாடி.. இவ பேசினதைக் கேட்டுக்கிட்டு சிரிக்கிறீங்களே. அப்ப நீங்களும் இவ கட்சியா'' முறைத்த மகனது முதுகை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தார் தில்லைநாயகம்.

''நான் யார் கட்சியும் இல்லடா. ஆனா நம்ம ஆராதனா சொன்னதிலயும் உண்மை இருக்கத்தான் செய்யுது...''

''டாடி..''

''அம்மா முறைக்காதடா. ஆராதனாவுக்கு உன்னோட காலேஜுல மெரிட்ல சீட் கிடைச்சிருக்கு. ஆனா உனக்காக லட்ச லட்சமாப் பணத்தைக் கட்டித்தானே சீட் வாங்க முடிஞ்சது. இப்ப நீயே ஆராதனா சொன்னது உண்மையா இல்லையான்னு சொல்லு பார்க்கலாம்.''

தில்லைநாயகம் கூறியதைக் கேட்டு தன் சட்டைக் காலரை தூக்கி விடுபவள்போலப் பாவனையுடன் நடந்தவளைப் பார்த்துப் பல்லைக் கடித்தான் வைகுந்தன்.

''நீ காலேஜுக்குத்தான வர்ற. வாடி மகளே வா. அங்க வந்து நான் யாருன்னு உனக்குக் காட்டறேன். உன்னோட சவடால் எல்லாம் இந்த வீட்டுக்குள்தான் செல்லுபடியாகும். ஆனா காலேஜ்ல நான் உனக்கு சீனியர். அங்க நான் சொல்றபடிதான் நீ நடக்கணும்.. இரு.. இரு..'' ஒரு விரல் காட்டி எச்சரித்தவனை பார்த்துப் பழிப்புக் காட்டிக் கொண்டே கை கழுவிவிட்டு எழுந்தாள் ஆராதனா.



''வைகுந்த்.. இது என்ன பேச்சு. நீ இருக்கிற தைரியத்தில்தான் அந்தக் காலேஜ்ல ஆராதனாவைச் சேர்த்தோம். நீ உன்னோட விளையாட்டுத் தனத்தை எல்லாம் வீட்டிலேயே மூட்டை கட்டி வைச்சுட்டு அங்க அவளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமப் பார்த்துக்கிற வழியைப் பாரு. அதை விட்டுட்டு நீயே இப்படி பிரட்டிக்கிட்டு இருக்கிற.''

கண்டிப்புடன் கூறிய வைரமணியை சிரிப்புடன் ஏறிட்டுப் பார்த்தார் நந்தகுமார்.

''வைரம்.. நம்ம பிள்ளைகளைப் பத்தி நமக்குத் தெரியாதா? வைகுந்த் அம்மா பேச்சுக்காக ஆராதனாவை மிரட்டுகிறான். அவ மேல ஒரு தூசு பட்டாக்கூட இவன் தாங்கிக்க மாட்டான்னு உனக்குத் தெரியாதா? அதெல்லாம் ஆராதனாவை அவன் நல்லாப் பார்த்துக் கொள்வான்.''

தன் மகனின் மேல் அண்ணனுக்கு இருந்த நம்பிக்கையைப் பார்த்த வைரமணியின் உள்ளம் பெருமையில் பூரித்தது. அதே பெருமையுடன் ஆராதனாவையும் வைகுந்தனையும் வழியனுப்பி வைத்தாள் அவள்.

ஆராதனா ஏறுவதற்காகக் காத்திருந்த வைகுந்த் அவள் ஏறியவுடன் கார்க் கதவை அறைந்து சாத்தி விட்டு சுற்றி வந்து டிரைவர் இருக்கையில் அமர்ந்து காரைக் கிளப்பினான்.

காரின் ஜன்னல் வழியாக கையாட்டி விடைபெற்றுக் கொண்ட ஆராதனா காரின் கண்ணாடியை ஏற்றிவிட்டு தன் முன் தெரிந்த சாலையைப் பார்த்துக் கொண்டே அமைதியாக அமர்ந்திருந்தாள். என்றும் இல்லாத அவளது அமைதி வைகுந்தனைப் பாதிக்க அவன் பக்க வாட்டில் திரும்பி ஆராதனாவைப் பார்த்தான்.

''ஆரா.. ஏன் ஒரு மாதிரியா இருக்க? பயமா இருக்கா?'' ஆதரவாகக் கேட்டவனைப் பார்த்த ஆராதனாவின் விழிகள் பயத்தைக் காட்டியதை உணர்ந்து கொண்டான் வைகுந்தன்.

''ஏய் நான் சும்மா விளையாட்டுக்காக அப்படிச் சொன்னேன் ஆரா. நீ பயப்படாதே. நான்தான் உன்கூட இருக்கேன்ல. அப்புறம் என்ன?''

''இல்லை வைகுந்த். உன் காலேஜ்ல ராகிங் நிறைய இருக்கும்னு ராதிகா சொன்னா. அதான் பயமா இருக்கு.''

''அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. அத்தோட இப்ப அது என் காலேஜ் இல்லை. நம்ம காலேஜ். எல்லாக் காலேஜ்லயும் இருப்பதுபோல இங்கயும் ராகிங் இருக்கும்தான். அதெல்லாம் நீ இப்படி பயப்படுற மாதிரி பயங்கரமால்லாம் இருக்காது. சும்மா ஜாலிக்கா ஏதாவது பேசுவாங்க. ஆனா உனக்கு அந்தத் தொந்தரவுகூட இருக்காது. ஏன்னா நான் உன்னோட கஸின்றது தெரிந் தால் யாரும் உன்கிட்ட வாலாட்ட மாட்டாங்க. ஐயா வோட ரேஞ்ச் அப்படி.''



''அதையும்தான் பார்க்கத்தான போறேன்'' பயம் தெளிந்தவளாக கேலியுடன் கூறியவளைப் பார்த்து நிம்மதியாகச் சிரித்தான் வைகுந்தன்.

''ம்ம்ம்... இப்பத்தான் குட்கேர்ள் மாதிரி இருக்க. ஆமா.. உன் பிரெண்ட்... வாயாடி ராதிகா.. அவளும் இன்னிக்கு உன்கூடத்தான் ஜாயின் பண்றா?'' விட் டேத்தியாக அக்கறை இல்லாதவனைப் போலக் கேட் டாலும் அவன் முகத்தில் தெரிந்த மென்மை வைகுந் தனின் மனதை ஆராதனாவிற்கு உணர்த்தியது.

சிறு வயதில் இருந்தே ஆராதனாவின் உயிர்த்தோழி யாக இருப்பவள் ராதிகா. இருவரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் நன்றாகப் படித்து வளர்ந்தவர்கள். பள்ளி வார விடுமுறை நாட்களில் ஆராதனாவின் பங்களாதான் ராதிகாவின் இருப்பிடம்.

வைகுந்தனுக்கு ராதிகாவிடம் அன்பு இருப்பதைப் போலவே ராதிகாவிற்கும் வைகுந்தனிடம் மானசீகமான அன்பு இருப்பதை ஆராதனா அறிந்தே இருந்ததால் அவள் இருவரின் அன்பிற்கும் இணைப்புப் பாலமாகவே இருந்தாள்.

ஆனால் நேரில் பார்க்கும்போதெல்லாம் இரு வருக்கும் இடையில் ஒன்றுமே இல்லாதவர்களைப் போலவே பழகிக் கொள்ளும் இருவரின் போலியான நாடகத்தை அறிந்தும் அதைக் கலைக்க முயற்சிக்காமல் விலகியே இருந்து கொள்வாள் ஆராதனா.



# 3

''அம்மா'' குளித்துத் தலை துவட்டிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்த மனோஜ் சமையல் அறைக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டே குரல் கொடுத்தான்.

அவனது குரலுக்கு பதில் வராமல் போக வேகமாக வீட்டிற்கு வெளியே சென்று அன்னையின் தலை தென்படுகிறதா என்று அவசரமாகத் தேடிய மனோஜின் விழிகளில் ஏமாற்றம் பரவியது.

'ஏற்கெனவே லேட். இதில் இவங்களை வேற காணோம். எங்க போனாங்க?' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே பீரோவை திறந்து அதில் இருந்த தன் ஆடைகளை பார்வையால் தேடியவனின் கண்களில் மறுபடியும் ஏமாற்றம் படர்ந்தது.

''முதல் நாள் காலேஜுக்குப் போல நல்லதா ஏதாவது இருக்கான்னு பாரு. ஒண்ணுமே இருக்காது...'' எரிச்சலுடன் கூறிக்கொண்டே இருந்ததில் நல்லதாக ஒரு சட்டையையும் பேண்ட்டையும் எடுத்து அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்தான்.

மாநிறமும், அகண்ட தோளும், குறுகிய இடையும். தீர்க்கமான கண்களும், எடுப்பான செதுக்கியது போன்ற நாசியும், இயல்பாகச் சிவந்த இதழ்களும், ஆறடிக்கும்



அதிகமான உயரமுமாக கண்ணாடியில் தெரிந்த அழகான தோற்றத்திற்கு அந்த எளிமையான உடையை கனகச்சிதமாகப் பொருத்தி அவனை ஆணழகனாகக் காட்டிக் கொண்டிருந்தது.

அவன் ஆணழகன்தான். நல்ல குணத்திலும், அழகிலும், அனைத்துக் கலைகளிலும் முன்னணி பெற்று வெற்றி நாயகனாகத் திகழ்வதிலும், தீமையைப் பொறுக்காத தட்டிக் கேட்கும் வீரத்திலும் என்று அனைத்து விதத்திலும் அவனை ஆணழகனாகத்தான் அவனது கல்லூரி முழுவதும் கொண்டாடிக் கொண்டிருந்தது.

வலது கரத்தால் அலை அலையாக அடர்ந்த தோற்றத்தில் இருந்த கூந்தலை சீவி அதனை இடது கரத்தால் கலைத்து விட்டவனின் முன் பளபளப்பாக இருந்த புத்தம் புதிய டிபன் பாக்ஸை வைத்தாள் சங்கீதா.

''என்ன இது'' சுளித்த புருவங்களுடன் அவளை ஏறிட்டுப் பார்க்காமல் கேட்டான் மனோஜ்.

''ம்கும். ஏன்.. அதை என்னைப் பார்த்துக் கேட்டால் என்னவாம்? மாமா..'' சிணுங்கிக் கொண்டே மனோஜின் முன்னால் அவள் வந்து நின்றதைப் பார்க்காதவனாக சட்டென திரும்பி வீட்டில் இருந்து வெளியே வந்தான் அவன்.

''மாமா.. ரொம்பத்தான் பிகு பண்ணாதே. நீ பசியோட இருப்பன்னு அத்தை தோட்டத்தில் புலம்பிக்கிட்டு இருந்தது. அதான் நான் வீட்டில் இருந்து பலகாரம் கொண்டு வந்தேன். நீ என்னடான்னா...''

''அம்மா உன்னைக் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னாங்களா?'' கேட்டபடி பல்லைக் கடித்தவனை சற்றும் பயமில்லாமல் பார்த்தாள் சங்கீதா.

''ஏன்.. உங்கம்மா சொன்னால்தான் நான் உனக்கு சாப்பாடு கொண்டு வரணுமா? எனக்கு அந்த உரிமை இல்லையா?'' கேட்டுக் கொண்டே அருகில் வந்து நின்றவளை கண்ணோடு கண் தீர்க்கமாகப் பார்த்தான் மனோஜ்.

''உரிமை? இந்த உரிமையும் உறவும் இத்தனை வருஷமாக இல்லாமல் இப்ப மூணு வருசம் மட்டும் உங்க எல்லோருக்கும் ஞாபகம் வந்துவிட்டதா? எப்ப நான் இன்ஜினியரிங் சேர்ந்தேனோ அப்ப இருந்துதான் நாங்க உங்க சொந்தம். உண்மை என்பதெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சுச்சா? பேசாமல் நீ கொண்டு வந்ததை எடுத்துக்கிட்டு இடத்தைக் காலி பண்ணிவிடு. இல்லாட்டி நான் மனுஷனா இருக்க மாட்டேன்'' கோபத்துடன் உறுமிய அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே அசையாமல் நின்றிருந்தாள் சங்கீதா.

தலையில் விறகுக் கட்டைச் சுமந்து கொண்டு வந்த தமயந்தி அதனை வீட்டின்முன் இறக்கி வைத்துவிட்டு இருவரையும் பார்த்துக் கொண்டே அருகில் வந்தாள். அன்னையை முறைத்த மனோஜைப் பார்த்துத் தயக்கத் துடன் மெல்லிய சிரிப்பை உதிர்த்தவள் சங்கீதாவின் பக்கமாக அழுத்தமான பார்வையை வீசினாள்.

''ஏம்மா.. நான்தான் உன்னை எதுவும் கொண்டு வராதேன்னு சொல்லியிருக்கேன் இல்ல? அப்புறமும் எதுக்காக இப்படி அவன்கிட்ட வந்து மல்லுக்கட்டிக்கிட்டு இருக்க? போம்மா வயசுப் பொண்ணா லட்சணமா உங்க வீட்டில் ஏதாச்சும் வேலை இருந்தால் போய்ப் பாரு'' மெல்லிய அதே சமயம் அழுத்தமான குரலில் கூறியவளை குரோதமாகப் பார்த்தாள் சங்கீதா.



''இங்க பாருத்தை. நீதான் என் மாமாவை என் மேல பாசம் இல்லாமல் ஆக்கி வச்சிருக்க. உன் பசப்புப் பேச்சை எல்லாம் உன் புருசன்.. அதான்.. என் தாய் மாமன்கிட்ட வச்சுக்க. எனக்கும் என் மாமனுக்கும் இடை யில் வராத...''

''எவன்டி உன் மாமன்? அப்படியே அறைஞ் சேன்னா...?''

கை ஓங்கிக் கொண்டு வெறியுடன் பயந்த மகனைத் தடுத்து வீட்டிற்குள் இழுத்துச் சென்றாள் தமயந்தி.

மனோஜின் தாய் தந்தையான தமயந்தியும், நல்லுச் சாமியும் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள். அவர்களது திருமணத்தை இரு வீட்டாரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் ஊருக்கு வெளியே ஒரு குடிசை போட்டு அதில் தங்களது வாழ்க்கையைத் தொடங்கினார்கள் இருவரும்.

நல்லுச்சாமியின் பெற்றோருக்கு அவர் மகனாக இருந்தும் அவரை ஏற்றுக் கொள்ள விடாதபடி அவரது உடன் பிறந்த தங்கையான செண்பகம் தாய் தந்தை இருவரையும் தனது வார்த்தைகளால் மயக்கி தன்

னுடைய கைப்பிடிக்குள் பெற்றோர்களை வைத்துக் கொண்டு அவர்களது சொத்திற்கும் அதிபதியாக ஆகிவிட்டாள்.

பெற்றோரின் சொத்துக்கள் அனைத்தும் நல்லுச் சாமியின் தந்தை சுயமாக சம்பாதித்தவை என்ற காரணத்தால் அவரால் சொத்திற்கு உரிமையாக வாதாட முடியவில்லை. அத்துடன் தன்னையே வேண்டாம் என்று விட்ட தன் பெற்றோரின் சொத்தும் உடன் பிறந் தவளின் சொந்தமும் தேவை இல்லை என்ற வைராக் கியமும் மனதில் தோன்றிவிட நல்லுச்சாமி அவர்களது உறவை முறித்துக் கொண்டார்.

தமயந்தியோ அந்த சுற்று வட்டாரத்திலேயே பெரிய செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவள். நான்கு அண்ணன்களுக்கு ஒரே தங்கையாகப் பிறந்த அவள் செல்வச் செழிப்பிலேயே பிறந்து வளர்ந்தவள். அவளது வார்த்தைக்குப் பதில் வார்த்தைகூடப் பேசாத, விருப் பத்திற்கு எதிர்ப்புக் காட்டாத அவளது குடும்பம் தமயந்தியின் காதல் திருமணத்தில் மட்டும் தங்களின் முழு கருத்து வேற்றுமையையும் எதிர்ப்பையும் காட் டியது. அவர்களது சொந்தத்திலேயே பெரிய செல்வந்தர் ஒருவரின் மகனுக்கு தமயந்தி அறியாமலேயே கல்யாணம் பேசி முடிவு செய்துவிட்ட நிலையில் வேறு வழியே இல்லாமல் தன்னுடைய வீட்டையும் சொந்தங் களையும் விட்டு கல்யாணத்திற்கு முதல் நாள் இரவே வெளியேறி விட்டாள் தமயந்தி.

தன் செயலுக்கான நியாயத்தை எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவளைத் திரும்பியும் பார்க்கக்கூட விரும்பாத



சொந்தங்களின் வெறுப்பால் தமயந்தி இன்றளவும் தன்னுடைய பிறந்த வீட்டை எண்ணிப் பார்க்கவும் விரும்பாத மனத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

தன்னிடம் கொண்ட காதலுக்காக செல்வம் சுகம் என அனைத்தையும் வெறுத்து விலகி வந்த தமயந்தி யின் அன்பின் பலத்தாலும், தன்னுடைய விடா முயற்சி யாலும் போராடி சொந்தமாக ஐந்து ஏக்கர் நிலத்தையும், மோட்டார் கிணறும், தோட்டத்திலேயே அமைந்துள்ள ஓட்டு வீடுமாக மனம் நிறைந்த வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

தமயந்திக்கு வேண்டாத சொந்தம் தனக்கும் வேண்டாம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வந்த நெல்லுச்சாமி தன்னுடைய ஒரே மகனை இன்ஜினியரிங் படிப்பில் சேர்த்து விட்டவுடன் அவர் வெறுத்தாலும் அவருடன் வந்து ஒட்டிக் கொண்டாள் நல்லுச்சாமியின் தங்கை செண்பகம்.

படிப்பே வராத தன் ஒரே மகள் சங்கீதாவை அண்ணன் மகனுக்கு மணம் முடித்து சொந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பிய செண்பகத்தின் ஆசைக்கு நல்லுச்சாமி மறுப்போ எதிர்ப்போ காட்டாமல் இருந்ததே அவருக்குப் போதுமானதாக இருந்தது. அவளும், அவளது மகளும் மனோஜை தங்களது சொத் தாகவே உரிமை கொண்டாடத் தொடங்கி விட்டார்கள். கணவரின் உள்ளம் நோகப் பேசியறியாத தமயந்தியும் அதைத் தடுக்கும் வகை அறியாமல் திகைத்தாள்.



# 4

குமுறும் எரிமலையாக வீட்டிற்குள் நடந்து கொண்டிருந்தான் மனோஜ். அவனை அமைதியாகப் பார்த்த தமயந்தி எதுவும் பேசாமல் சமையல் அறைக்குள் நுழைந்து சாப்பாட்டுத் தட்டுடன் வந்து அதனை மகனின் முன் வைத்தாள்.

''இப்ப நான் சாப்பிடுகிற மூடில் இல்லம்மா. நீங்க ஏம்மா இப்படி இருக்கீங்க? அவ என் முன்னாடியே உங்களை எவ்வளவு மரியாதைக் குறைச்சலாப் பேசுறா பார்த்தீங்களா? இதெல்லாம் யார் கொடுத்த தைரியம்ம..?'' கேட்ட மகனை ஒரு நொடி அமைதியாகப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் உள் அறைக்குள் சென்று விட்டாள் தமயந்தி.

''நான் பேசிக்கிட்டே இருக்கேன். பதில் சொல்லக் கூடத் தோணலியாம்மா.. எதுக்காகம்மா இவ்வளவு பொறுமைசாலியாக இருக்கீங்கம்மா. புழுகூட தன்னோட எதிர்ப்பைக் காட்டுதும்மா. நீங்க அதைவிடக் கேவலமா...''

''பேச்சை விடு மனோஜ். நான் எப்படி இருக்கணும். எப்ப என்னோட எதிர்ப்பைக் காட்டணும் என்பது எனக்குத் தெரியும். இதைப் பத்தியெல்லாம் நினைச்சுகிட்டு உன்னோட படிப்பை பாழாக்கிக்காதே. உன்னுடைய



முன்னேற்றம் மட்டும்தான். உனக்கு முக்கியமாக இருக்கணும். இந்த பிரச்சினையை எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன். நீ முதலில் சாப்பிடு'' கண்டிப்புடன் கூறிக் கொண்டே வந்த தமயந்தி கையில் இருந்த பணத்தை மனோஜின் சட்டைப் பையில் வைத்து விட்டாள்.

''எனக்கெதுக்கும்மா இவ்வளவு பணம். பஸ் பாஸ் எடுத்துட்டேன். ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்கிறதால பீசும் இல்லை. அப்புறம் எனக்கு இவ்வளவு பணம். வேண்டாம்மா...''

அன்னையைப் பார்த்துக் குற்ற உணர்வுடன் கூறியவனின் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தாள் தமயந்தி.

''எனக்கும் நாலு விஷயம் தெரியும் மனோஜ். நீ படிக்கச் சேர்ந்திருக்கிற காலேஜ் பெரிய பெரிய பணக்கார வீட்டுப் பசங்க படிக்கிற காலேஜ். அவங்களுக்குச் சரிசமமாக நீ இருக்க முடியாட்டியும் ஏதோ நம்மால முடிஞ்ச அளவுக்காவது நாமளும் இருக்கணுமில்ல. இந்தப் பணத்தை வெச்சுக்கிட்டு புது டிரஸ் ஏதாச்சும் வாங்கிக்க. அப்புறம் மீதி இருக்கிற பணத்தை கஞ்சத்தனம் பண்ணாம தேவைன்னு நினைக்கிறதை வாங்கிக்க சரியா..'' அன்புடன் கூறிய அன்னையைப் பார்த்துக் கண்கலங்க நின்றாலும் மறுக்க மனம் இல்லை அவனுக்கு.

''சரிம்மா. ஆனால் இதெல்லாம் இன்னும் ஒரே வருசத்திற்குத்தான். கண்டிப்பாக அதற்குப் பின்னால் நம்மோட லைப்பே மாறிடும் பாருங்களேன்'' கூறிக்

கொண்டே சாப்பிட்டு முடித்துக் கிளம்பிய மனோஜின் வேகத்தை மனதிற்குள் ரசித்துக் கொண்டே அமர்ந்து இருந்தாள் தமயந்தி.

வேகமாகக் கிளம்பி வாசலுக்கு வந்து காலில் செருப்பை மாட்டிக் கொண்டிருந்த மனோஜ் வாசலில் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தான். புது பைக்கை ஸ்டாண்டு போட்டு நிறுத்தியபடித் திரும்பிய கணவனின் தோற்றத்தை அந்த வயதிலும் மனதிற்குள் ரசிக்காமல் இருக்க முடியவில்லை தமயந்தியால்.

நடுத்தர வயதில் மனோஜின் அழகுக்கு சற்றும் குறையாத கம்பீரத்துடன், அந்த வயதிற்கே உரிய ஆண்மையுடன் கூடிய அழகுடன் மிடுக்காக வண்டியை நிறுத்தி விட்டுத் திரும்பிய நல்லுச்சாமி, தமயந்தியின் கண்களில் தெரிந்த மின்னலைப் பார்த்து ஒரு நொடி புருவத்தை உயர்த்தி இறக்கினார்.

அவர்களுக்கே உரித்தான பாஷையில் அவர் அப்படிக் கேட்டதில் தமயந்தியின் கன்னங்கள் சிவந்தன. இந்தக் கண்களின் பாஷையில்தான் தமயந்தி நல்லுச்சாமியிடம் தன்னுடைய மனதைப் பறி கொடுத்தாள். பழைய நினைவுகளின் மகிழ்வால் கன்னம் சிவக்க நின்ற தமயந்தியின் தோற்றம் நல்லுச்சாமியின் காதல் உணர்வைத் தூண்டினாலும் தோளுக்கு மேல் வளர்ந்த மகனின் எதிரில் அதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் மெல்லத் தன் தொண்டையைக் கனைத்து தன்னை நிதானப் படுத்திக் கொண்டார்.



''அப்பா... வண்டி புதுசா இருக்கே? யாருடைய வண்டி? அழகா இருக்குப்பா'' இளம் வயதிற்கேயுரிய ஆசையுடன் வண்டியைத் தொட்டுப் பார்த்த மகனைப் பார்த்துப் புன்னகைத்தார் நல்லுச்சாமி.

''யார் வண்டிப்பா? பார் ரிஜிஸ்ட்ரேஷன்னு போட்டிருக்கு? புத்தம் புதுசா இருக்கே!'' வண்டியின் ஹேண்ட் பாரைப் பிடித்து ஓட்டுவதைப் போல் பாவனை செய்த மனோஜின் கரத்தை இழுத்து அதில் வண்டியின் சாவியை வைத்தார் நல்லுச்சாமி.

''உன் வண்டிதான் மனோஜ். என் மகனோட புத்தம் புது வண்டி இது.'' அமைதியாகக் கூறிய தந்தையின் முகத்தை ஆச்சரியம் கலந்த மகிழ்வுடன் பார்த்தான் மனோஜ்.

''என்னப்பா சொல்றீங்க! என்கிட்ட சொல்லவே இல்லையே.''

''சொல்லிட்டுச் செய்தால் சஸ்பென்ஸ் இருக்காதுப்பா. சொல்லாமல் செய்வதில்தான் சந்தோசமே இருக்கு'' கடைசியாகக் கூறிய வார்த்தையை மனைவியைப் பார்த்துக் கொண்டே அழுத்தமாகக் கூறினார் நல்லுச்சாமி. அவரது வார்த்தைகளைப் புரிந்து கொண்ட தமயந்தியின் இதழ்களில் ரகசியப் புன்னகை வந்தது. அதனை ஆசையாகப் பார்த்தவாறே மகனை ஏறிட்டார் நல்லுச்சாமி.

தந்தையின் வார்த்தைகளைக்கூட கவனிக்காத மனோஜின் உள்ளம் முழுவதும் அந்த பைக்கைச்

சுற்றியே இருந்தது. தனக்கே தனக்கென உரிமையான வண்டி அது என்ற சந்தோசத்தில் மனோஜின் கால்கள் தரையில் நிற்கவே இல்லை. அவன் வேகமாக அன்னையைப் பார்த்துவிட்டு வண்டியின் மீது அமர்ந்து அதனை ஸ்டார்ட் பண்ணிவிட்டு தமயந்தியை தலையசைத்து அழைத்தான். புரியாமல் அருகில் வந்த அன்னையை வண்டியில் அமர்த்தி மின்னல் வேகத்தில் ஓட்டிக் கொண்டு போன மகனை கண்களில் நீர் நிறையப் பார்த்தார் நல்லுச்சாமி.

அந்த வண்டிக்கான பணத்தைக் கட்டுவதற்காக கல்லிலும் மண்ணிலும் ஒரு ஆண்டிற்காவது உழைத்தால்தான் அவரால் அந்தப் பணத்தைச் சம்பாதிக்க முடியும். ஆனால் மகனது மகிழ்ச்சி நிறைந்த முகமும், மனைவியின் பெருமை பொங்கிய பார்வையும் அந்த உழைப்பிற்கான தைரியத்தையும், ஊக்கத்தையும் நல்லுச்சாமிக்குக் கொடுத்தது. போன வேகத்தில் திரும்பி வண்டியில் இருந்து அன்னையை இறக்கிவிட்ட மனோஜ் நல்லுச்சாமியின் கைபிடித்து வண்டியில் அமர்த்தி வண்டியைக் கிளப்பினான். மகன் ஓட்ட அவனுக்குப் பின்னால் அமர்ந்து செல்லும் பாதுகாப்பு நிறைந்த நிம்மதி உணர்வை அனுபவித்த நல்லுச்சாமிக்கு அந்த ஜென்மத்தின் உண்மையான பலனைத்தான் அந்த நொடியே முழுமையாக அனுபவித்ததைப் போல் இருந்தது.

''தேங்க்ஸ்ப்பா. நாள் பார்த்து வாங்கியிருந்தால்கூட இவ்வளவு நல்லா வாங்கியிருக்க முடியாது. நல்லா ஸ்மூத்தா இருக்குப்பா. தேங்க்ஸ் அகெய்ன்.''



''இப்படியொரு சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்ததுக்கு நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும் மனோஜ். ரொம்ப நாளைக்குப் பிறகு இன்னிக்குத்தான் உன் முகத்தில் இத்தனை சந்தோஷத்தைப் பார்க்கிறேன்டா. நீ எப்பவும் இப்படிச் சிரிச்சுக்கிட்டே சந்தோசமா இரு மனோஜ். எனக்கு அது போதும்'' மகனின் தோள்களைப் பற்றி நெகிழ்வுடன் கூறினார் நல்லுச்சாமி.



# 5

புத்தம் புது வண்டியில் வந்து இறங்கிய மனோஜிற்கு அந்தக் காலேஜே தன்னைத் திரும்பிப் பார்ப்பதைப் போல இருந்தது. அனைவரும் தன்னைப் பற்றியும் தன்னுடைய புது வண்டியைப் பற்றியுமே பேசுவதைப் போல தோன்றிய அவனுக்கு அந்த சந்தோச மனநிலையுடன் கிளாஸிற்குள் நுழையப்போனவனின் கால்கள் தயங்கி பின் வாங்கியது.

அவனது கிளாஸ் ரூமிற்கு நான்கு கிளாஸ் தள்ளியிருந்த ரூமிற்கு முன்னால் ஒரு கும்பல் ஒரு பெண்ணை வழிமறைத்து நின்றிருந்தது. கல்லூரி திறந்து ஒரு பத்து நாட்களுக்குள் இத்தகைய காட்சிகள் சகஜமான ஒன்றாக இருந்தாலும் அந்தக் கும்பலின் எதிரில் நின்றிருந்த பெண் புதியவளாக இருந்தாள். முதலாமாண்டில் சேர்ந்த

மாணவி என்பது அவள் அவர்களை பயத்துடன் பார்த்ததில் இருந்தே தெரிந்தது.

இளம் மஞ்சள் வண்ண சுடிதாரின் டாப்ஸ் ஒரு குடையாக விரிந்து கணுக்காலுக்கு சற்று மேலே விரிந்திருக்க அந்த டாப்சுக்குத் தகுந்தாற்போல அடர்ந்த பச்சை வண்ண டைட் பேண்ட் அவளது கால்களில் பாந்தமாகப் பொருந்தியிருக்க, மஞ்சளும் பச்சையும் கலந்த வண்ணத்தில் சாலும், கைகளிலும் கழுத்திலும் மின்னும் சிறிய கல் வைத்த நகைகளும் அவள் அழகை மேலும் அதிகமாக்கிக் காட்டுவதை உணராத அழகோடு நின்றிருந்தாள் அவள்.

மனோஜின் கண்களில் மின்னல் வெட்ட அவன் அந்தப் பெண்ணிடம் இருந்து பார்வையை அகற்ற மனம் இல்லாமல் அங்கேயே நின்று விட்டான்.

சந்தன நிறமும், அகன்ற கண்களும், குடை மிளகாய் போன்ற சிறிய அளவான நாசியும், சிவந்த இதழ்களும், சற்றுக் குண்டான கன்னமும், அதிக உயரம் இல்லாமல் பூசினாற் போன்ற உடல் அளவும். இடைதாண்டி நீண்ட கூந்தலை தளர்வாகப் பின்னலிட்டிருந்த பாங்கும் என அவளது ஒவ்வொரு பாகமும் தன் மனதை அசைப்ப தற்காக பிரம்மன் பார்த்துப் பார்த்துச் செதுக்கியதைப் போல அமைந்திருப்பதைத் தவிப்புடன் பார்த்தபடியே இருந்தான் மனோஜ்.

அவன் பார்த்துக் கொண்ட இருந்த போதுதான் அது நிகழ்ந்தது. அவனது வாழ்நாளின் அர்த்தத்தையே புரட்டிப் போட்ட அந்த நொடியை அவன் தவிப்புடனும்,



ஆனந்தத்துடனும் அதன் பின் பலமுறை எண்ணிப் பார்க்கப் போவதை அறியாமலேயே அது நிகழ்ந்து விட்டது.

தன் முன் இருந்த கூட்டத்தினரைப் பார்த்துப் பயத்துடன் நின்றிருந்த ஆராதனா தன் குடை போன்ற இமைகளை உயர்த்தி அவனுக்குச் சற்று தொலைவில் நின்றிருந்த மனோஜைப் பார்த்தாள். அவளது பார்வை யில் தெரிந்த கெஞ்சலைப் புரிந்து கொண்ட மனோஜின் கால்கள் அவனையறியாமலேயே அவள் இருந்த இடத்தை நோக்கி நகர்ந்தது.

ஆராதனாவைச் சுற்றி நின்றிருந்த மாணவர்கள் எல்லாம் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்கள். அவர்கள் அனைவருமே மனோஜின் டிபார்ட்மெண்ட் என்பதால் ஒரு மரியாதையுடனும் நட்புடனும் தங்கள் அருகில் வந்து நின்ற மனோஜைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''தல.. என்ன இதெல்லாம்! புதுசா இருக்கு! ராகிங் நடக்கிற பக்கம் கூட வரமாட்டீங்களே!'' ஆச்சரியத் துடன் கேட்டவர்களை ஏறிட்டுப் பார்க்காமல் ஆராத னாவையே கண் இமைக்காமல் பார்த்தபடி நின்றான் மனோஜ்.

''என்னடா நடக்குது... தனியாப் போற பொண்ணு கிட்ட வம்பிழுத்துக்கிட்டு இருப்பதுதான் ராகிங் பண்றதா?'' கோபத்துடன் கேட்ட மனோஜின் குரலுக்கு மற்ற மாணவர்கள் மரியாதையுடன் மதிப்பளித்ததை ஆச்சரியத்துடன் பார்த்தாள் ஆராதனா.

''வம்பெல்லாம் பண்ணலைண்ணா.. ஏம்மா தாயே நாங்க ஏதாச்சும் வம்பு செய்தோமா? பேர் என்ன.. அட்ரஸ் என்னன்னுதான் விசாரிச்சோம்...''

''அது எதுக்குடா உங்களுக்கு? தெரிஞ்சு நீங்க என்ன பண்ணப் போறீங்க?''

''என்னா தல... ஒரு பாசத்தில கேட்கிறதுதான். இன்னும் நாலஞ்சு வருசத்துக்கு ஒண்ணு மண்ணா ஒரே காலேஜ்ல படிக்கப் போறோம். இதைக்கூட தெரிஞ்சுக் கலேன்னா எப்படிண்ணா?'' குழைவாகக் கேட்டவனின் கன்னத்தில் ஓங்கி அறைவதைப் போல கையை கொண்டு வந்து பின் மெதுவாகத் தடவிக் கொடுத்தான் மனோஜ்.

அவனது செயலின் பொருள் புரிந்து முகம் வெளுக்கப் பின் வாங்கியவனின் பின்னாலேயே அவனது கூட்டமும் ஒதுங்கியது.

அகண்ட விழிகளில் நன்றி மின்னப் பார்த்த ஆராதனாவை அந்த நிமிடத்தில் இருந்து தன் உயிரில் இணைத்துக் கொண்டான் மனோஜ். அதுவரை எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பாராத மனோஜின் இதயம் ஆராதனாவின் கால்களில் தஞ்சம் அடைந்தது.

சொல்லில் அடங்காத மென்மை உள்ளத்தில் நிறைந்து முகத்தில் தெரிய ஆராதனாவைப் பார்த்தான் மனோஜ்.

''அவங்கதான் பேர் என்னன்னுதான் கேட்டிருக் கானுக? பேரைச் சொல்லிவிட்டுப் போக வேண்டியது



தானே?'' மென்மையுடன் கேட்டவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலை குனிந்தாள் ஆராதனா.

''ஆராதனா...'' மெல்லிய குரலில் கூறியவளை புரி யாமல் பார்த்தான் மனோஜ்.

''என் பெயர் ஆராதனா...'' அழுத்தமாக மறுமுறை அவள் கூறிய பின்தான் அவனுக்குப் புரிந்தது.

மெல்லிய புன்சிரிப்புடன் தலையசைத்தவனை கேள்விக் குறியுடன் பார்த்தாள் ஆராதனா. அதன் பொருள் புரிந்து மனோஜும் ஒரு புருவம் உயர்த்தி அவளைப் போலவே கண்களால் கேட்டான்.

அவன் புருவம் உயர்த்தி என்ன என்று கேட்ட விதத்தில் சிவந்த முகத்தை தலை குனிந்து மறைத்துக் கொண்ட ஆராதனாவின் பெண்மை மனோஜைப் பூரிப்படையச் செய்தது. தன்னைப் பார்த்து வெட்கத்தில் சிவந்து நிற்கும் பெண்ணைக் கண்ட எந்த ஆணின் உள்ளத்திலும் தோன்றும் கர்வம் மனோஜின் உள்ளத் திலும் தோன்றியது.

அவன் மிகவும் ஆவலாக ஆராதனாவின் சிவந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்களைச் சுற்றிச் சென்ற அத்தனை பெண்களுமே பொறாமை யுடனும், ஆண்கள் அனைவரும் ஆச்சரியத்துடனும் பார்ப்பதை வியப்புடன் கவனித்த ஆராதனா மறுபடியும் கேள்விக்குறியுடன் மனோஜை ஏறிட்டாள்.

''பரவாயில்லை. வாய் திறந்தே கேட்கலாம். முத்து எதுவும் உதிர்ந்தால் அதை எடுத்து நாள் மாலையாக்கி விற்றுக் கொள்கிறேன்.''

''விற்று விடுவீர்களா?''

''இல்லை இல்லை, தப்பாகச் சொல்லிட்டேன். மாலையாக்கி பத்திரமாக வைத்துக் கொள்கிறேன். நீ கேட்க வந்ததைக் கேளு...''

''இல்ல... ஏன் எல்லோரும் இப்படி அதிசயமாப் பார்க்கிறாங்க? உங்க பேர் என்ன? நீங்க எந்த டிபார்ட்மெண்ட்? நீங்களும் இப்பத்தான் பர்ஸ்ட் இயர் ஜாயின் பண்ணியிருக்கீங்களா? ஆனா... அந்தப் பசங்க உங்களை அண்ணன்னுதான கூப்பிட்டாங்க? அப்படின்னா நீங்க...'' கேட்டுக் கொண்டே போனவளைப் பார்த்து தலைக்கு மேலே கை உயர்த்திக் கும்பிட்டான் மனோஜ்.

''போதும்மா... போதும். நான் என்னமோ உன்னை அவனுக கிட்ட இருந்து காப்பாத்தினதா நினைச்சேன்! அது தப்பு தாயே. உன்கிட்ட இருந்து அவனுங்களைத் தான் காப்பாத்தி இருக்கேன். ஆனா நான் வந்து வசமா மாட்டிக்கிட்டேனே ஆண்டவா...''

''ம்ஹூம்... நான் என்ன...'' எதையோ கூற வந்தவளின் வார்த்தை தன்னைத் தேடி வந்த வைகுந்தனைப் பார்த்தவுடன் நின்று விட்டது.

ஆராதனாவையும் அவளுக்கு எதிரே நின்று கொண்டிருந்த மனோஜையும் பார்த்துக் கொண்டே வேகமாக அவளிடம் வந்த வைகுந்தனின் பார்வை கோபத்துடன் மனோஜின் மேல் பாய்ந்தது.

''என்னடா நடக்குது.. யார்கிட்டே பேசிக்கிட்டு இருக்கன்னு தெரியுமா? அவ என்னோட கஸின்...



வைகுந்தன் கூறிய தொனியில் கோபத்துடன் மனோஜின் தலை உயர்வதைக் கவலையுடன் பார்த்தாள் ஆராதனா.

''வைகுந்த்... என்ன நடந்துதுன்னு தெரியாமல் பேசாதே. அவர் என்னை...'' கூறியவளை அலட்சியத்துடன் பார்த்தான் வைகுந்தன்.

''அவரா! யாரு இவர்தான்... அந்த அவரா! இவனுக்கெல்லாம் மரியாதை கொடுத்துக் கூப்பிட வேண்டிய அவசியம் இல்லை ஆராதனா. நம்ம ஸ்டேட்டஸ் முன்னாடி இவனெல்லாம் நிக்கக்கூட முடியாது. இவனை அவர்.. இவர்... அவருன்னுக்கிட்டு. நீ வா...'' திமிராக தன்னைக் கடந்து ஆராதனாவின் கைப்பற்றி இழுத்துக் கொண்டு போனவனின் முதுகையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த மனோஜின் முகம் அவமானத்தால் கறுத்தது.



## 6

மூன்று வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவம் அது. வைகுந்தனும் அவனுடைய பள்ளித் தோழர்களும் ஒரே காலேஜில் படிக்கும் எண்ணத்தில் லட்சக்கணக்கில் பீஸ் என்ற பெயரில் பணத்தைக் கொட்டிக் கொடுத்து இந்தக் காலேஜில் சேர்ந்திருந்தார்கள்.

பள்ளிப் பருவத்தின் கட்டுப்பாடுகள் இல்லாத கல்லூரிப் பருவத்தில் அடியெடுத்து வைத்திருந்த மிதப்பு அவர்கள் அனைவரின் செயல்களிலும் பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. கார்கோ பேண்ட்டும், காட்டன் சர்ட்டும், கூலிங் கிளாஸுமாக பந்தாவாக வெளிநாட்டுக் கார்களில் வந்து இறங்கிய அவர்கள் அனைவரும் மரத்திற்கடியில் மாநாடு போல ஒரே இடத்தில் நின்று கொண்டு கும்மாளமிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

கல்லூரிக்குள் நுழையும் ஒவ்வொரு மாணவனையும் மாணவியையும் அளவெடுத்துக் கொண்டிருந்த அவர் களின் கமெண்ட்டுக்களைக் கேட்டும் கேட்காதவர்கள் போல அனைவரும் அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் அவர்களைக் கடந்து சென்ற அனைவருமே மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த செல்வந்தர்களின் பிள்ளைகள்தான். ஆனால் கூட்டமாக இருக்கும் இடத்தில் வன்முறை தோன்றும் அபாயம் இருந்ததால் யாரும் அவர்களை எதிர்க்கேள்வி கேட்க முன்வராமல் அமைதியாக சென்று இருந்தார்கள்.

அப்பொழுதுதான் எண்ணெய் வைத்துப் படிய வாரிய தலையும், ஜீன்ஸ் பேண்ட்டும், கட்டம் போட்ட சட்டையும், காலில் சாதாரண செருப்பும், நெற்றியில் விபூதிக் கீற்றுமாக படித்த கிராமத்து இளைஞனின் தோற்றத்துடன் வந்த மனோஜ் அவர்களின் கண்களில் பட்டான்.

பள்ளியிலேயே முதல் மாணவனாக ஏன் மாவட் டத்திற்கே முதல் மாணவனாக வந்த மனோஜிற்கு அந்த



கல்லூரி நிர்வாகம் தானாக முன் வந்து அவன் கேட்ட டிபார்ட்மெண்டில் அவனுக்கு சீட் கொடுத்து, பீஸையும் தன்னுடைய டிரஸ்ட் மூலமாக ஸ்காலர்ஷிப் கொடுத்து தங்கள் கல்லூரியில் மனோஜைச் சேர்த்துக் கொண்டது. படிப்பு தேடித் தந்த பெருமையுடன் தலை நிமிர்ந்து வந்த மனோஜைப் பார்த்த வைகுந்தனின் நண்பர்களின் பார்வையில் அருவெறுப்பு தெரிந்தது.

''என்னடா இது? இவனுங்க எல்லாம் எப்படி இந்தக் காலேஜுக்கு உள்ள வந்தானுக? அய்யய்ய...'' தோளைக் குலுக்கிக் கொண்டு கூறியவனைப் பார்த்த மற்ற நண்பர்கள் 'ஓ'வெனக் கூச்சல் இட்டுச் சிரித்தார்கள்.

''இவன் படிக்கிற இடத்தில் நாமளும் படிக்கிறோம்னு எப்படிடா வெளியில சொல்லிக்கிறது? தப்புப் பண் ணிட்டோமே மச்சான்ஸ்...'' கையில் இருந்த நோட்ஸால் தன் தலையில் அடித்துக் கொண்டான் மற்றொரு நண்பன்.

''இவனுக்கு எப்படிடா இங்க படிக்க சான்ஸ் கிடைச்சிருக்கு? என்னால நம்பவே முடியலியேடா...''

கேட்ட நண்பனை அலட்சியமாகப் பார்த்தான் வைகுந்தன்.

''டேய்... புக்கைக் கரைச்சுக் குடிச்சு மார்க் வாங்கியிருப்பான்டா. அதான்... மெரிட்ல சீட் கொடுத் திருப்பாங்க. இனிமேல் பாரு... இங்க இருக்கிற லெவலுக்கும், படிப்புக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் துண்டைக் காணோம் துணியைக் காணோம்னு ஓடப் போறான்...''

தொடக்கத்தில் தானும் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்து விட்டோம் என்ற பூரிப்பிலும், அன்னை தந்தையின் கனவினை நனவாக்க வேண்டும் என்ற நெகிழ்விலும் அவர்களுடைய பேச்சைக் கவனிக்காத மனோஜிற்கு அவர்கள் அனைவரும் தன்னைப் பற்றித் தான் கேவலமாகப் பேசுகிறார்கள் என்பது தாமதமாகத் தான் புரிந்தது.

எந்தப் பிரச்சினையையும் நேருக்கு நேராக எதிர் கொண்டு சமாளிக்கும் குணத்தை இயல்பாகக் கொண்டு இருந்த மனோஜால் அதற்கு மேல் அவர்களது கேலிப் பேச்சைத் தாங்க முடியவில்லை. அவன் நேராக அந்த நண்பர்களின் கூட்டத்திற்கு எதிராக சென்று நின்று அவர்கள் அனைவரையும் நிமிர்வுடன் பார்த்தான்.

அதுவரை கடந்து சென்ற எவருக்கும் இல்லாத துணிவுடன் தங்களை எதிர்த்து நின்ற மனோஜைப் பார்த்த வைகுந்தனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் அந்த கணம் முதல் மனோஜ் எதிரியாக மாறிவிட்டான். அவர்கள் அனைவரும் குரோதத்துடன் அவனைச் சுற்றி நின்று கொண்டார்கள்.

''என்னைப் பற்றி உங்களுக்கு என்னடா தெரியும்? நான் டிஸ்ட்ரிக் பர்ஸ்ட்... ஸ்கூல் பர்ஸ்ட் தெரியுமா? ஒருவித ஏளனத்துடன் கேட்ட மனோஜைப் பார்த்த வைகுந்தனின் நண்பர்கள் வாய்விட்டுச் சிரித்து விட்டார்கள்.

''டேய் காலேஜ் வந்துட்ட.. இன்னமும் சின்னப் பிள்ளை தனமாப் பேசிக்கிட்டு இருக்க? முதல்ல நாங்க



எல்லோரும் யாருன்னு தெரியுமா உனக்கு? எங்க எல்லாருடைய ஸ்டேட்டஸ் என்னன்னு தெரியுமா உனக்கு? எங்க ஏரியாவுக்குள் நுழையும் தைரியமாவது இருக்கா உனக்கு? போடா போய் வந்த வேலையை மட்டும் பார்... போ...'' வைகுந்தன் கையை நீட்டி 'போ' என்று சொன்ன ஸ்டைலில் அவனைக் கட்டிக் கொண்டு சிரித்தது அவனது நண்பர்கள் கூட்டம்.

''தெரியாதுங்க... எனக்கு நீங்க எல்லாம் யாருன்னு தெரியாது. தெரிஞ்சுக்க வேண்டிய அவசியமும் இல்லை,. ஆனால் நீங்க யாராக இருந்தாலும், உங்க ஸ்டேட்டஸ் என்னவாக இருந்தாலும் அதெல்லாம் இந்தக் காலேஜ் காம்பவுண்டுக்கு வெளியிலதான். இங்க நானும் ஸ்டூடண்ட். நீங்களும் ஸ்டூடண்ட். எல்லோரும் ஒண்ணுதான் ஒரே ஜாதிதான்..'' மனோஜ் அழுத்தம் திருத்தமாகக் கூறிய விதத்தில் எதிரணியினரின் சிரிப்பு நின்றது. அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஸ்டூடண்ட்டா இருந்தா.. நீயும் நாங்களும் ஒண்ணாகி விடுவோமா? நாங்க நாங்கதான்... நீ நீதான். எங்க பக்கத்தில்கூட உன்னால வர முடியாது. பேசாமல் போயிடு...'' கூறிய வைகுந்தனை நேராகப் பார்த்துக் கொண்டே நின்றிருந்த இடத்தில் இருந்து ஒரு இன்ச் கூட அசையாமல் நின்றிருந்தான் மனோஜ்.

''சரிங்க... நான் நானாகவே இருந்து விட்டுப் போகிறேன். ஆனால் உங்க பக்கத்தில் கூட வர முடியாதுன்னு நீங்க எப்படிச் சொல்ல முடியும்? நான் உங்களையும் தாண்டி உயர்ந்த இடத்துக்குப் போய்விட்டால்? அப்ப என்ன செய்வீங்க...'' சவால் விடும் தொனியில்

கூறியவனை எதிர்க் கேள்வி கேட்க முடியாமல் திகைத்து விட்டான் வைகுந்தன்.

ஒரு கிராமத்து இளைஞனிடம் இப்படி ஒரு தைரியத் தையும் தன்னம்பிக்கையையும் அவன் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

''சரிடா நல்லவனே... போ. போய் உயரத்துக்கு வந்து காட்டு. அதற்குப் பின்னால் பேசிக்கலாம். இப்ப எங்க மூடைக் கெடுக்காமல் இடத்தைக் காலி பண்ணு'' அதற்கு மேல் அங்கு அவன் இருப்பதைக் கூட லட்சியம் பண்ணாமல் நண்பர்களுடன் கிளாஸிற்குக் கிளம்பி விட்டான் வைகுந்தன்.

ஆனால் அவர்களிடம் முதல் நாள் போட்ட சவாலில் ஜெயிப்பவனைப் போல அடுத்து வந்த அனைத்துப் பரீட்சைகளிலும் மனோஜ்தான் முதல் இடம் பிடித்தான்.

கதை, கவிதை, கட்டுரை, நடனம், விளையாட்டு என்று எல்லாத் துறைகளிலும் வைகுந்தனின் அணிக்கு எதிராக களம் இறங்கி வெற்றி பெற்றான் மனோஜ்.

கல்லூரியின் மாணவர் தலைவன் போட்டியிலும் வைகுந்தனின் நண்பனைத் தோற்கடித்து ஒவ்வொரு வருடமும் மாணவர் தலைவனாகத் தொடர்ந்து ஜெயித்துக் கொண்டிருந்தான் மனோஜ்.

வைகுந்தனுக்கும் மனோஜிற்கும் இடையில் இருந்த போட்டி மனப்பான்மை அந்தக் கல்லூரியில் படித்த அனைத்து மாணவர்களுக்கும் அறிந்த ஒன்றாக இருந்தது.

ஆனால் தன் மனம் கவர்ந்த பெண்ணிற்குப் போட்டி யாக வைகுந்தன் வந்து நிற்பான் என்பதை மனோஜ் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.





# 7

''இன்னமும் குழந்தை என்று நினைப்பா உனக்கு? காலேஜ் வந்துட்ட... யாரிடம் எப்படிப் பழகுவதுன்னு கூட உனக்குத் தெரியாதா ஆரா.. நான் உன்னைப் புத்திசாலின்னு நினைச்சேன..'' இவன் தன்னை எதற்காக இப்படித் திட்டிக் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் கீண்களில் கண்ணீர் படர அவனுடன் நடந்து கொண்டிருந்தாள் ஆராதனா.

தன் போக்கில் திட்டிக் கொண்டே வந்த வைகுந்தன் ஆராதனாவின் முகத்தைப் பார்த்துவிட்டு திட்டுவதை நிறுத்திக் கொண்டான்.

''சாரிடா.. சாரி. அவன் ஒரு பொறுக்கி ஆரா. அவன்கிட்டப் போய் நீ பேசிக்கிட்டு இருந்தியா. அதான் சற்றுக் கோபத்தில் திட்டிட்டேன். சாரி.. ஓகேவா?'' அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் எண்ணம்கூட இல்லாமல் காதில் வைத்துக் கேட்டவனை சிரிப்புடன் பார்த்தாள் ஆராதனா.

''உன்னோட பிறவிக்குணம் மாறவேயில்லை முகுந்த். விட்டால் தலையில் ஏறி உட்கார்ந்துக்குவ. இல்லாட்டி காலில் விழுந்து கதறுவ. சரியான எமகாதகன் நீ!'' தன் தலையை மெல்லியதாக ஆட்டிக் கொண்டே பேசிய வளை அன்புடன் பார்த்துச் சிரித்தான் வைகுந்தன்.

''சரி ஆரா.. இதுதான் உன்னோட கிளாஸ் ரூம். நீ போ.. ஆமா.. உன்னோட வாயாடி பிரண்டை இன்னும் காணோமே? காலேஜ் வருவாளா.. இல்லை மூக்கைப் பிடிக்கத் தின்னுட்டு வீட்டிலேயே தூங்குவாளா?''

''அதெல்லாம் அவ வந்திடுவா. நீ உன்னோட கிளாஸ் ரூமுக்குப் போ. இனி நான் பார்த்துக்கிறேன்... பை...''

வைகுந்தனுக்குக் கையசைத்துவிட்டு தன் இடத்தைத் தேடிச் சென்று அமர்ந்தவளைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது மனோஜின் பார்வை.

ஆராதனாவைக் கண்டது முதல் அவன் பார்வையில் தெரிந்த மயக்கம் காணாமல் போய் பொறாமை உணர்வு அவன் பார்வையில் குடி கொண்டிருந்தது. அவள் வைகுந்தனிடம் உரிமையாகப் பேசிச் சிரித்ததை தாங்கிக் கொள்ள முடியாதவனாக கண்கள் சிவக்க ஆராதனாவைப் பார்த்துக் கொண்டிருந்தான் மனோஜ்.

''ஹாய்டி.. ஒரு வழியா கிளாஸ் ரூமைக் கண்டு பிடிச்சிட்டேன் போ.. பெரிய ரோதனைடி. இதில இந்த சீனியர் பசங்க வேற. ராகிங் பண்றேன் பேர்வழின்னு மொக்கைப் போடறானுங்க. இவனுங்களுக்கெல்லாம் ராகிங் எப்படிப் பண்ணனும்னுகூடத் தெரியலைடி. கொஞ்சநாள் போகட்டும். இந்த ராதிகா எடுக்கிற டியூஷன்ல இவனுக எல்லோரும் தெறிச்சு ஓடப் போறானுக பாரு...'' அடை மழை பொழிவதைப் போல தொடர்ச்சியாக பேசிக் கொண்டே போன ராதிகா வந்து அருகில் அமர்ந்த பிறகுதான் ஆராதனாவிற்கு தைரியமே வந்தது.

அவள் ராதிகாவின் கையை இறுக்கமாகப் பற்றித் தன் மடியில் வைத்துக் கொண்டாள். ஆராதனாவின் பிடிக்குள்



தன் கையைக் கொடுத்து ராதிகாவின் பார்வை ஆதரவாக ஆராதனாவை வருடியது.

''என்னப்பா... பயந்துட்டியா? நான்தான் நாம ரெண்டு பேரும் ஒண்ணா காலேஜ் வரலாம்னு சொன்னேனே? நீதான் கேட்காம அந்த வை...குந்தனோட வந்துட்ட. எங்க அந்த வீராதி வீரன்? உன்னை இப்படிப் பயப்பட விட்டுட்டு அவர் எங்க போனார்?'' கேலியாகக் கேட்பதைப் போல கேட்டாலும் அவள் கேள்விக்குள் ஒரு அக்கறை ஒளிந்துள்ளதை ஆராதனா அறிந்து கொண்டாள்.

''வைகுந்த் எலெக்ட்ரிகல் டிபார்ட்மெண்டுப்பா. அவனோட கிளாசுக்குப் போயிட்டான். நாமதான் கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்ட்டாச்சே...''

''ஆமாமில்ல. சரி விடு. பையன் படிச்சுட்டுப் போறான். நாம நம்ம வேலையைப் பார்ப்போம்...'' கூறிய ராதிகாவின் பார்வை உடன் படிக்கும் மற்ற மாணவ, மாணவியரை அளவெடுக்கத் தொடங்கியது.

ஆனால் மற்ற அனைவரின் பார்வையும் ஆராதனாவை அடிக்கடி நோட்டமிடுவதை வியப்புடன் பார்த்தாள் ராதிகா.

''என்னப்பா இது. வந்த முதல் நாளே உனக்கு இத்தனை ஃபேன்சா? எல்லோரும் உன்னை இப்படிப் பார்க்கறாங்க?''

''அதான்டி எனக்கும் புரியலை. எதுக்காக எல்லோரும் இப்படிப் பார்க்கிறாங்க..'' சங்கடத்துடன் நெளிந்த தோழியை அடுத்தவர் அறியாமல் இடைபற்றி அணைத்துக் கொண்டாள் ராதிகா.

''தெரிஞ்சுக்கிட்டால் போச்சு... வெயிட் பண்ணு...'' மெல்லிய குரலில் ஆராதனாவின் காதில் கூறிவிட்டுத் திரும்பி தன்னருகில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து நட்புடன் சிரித்தாள் ராதிகா.

''ஹாய்.. ஐம் ராதிகா. ஷி இஸ் மை பிரண்ட் ஆராதனா...'' தன்னை நோக்கிக் கரம் நீட்டியவளின் கரத்தை நட்புடன் பற்றிக் கொண்டாள் மற்றவள்.

''ஐம் மஞ்சு.. திஸ் இஸ் சஞ்சனா.. இவ ஏஞ்சலின்.. இவ ராகவி..'' தன்னுடைய தோழிகளையும் அறிமுகம் செய்து வைத்தவளின் பார்வை ஆராதனாவின் முகத்தில் நிலைத்தது.

''நான் ஒண்ணு கேட்கிறேன் மஞ்சு. தப்பாக எடுத்துக்காதே. எதுக்காக எல்லோரும் இவளையே நோட் பண்றாங்க...'' புரியாமல் கேட்ட ராதிகாவை திகைப்புடன் பார்த்தாள் மஞ்சு.

''உங்க பிரெண்டுதான் காலேஜ் வந்த முதல் நாளே பேமஸ் ஆகிட்டாங்களே. இந்த காலேஜோட ஹீரோஸ் ரெண்டு பேர். ஒருத்தர் மனோஜ்.. இன்னொருத்தர் வைகுந்தன். இந்த ரெண்டு பேரும் போட்டி போட்டுக்கிட்டு உங்க பிரண்டைத் தாங்கறாங்களே! அதிலும் மனோஜ் யார்கிட்டயும் நின்னுகூடப் பேச மாட்டார். இன்னிக்கு அவரே மத்த பசங்களைக் கண்டிச்சு விரட்டி விட்டுட்டு உங்களோட பிரெண்டு கிட்ட கடலை போடறார்...'' மஞ்சுவின் குரலில் பொறாமை உணர்வு அப்பட்டமாகத் தெரிந்தது.

''அது சரி மஞ்சு.. நீயும் பர்ஸ்ட் இயர்தானே? இத்தனை டீட்டெய்ல்சும் உனக்கு எப்படித் தெரியும்.



அதுவும் வைகுந்தனும்.. இன்னொருத்தனும் இந்த காலேஜ் ஹீரோக்கள் என்பதெல்லாம் தெரிஞ்சிருக்கு?''

ராதிகாவின் குரலிலும் பொறாமை உணர்வும் கோபமும் தெரிந்தது.

''அதுவா.. எங்க அக்கா இங்கதான் படிக்கிறா. வைகுந்தனோட கிளாஸ்மேட். அவகூட நான் இங்க அடிக்கடி வருவேன். சைட் அடிக்கத்தான்... அதனால எனக்கு இங்க இருக்கிற அத்தனை பேரோட டீடெய்ல்சும் தெரியும்...'' அலட்சியமாகக் கூறியவளை நிஜமாகவே பொறாமையுடன் முறைக்கத் தொடங்கிய ராதிகாவை வலுக்கட்டாயமாகத் தன்னை நோக்கித் திருப்பினாள் ஆராதனா.

''இவ என்ன பெரிய ரதின்னு நினைச்சுக்கிட்டாளா? வைகுந்தனைப் பத்தி எல்லாம் பேசுறா.. கொன்னுடுவேன் ஆரா.. சொல்லி வை.'' பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பிய ராதிகாவைப் பார்த்த ஆராதனாவிற்கு சிரிப்பு வந்தது.

புன்சிரிப்புடன் தன்னைப் பார்த்த ஆராதனாவைப் பார்த்த பிறகுதான் தான் உளறி விட்டது ராதிகாவுக்கு புரிந்தது. அவள் வெட்கத்துடன் முகம் திரும்பிக் கொண்டாள்.



# 8

அன்று கல்லூரி திறந்த முதல் நாள் என்பதால் வகுப்புக்கள் எதுவும் நடைபெறவில்லை. மாணவர்கள்

அனைவரும் ஒருவருடன் ஒருவர் அறிமுகம் ஆகிக் கொள்வதும், நண்பர்கள் ஒன்று சேர்ந்து அரட்டை அடிப்பதுமாக பொழுது ஜாலியாக் கழிந்தது.

மதிய உணவு இடைவெளியில் வைகுந்தன் மறுபடியும் ஆராதனாவைத் தேடி வந்தான். வந்தவனின் பார்வை ஆராதனாவைக் கடந்து ராதிகாவை அளவிட்டது. சுருள் முடியுடன் செதுக்கிய சிலையாக, இளம் ரோஜா வண்ணச் சுடிதாரில் தானும் ஒரு ரோஜாவாகக் காட்சியளித்த ராதிகாவை ஆசையுடன் பார்த்தான் வைகுந்தன்.

என்றுமே வைகுந்தனின் பார்வைக்குப் பதில் பார்வையை உடனடியாக வழங்கிவிடும் ராதிகா அன்று அவன் வந்து சில நிமிடங்கள் ஆகியும் அவன் பக்கமாக திரும்பியும் பார்க்காமல் அமர்ந்திருந்ததைப் பார்த்து ஏமாற்றத்துடன் புருவம் சுளித்தான் வைகுந்தன்.

''ஆரா.. உன் பிரண்ட் என்ன தவம் பண்ணிக்கிட்டு இருக்காளா? நான் வந்ததைக்கூடக் கவனிக்காமல் ஒரே சிந்தனை மயமா இருக்காளே?''

''ஆரா.. உன்னைப் பார்க்கத்தானே வந்தார்? வந்த வேலையை மட்டும் பார்த்துவிட்டு சீக்கிரமாக இடத்தைக் காலி பண்ணச் சொல்லு. வெட்டியாக இங்க நின்னுக்கிட்டு சீன் காட்ட வேணாம்'' கூறியவளின் பார்வை தன் அருகில் அமர்ந்து வைகுந்தனை விழுங்கி விடுபவளைப் போலப் பார்த்துக் கொண்டு இருந்த மஞ்சுவை எரித்தது.



''என்னது சீன் போடுறேனா? ஹலோ.. இங்க பாரு'' ராதிகாவின் முன் விரல் சொடுக்கி அழைத்தான் வைகுந்தன்.

''ஆரா... என் பொறுமைக்கும் எல்லை இருக்கு. உன் வைகுந்தன் கிட்ட சொல்லி வை. நான் பொறுமையிழந் தேன்னா அப்புறம் ராட்சஸியா மாறிடுவேன். தெரியும்ல...'' கேட்டுக் கொண்டே திரும்பியவளின் அருகில் முகத்தோடு முகம் உரசும் அளவில் அமர்ந்திருந்த வைகுந்தன் சிரித்தான்.

''நீ எப்பவுமே ராட்சசிதானே! ஆனால் அழகான ராட்சசி...'' ரசனையுடன் முணுமுணுத்தவனை அதே ரசனையுடன் ரசித்தாள் ராதிகா.

''என்ன உன் பிரச்சினை? இப்ப எதுக்காக இப்படி பொறிஞ்சி தள்ளிக்கிட்டு இருக்க?''

''ம்ம்ம்? காரணம் வேணுமா உங்களுக்கு? கொஞ்சம் அந்தப் பக்கம் திரும்பிப் பாருங்க. நீங்க கேட்ட காரணம் ஒரு ஐம்பது கிலோவில் உங்களை முழுங்குவது போல பார்த்துக்கிட்டு இருக்கு...'' அவள் காட்டிய திசையில் அமர்ந்திருந்த மஞ்சுவை நமுட்டுச் சிரிப்புடன் பார்த்து விட்டுத் திரும்பி ராதிகாவின் தலையில் செல்லமாகக் கொட்டினான் வைகுந்தன்.

''நீ பொறாமைப்படுறதுக்கு வேற ஆளே கிடைக்கலியா? போயும் போயும் அந்த சிம்பன்ஸிதான் கிடைச்சுதா? ஆனாலும் நீ என்னை இவ்வளவு மட்டமா நினைக்கக் கூடாதும்மா.'' சலிப்புடன் வைகுந்தன் கூறிய விதத்தில் கோபம் மறைந்து சிரித்து விட்டாள் ராதிகா.

அவள் கோபம் மறைந்து சிரிப்பதைப் பார்த்தபடியே மெல்லிய குரலில் வம்பிழுத்த வைகுந்தனுக்கு ராதிகாவும் அதே மெல்லிய குரலில் பதில் அளித்துக் கொண்டிருக்க அவர்கள் இருவருக்கும் இடைஞ்சலாக அங்கே அமர விரும்பாத ஆராதனா மெதுவாக அங்கிருந்து எழுந்து வகுப்பறையை விட்டு வெளியே வந்து நடக்க ஆரம்பித்தாள்.

ஏனோ ஆராதனாவின் மனதில் ஒரு தனிமை உணர்வு தலை தூக்கியது. வைகுந்தனையும் ராதிகாவையும் அவள் பொறாமையுணர்வுடன் பார்க்காவிட்டாலும் தனக்கு நெருக்கமான இருவருக்குமே அந்த நிமிடத்தில் தான் தேவையற்றவளாக மாறி விட்டோமோ என்ற எண்ணம் ஆராதனாவின் மனதில் அவளை அறியாமல் தலை தூக்கியது.

'ச்சே.. என்ன இது? அவங்க ரெண்டு பேருடைய சந்தோசம்தானே எனக்கு முக்கியம். அதை விட்டுவிட்டு இப்படியொரு நினைப்பா. இப்படியெல்லாம் நினைக்கக் கூடாது... தப்பு.' தனக்குத் தானே அறிவுறுத்தியவளாய் தலை குலுக்கி அந்த எண்ணத்தை மாற்ற முயன்ற ஆராதனாவின் அருகில் அந்தக் குரல் கேட்டது.

''நான் உன்னை அறிவாளின்னு நினைச்சேனே? ஒரே நாளில் உன்னை இந்தக் காலேஜ் பைத்தியக்காரியாக ஆக்கி விட்டதா! ஐயோ பாவம்'' சிரிப்புடன் கூடிய குரல் வந்த திசையை அதிர்ந்து பார்த்தாள் ஆராதனா.

காற்றில் கலைந்த முடியை கைகளால் கோதிக் கொண்டு முகத்துடன் கண்ணும் சேர்ந்து சிரிக்க



அவனைப் பார்த்துக் கொண்டிருந்த மனோஜைப் பார்த்தவுடன் ஆராதனாவுடன் உள்ளத்தில் ஆயிரம் தாமரை மலர்கள் மலர்ந்து சிரித்தது.

''நீங்களா!'' மனோஜ் அவளைப் பைத்தியம் என்று கூறியதைக் கூட மறந்து ஆச்சரியம் கலந்த ஆனந்தத் துடன் கேட்ட ஆராதனாவின் மலர்ந்த முகத்தைக் கண்ட மனோஜின் கண்கள் விரிந்தது.

''நீ ரொம்ப அழகு ஆராதனா. நீ மட்டும் இல்லை. உன்னோட பெயரும்கூட அழகுதான். உனக்குப் பொருத்தமான பெயர்'' அவளது முகம் பார்த்து, கண்களை நேராகப் பார்த்துக் கூறிவிட்டு அதற்கு மேல் அங்கு நிற்காமல் வேகமாக நடந்து விட்டான் மனோஜ்.

முதல் முறையாக தான் ரசிக்கும் ஆண் மகன் தன்னை அழகி என்று கூறியதில் மெய்மறந்து அதிர்ச்சியுடன் நின்று விட்டாள் ஆராதனா.

ஆராதனாவிற்கு தன்னுடைய அழகைப் பற்றிய கர்வம் என்றுமே இருந்ததில்லை. சொல்லப் போனால் தனது அழகைப் பற்றி அவள் எண்ணிக்கூடப் பார்த்த தில்லை. அவளைப் பொறுத்தவரையில் கைக்குக் கிடைக்கும் உடையை அணிந்து கொண்டு பொட்டு வைக்க மட்டும் கண்ணாடியைப் பார்க்கும் வகையான பெண் அவள்.

ஆராதனாவின் வாழ்நாளிலேயே முதல் முறையாக அவள் அன்று அணிந்திருந்த உடை தனக்குப் பொருத்த மாக இருக்கிறதா என்று கவலை கொண்டாள். தலைமுடி

கலைந்திருக்கிறதோ என்ற கவலையில் வேகமாக தலையைத் தடவி முடியினை சீர்படுத்திக் கொண்டாள். ஏனோ தானோவென மேலே போட்டிருந்த சுடிதாரின் ஷாலை பிறர் அறியா வண்ணம் அழகாக மாற்றிப் போட்டுக் கொண்டாள். தன்னுடைய செயல்கள் எல்லாம் அவளுக்கே பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலும் மனதின் பரபரப்பை மறைக்க இயலாமல் திகைத்து நின்றாள் ஆராதனா. அவளது கண்கள் மனோஜ் சென்ற திசையை தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தது.

ஆராதனாவின் பார்வைக்காக எதிர்பார்த்துக் காத்து நின்றவளைப் போல் ஒரு தூண் மறைவில் இருந்து வெளிப்பட்டு அவளைப் பார்த்துப் பிறர் அறியா வண்ணம் சிரித்தான் மனோஜ்.

மனோஜை அப்படியொரு மறைவில் இருந்து எதிர்பார்க்காத ஆராதனா வெட்கத்துடன் அவனைப் பார்த்து விட்டு வேகமாக வகுப்பறைக்குள் சென்று விட்டாள்.

அப்பொழுதுதான் தங்களுடைய பேச்சினை முடித்து வைகுந்தனும் ராதிகாவும் எழுந்து ஆராதனாவின் அருகில் வர ஆராதனா வேகவேகமான பெருமூச்சுக் களால் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள்.



# 9

தன் முன் இருந்த சாப்பாட்டைத் தொட்டுக்கூடப் பார்க்காதவனாக தட்டையே வெறித்துப் பார்த்தவாறு



அமர்ந்து இருந்த மனோஜை கேலியாகப் பார்த்தது அவனது நண்பர்கள் குழு. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வாய்க்குள்ளேயே சிரித்துக் கொண்டார்கள்.

''பால் இருக்கும்... பழம் இருக்கும்... பசி இருக்காது...''

''ஓஹோ...'' ஒருவன் பாட மற்ற அனைவரும் அவனைத் தொடர்ந்து கோரசாக குரல் எழுப்பினார்கள்.

அவர்களது சத்தத்தில் சிந்தனையில் இருந்து விடுபட்ட மனோஜ் எதுவும் பேசாமல் சாப்பிட ஆரம்பித்தான்.

''ஏன் மச்சி.. நான் ஒரு கதை சொல்றேன். உனக்குப் புரியுதான்னு சொல்லேன்...'' ஒருவன் கூற மற்றவன் சுவாரசியமாக அவனது முகத்தைப் பார்த்தான்.

''சொல்லு மச்சி.. சொல்லு. உன் கதையைக் கேட்டுத் தான் நான் சாப்பாட்டைக்கூடத் தொடாமல் காத்திருக் கேன். சொல்லு.''

''ஒரு ஊரில் ஒரு சிங்கம் இருந்துச்சாம்.''

''ம்ம்ம்...''

''அது மேல எல்லோருக்கும் ரொம்பப் பயமாம்.''

''ம்ம்ம்?''

''ஆனா அந்த சிங்கத்துகிட்டே ஒரே ஒரு புள்ளி மானுக்கு மட்டும் பயமே இல்லையாம்.''

''உன் கதையில் ஒரு திருத்தம் மச்சி. அது மான் இல்லை. மயில்.''

''சரிடா. அப்படியே வெச்சுக்குவோம். மயில்.. அந்த மயிலுக்கு மட்டும் சிங்கத்துக்கிட்ட பயமே இல்லை யாம்.''

''ம்ம்ம்?''

''இந்தச் சிங்கமும் அசிங்கம் இல்லாம அந்த மயில் கிட்டப் போய் வழிஞ்சுக்கிட்டே நின்னுதாம்.''

''போதும் மச்சி நிறுத்திக்க. உன் கதையோட போக்கு எனக்குப் புரிஞ்சிடுச்சு. இதுக்கும் மேல நீ புட்டுப்புட்டு வெச்சேன்னா.. அது நம்ம சிங்கத்துக்கும் அசிங்கமா ஆகிடும். அதனால.. ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்.. அண்டு யூ வில் கண்டினியூ யுவர் ஒர்க்.''

''எந்த ஒர்க்கைடா சொல்றே... நான் இப்ப எதை கண் டினியூ பண்ண?''

''தின்னுற வேலையைத்தான் சொல்றேன் மச்சி. நாலு வருசமா நீ அதை மட்டும்தான் பண்ணிக்கிட்டு இருக்க? அதனால அந்த வேலையைக் கவனி..'' வாயை மூடிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தவனைப் பார்த்துச் சிரித்த நண்பர்களைப் பார்த்து தானும் சிரித்தான் மனோஜ்.

சரியாக அதே நேரத்தில் வைகுந்தனுடன் சிரித்துக் கொண்டே கேண்டீனுக்குள் நுழைந்தாள் ஆராதனா. ஒருபுறம் ஆராதனாவும் மறுபுறம் ராதிகாவும் இணைந்து வர இருவரிடமும் பேசிக் கொண்டே வந்த வைகுந் தனைப் பார்த்து மனோஜின் சிரிப்பு நின்றது.

அவன் வைகுந்தனுடன் சிரித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்த ஆராதனாவை முறைத்துப் பார்த்தான்.



''மச்சி.. அந்தப் பொண்ணு நந்தன் கிரானைட்ஸ் ஓனர் நந்தகுமாரோட ஒரே பொண்ணு.''

''அதுக்கென்னடா இப்ப?'' தன்னிடம் கூறியவனிடம் எரிச்சலுடன் கேட்டான் மனோஜ்.

''இல்லடா... அந்த வைகுந்தனோட சொந்த மாமா பொண்ணுதான் அது. அதைத்தான் சொல்ல வந்தேன்.''

''இருக்கட்டும் போகட்டும். அதை எதுக்காகடா என்கிட்ட சொல்ற?''

''டேய் மனோஜ். நான் சொல்வது புரியாத மாதிரி நடிக்காதேடா. சொந்த அத்தை பையன் வைகுந்தன். கோடீஸ்வரிக்கு ஏத்த கோடீஸ்வரன். ஆனா பார்க்க நல்லாத்தான் இருக்கான்...'' அதற்கு மேல் பேச விடாமல் நண்பனைப் பார்வையால் தடுத்த மனோஜின் கை முஷ்டி இறுகியதை கவலையுடன் பார்த்தார்கள் மற்றவர்கள்.

''மனோஜ்...'' எரிச்சலை விழுங்கிக் கொண்டு பயத் துடன் பார்த்தவனை முறைத்துப் பார்த்தான் மனோஜ்.

''என் கண் முன்னாடி நிக்காதே விகாஸ். நான் ஏதாச்சும் பண்ணி விடுவதற்கு முன்னால இங்கிருந்து போய்விடு. என்னைக் கொலைகாரனா மாத்தி விடாதே போ'' அடிக்குரலில் சீறியவனை சமாதானம் செய்யும் வகையறியாம எழுந்து சென்று விட்டான் விகாஸ்.

''மனோஜ்...''

''யாரும் என்கிட்ட எதுவும் பேச வேண்டாம்டா. விகாஸ் சொல்வதைப் போல நான் யார்கிட்டயும்

வழிஞ்சுக்கிட்டு நிக்கலை. கொஞ்ச நேரம் என்னைத் தனியா விட்டுட்டுப் போச்சுடா. ப்ளீஸ்...'' மனோஜின் முகம் பார்த்த மற்ற நண்பர்கள் எதுவும் கூறாமல் அமைதியுடன் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

நண்பர்கள் சொன்ன அத்தனை வார்த்தைகளும் உண்மைதான் என்பதை மனோஜின் உள்ளம் உணர்ந்திருந்தாலும் அவனால் அவனது எண்ணங்களையும் மனதினையும் அடக்க முடியவில்லை. என்னதான் மனோஜ் முயற்சி செய்தாலும் அவனது உள்ளம் ஆராதனாவின் பின்னால் செல்வதை அவனால் தடுக்க முடியவில்லை.

அன்று காலை அவன் ஆராதனாவைப் பார்த்த நொடி முதல் மனோஜின் எண்ணம் முழுவதையும் ஆராதனாவின் நினைவுகளே ஆக்கிரமித்துக் கொண்டது. அவளை அன்றுதான் முதல் முறையாகப் பார்த்தோம் என்பதே மனோஜிற்கு மறந்து போனது. காலம் காலமாக ஆராதனாவுடன் வாழ்ந்தவனைப் போல் உணர்ந்தான் மனோஜ்.

மயிலிறகாக தன்னை வருடிய, தாலாட்டிய ஆராதனாவின் நினைவுகளை தன்னை அறியாமலேயே விரும்பத் தொடங்கியிருந்தான் மனோஜ்.

ஆராதனா வைகுந்தனின் உறவு என்பதையும் கோடீஸ்வரி என்பதையும் மனோஜ் அறியாமல் இல்லை. அன்று காலையில் இருந்து மதியம் வரை இருந்த குறுகிய காலத்திற்குள் இந்த எண்ணம் லட்சம் முறை அவனது எண்ணத்தில் தோன்றி உள்ளத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.



அந்த அலைக்கழிப்பின் வலி தாங்க முடியாமல் தான் வகுப்பு முடிந்தவுடன் ஆராதனாவின் வரவிற்காக அவளது வகுப்பறையின் எதிரில் வந்து காத்து நின்றான் மனோஜ். ஆராதனாவின் முகத்தை ஒரு நொடி பார்த்தாலே போதும் என்ற ஆவலுடன் வந்து நின்ற அவனைப் பார்த்தவுடன் ஆராதனா கன்னம் சிவக்க வெட்கியதைக் கண்டவுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள மனோஜால் முடியவில்லை. தன் மனதில் தோன்றியதை அவளிடம் கூறிவிட்டு வேகமாகத் திரும்பி வந்து விட்டான் அவன்.

ஒரு வேகத்தில் மனதில் நினைத்ததைக் கூறி விட்டாலும் அதனை ஆராதனா தவறாக எண்ணி விட்டாளோ என்ற பரிதவிப்பில் அவனால் நிம்மதியாக திரும்பிப் போக முடியாமல் மறைந்து நின்று அவளைப் பார்த்தான் மனோஜ். ஆனால் அவன் பயந்ததற்கு மாறாக ஆராதனா ஆவலுடன் தன்னைத் தேடியவுடன் மனோஜிற்கு உலகமே தலைகீழாக மாறி விட்டதைப் போல் இருந்தது. அந்த சந்தோசமான மனநிலையைக் கெடுப்பதைப் போல நண்பர்கள் அறிவுரை கூறியதைக் கேட்ட மனோஜின் உள்ளம் மறுபடியும் குழம்பத் தொடங்கியது. அவன் கேண்டீனிற்குள் நுழைந்த ஆராதனாவிற்கு முதுகைக் காட்டியபடி முகம் மறைத்து அமர்ந்து கொண்டாள்.

ஆராதனா பேசுவது யாரிடம் வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் அவளது குரலைக் கேட்பது ஒன்றுதான் மனோஜிற்கு இன்பமாகத் தோன்றியது.

ஆராதனா யாருடைய சொந்தமாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் அவளது நிலவு முகத்தைப் பார்ப்பது ஒன்றையே புண்ணியமாக நினைத்தான் மனோஜ்.

மனம் முழுவதும் ஆராதனா.. ஆராதனா.. என்று ஆட்டம் போட அந்த ஆட்டத்தின் வேகத்தைத் தாங்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான் மனோஜ். எவ்வளவு நேரமாக அப்படி அமர்ந்திருந்தானோ அவனுக்கே தெரியாது. தன்னிலை மறந்து அமர்ந்திருந்தவனின் அருகில் வந்து அமர்ந்து அவனைத் தொட்டு உலுக்கினான் விகாஸ்.



# 10

கனவில் இருந்து விழித்துக் கொண்டவனைப் போல திடுக்கிட்டு விழி திறந்தான் மனோஜ். ஒரு நிமிடம் தான் எங்கே இருக்கிறோம் என்பதையே அறியாதவனாக முழித்தவன் பின் மெதுவாக சூழ்நிலை உணர்ந்து இயல்பு நிலைக்குத் திரும்பினான்.

நண்பனின் முகத்தையே அமைதியாகப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்த விகாஸ் எழுந்து சென்று கையில் இரண்டு கூல்டிரிங்க்ஸ் பாட்டிலுடன் திரும்பி வந்து ஒன்றினை மனோஜின் கையில் திணித்தான்.



தொண்டை வறண்டு பல நாட்களாக தண்ணீரையே அருந்தியிராதவனைப் போல தாகத்துடன் கூல்டிரிங்சை ஒரு நொடியில் காலி பண்ணிவிட்டு வைத்த மனோஜை பரிதாபமாகப் பார்த்தான் விகாஸ்.

''இந்தா.. இதையும் குடி..'' தன் கையில் இருந்த மற்றொரு பாட்டிலையும் தன்னருகில் வைத்த விகாசைப் பார்த்து மறுப்பாகத் தலையசைத்தான் மனோஜ்.

''சாரிடா விகாஸ்.. வெரி வெரி சாரி..'' நண்பனின் முகம் பார்க்கத் தயங்கியவனாகத் தலைகுனிந்த மனோஜை கூர்ந்து பார்த்தான் விகாஸ்.

''நான் உன் பிரெண்டுடா. என்னைத் திட்டவும் ஏன்.. அடிக்கவும் கூட உனக்கு முழு உரிமையும் இருக்கு.''

''..........''

''ஆனால் மனோஜ். அதைப் போல எனக்கும் உன்னிடம் உரிமை இருக்குல்ல?''

''நிச்சயமாகடா.''

''அதனால்தான் நான் உனக்கு அட்வைஸ் பண்ணினேன் மனோஜ். அதை நீ தவறா நினைச்சாலும் நான் மறுபடியும் அதைத்தான் செய்வேன்...''

''சாரிடா விகாஸ்...''

''ச்சு.. அதை விடு மனோஜ். இப்ப நான் சொல்ல வந்ததே வேற. மனோஜ்.. நான் சொல்வதைக் கேளுடா. நாங்க எல்லாம் எங்க அப்பாவோட செல்வாக்குல.. அந்த அந்தஸ்தை காட்டுவதற்காக.. பெருமைக்காக படிக்க

வந்தவங்கடா. நாங்க படிச்சாலும் படிக்கலேன்னாலும் எங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. படிப்பை முடிச்சதும் எங்க அப்பாக்களோட பிஸினெஸ்களை பொறுப் பேத்துக்கிட்டு நிம்மதியாக வாழ்க்கையில் செட்டிலாகி விடுவோம். ஆனால் நீ அப்படி இல்லை. உன் படிப் பையும் முன்னேற்றத்தையும் நம்பித்தான் உன்னோட குடும்பமே இருக்கு. உங்கப்பா அம்மாவாட கவுரவத் தையும் மரியாதையும் நீதான் உன் படிப்பின் மூலமாக தூக்கி நிறுத்தணும்.''

பேசிக்கொண்டே சென்ற விகாஸை கையுயர்த்தி பேச்சைத் தடுத்தான் மனோஜ்.

''பேசி முடிச்சிட்டயா விகாஸ். இல்ல.. இன்னும் ஒரு அரை மணி நேரம் அட்வைஸ் பண்றியா?''

''மனோஜ்?''

''நீ சொன்னது எல்லாமே உண்மைதான் விகாஸ். ஆனால் அதில் ஒன்று மட்டும் தப்பு. அது நீ என்னைப் பற்றிச் சொன்னது.''

''நான் தப்பாக எதுவும் சொல்லலை மனோஜ்..''

''அது தப்பா இல்லையான்னு நீ என்னுடைய இடத்தில் இருந்து பார்த்தால்தான் புரியும் விகாஸ். ஏன்னா நீ பணக்காரன்.... நான்?''

''டேய் நான் என்ன சொன்னேன்.. நீ அதை எப்படிப் புரிஞ்சுகிட்ட..''

''நான் கரெக்டாகத்தான் புரிஞ்சுக்கிட்டு இருக்கேன் விகாஸ். நீங்க எல்லாம் பணம் படைச்சவங்க. அதனால



தான் அந்த வைகுந்தனுக்கு சப்போர்ட்டாப் பேசுற. ஆனா நீ நினைக்கிற அளவிற்கு நான் தரம் தாழ்ந்தவன் இல்லை விகாஸ். நான் என் சூழ்நிலையை நல்லாப் புரிஞ்சுதான் நடந்துக்கிட்டு இருக்கேன் விகாஸ். என் கடமைகளை எப்படி நிறைவேத்தணும்னு எனக்குத் தெரியும். யார் சொல்லியும் அதை நான் தெரிஞ்சுக்க வேண்டிய தேவை இல்லை.''

''..........''

''என் படிப்பையும் வருமானத்தையும் எதிர்பார்த்து எங்கப்பா வாழலை. அவர் எங்கம்மாவை ராணி போல வாழ வெச்சுக்கிட்டு இருக்கார். இதையெல்லாம் நான் மத்தவங்களுக்கு சொல்லணும்ற அவசியம் இல்லை. ஆனால் நீ என்னோட உண்மையான நண்பன். அத னால்தான் இத்தனையையும் சொல்லிக்கிட்டு இருக் கேன்.''

''என்னை உன் பிரெண்டுன்னாவது சொல்றியே... அதுவே போதும்டா...''

''விகாஸ்... நான் என் தன்மானத்தை யார்கிட்டயும் விட்டுக் கொடுக்க மாட்டேன். நண்பனாக இருந்தாலும் என்னுடைய தன்மானத்தைக் குறைச்சலாக நினைச்சா அதை நான் பொறுத்துக்கவும் மாட்டேன்.''

''மனோஜ்?''

''நீ என்னைப் பத்தி என்னடா நினைச்சுக்கிட்டு இருக்க? நான் அவளோட பணத்துக்காக அவ பின்னாடி சுத்தறேன்னா இல்ல.. நான் ஒரு பொம்பளைப் பொறுக் கின்னா...''

''தப்பாப் பேசாதே மனோஜ். தன்மானம் உனக்கு மட்டும் இல்லை. எனக்கும் இருக்கு. நீ அந்தப் பொண்ணு கிட்ட மயங்கிட்ட. உண்மையை ஒத்துக்க.''

''உண்மைதான் விகாஸ். ஆனால் அது நீ சொன்ன மயக்கம் இல்லை. உண்மையான அன்பு. அந்த அன்பு இதுவரை எனக்கு யார்கிட்டயும் தோணலை. அதனால தான் நான் யாரையும் இதுவரை காதலிக்கலை. இப்ப அந்தப் பொண்ணுகிட்ட தோன்றியிருக்கு. அதுக்காக இது காதலான்னு கேட்டா என்னால உறுதியா பதில் சொல்ல முடியாது. ஏன்னா எனக்கே அது தெளிவாகத் தெரியல. அப்படித் தெளிவாக தெரிஞ்சுச்சுன்னா அதற்குப் பிறகு யார் சொன்னாலும் கேட்க மாட்டேன். அவ தான் எனக்கு எல்லாமேன்னு உறுதியா இருந் திடுவேன்'' தன் மனதில் தோன்றியதை வெளிப்படை யாகக் கூறிக் கொண்டிருந்த நண்பனைக் கவலையாகப் பார்த்தான் விகாஸ்.

''இதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமாகுமா மனோஜ்?''

''ஏன்டா சாத்தியம் ஆகாது? எங்கம்மாவும் ஒரு பணக்கார வீட்டுப் பெண்தானே. எங்கப்பாவை விரும்பி வரலையா... சந்தோசமா வாழலையா?'' கேட்டவனை சந்தேகமாகப் பார்த்தான் மனோஜ்.

''அம்மாவைப் போலவே எல்லாப் பொண்ணுங் களும் இருப்பாங்களா மனோஜ்? என்னதான் உண்மை யான அன்பு இருந்தாலும் வசதியாக வளர்ந்த ஒரு பெண்ணால் எல்லாவித வசதி வாய்ப்பு சுகத்தையும்



இழந்து கஷ்டப்பட முடியுமா? அது எல்லோராலும் முடியாத ஒண்ணுடா. ஆயிரத்தில் ஒரு பெண்.. நம்ம அம்மா மாதிரி.. யாராவது அப்படி இருக்கலாம் ஆனா..''

''அதையும் பார்ப்போம் விகாஸ். காலம் இருக்கு.. பார்க்கலாம்.''

முடிவாகவும் இல்லாமல், தொடக்கமாகவும் இல் லாமல் கூறிவிட்டு எழுந்து சென்ற நண்பனின் முதுகை வெறித்தபடி யோசனையுடன் அமர்ந்திருந்தான் விகாஸ். காலம் அனைவரையும் பார்த்துச் சிரித்தபடி அமைதியாக நகர்ந்தது.



## 11

நெற்றியில் பூத்த வியர்வை கன்னத்தில் வழிய தன் கையில் இருந்த மண்கொத்தியால் மண்ணைக் கிளறிக் கொண்டிருந்தாள் ஆராதனா. அவள் அருகில் நின்றிருந்த தோட்டக்கார சின்னான் கையில் இருந்த முல்லைச் செடியை கீழே வைக்கலாமா வேண்டாமா என்ற யோசனையில் திண்டாடிக் கொண்டிருந்தான். தோட்ட வேலையில் யாருடைய இடையூறையும் ஆராதனா விரும்ப மாட்டாள். அதையும் மீறி யாராவது உதவிக்கு வந்து விட்டால் அமைதியாக இருக்கும் ஆராதனாவின் கோபத்தின் எதிரொலியை சந்திக்க நேர்ந்துவிடும்.

ஆராதனாவின் கோபத்திற்குப் பயந்து கொண்டே நந்தகுமார்கூட அவளது தோட்ட வேலைகளை ஆட்சேபிக்க மாட்டார். அவரது பங்களாவான ஸ்ரீநிவாசத்தின் முன்புறம் இருக்கும் பூ செடிகளின் அணிவகுப்பும், புல்வெளிகளின் சீரான பராமரிப்பும் பூங்கொடிகளின் பந்தலும் என எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா ஆராதனாதான். அவளது ஆர்வத்தினால் உருவான அழகான பூந்தோட்டம்தான் ஸ்ரீநிவாசத்தின் அடையாளம்.

அனைத்து வண்ண ரோஜாச் செடியும் நந்தகுமாரின் பங்களாத் தோட்டத்தில் இருக்கும். மல்லிகையின் அத்தனை வகைகளும் அவரது தோட்டத்தின் ஓரத்தில் இருந்து காம்பவுண்டுச் சுவர்களில் ஏற்றிவிடப்பட்டு படர்ந்திருக்கும். முல்லையும், ஜாதி மல்லிகையும் கொடிகளாக மொட்டை மாடியின் ஊஞ்சல் மேடையின் மீது படர விடப்பட்டு சீராக கீழே வெட்டி விடப்பட்டு பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

முன்புறத் தோட்டத்தினை அழகுணர்ச்சியுடன் அமைத்து பராமரித்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் பங்களாவின் பின்புறம் இருக்கும் காலி இடத்தில் மண்ணை பாத்திகளாக்கி அதில் காய்கறி வகைகளை வளர்த்திருப்பாள் ஆராதனா.

கத்தரி, வெண்டை, கீரை, தக்காளி, பச்சை மிளகாய் என வீட்டிற்குத் தேவையான அளவிற்குக் காய்கறிகளைக் கொடுக்கும் வளமான பெரிய தோட்டமாக அதனை விரிவு படுத்தி அதன் ஓரத்தில் வாழை,



தென்னை போன்ற மர வகைகளையும், மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பப்பாளி என கனி தரும் மரங்களையும் அமைத்து மகளின் ஆசையைப் பூர்த்தி செய்து கொடுத்திருந்தார் நந்தகுமார்.

மகளது உயிரான தோட்டத்தினைப் பராமரிக்க மட்டும் நான்கு வேலையாட்களும் அவர்களை கண்காணிக்க தோட்டக்கார சின்னானும் நந்தகுமாரால் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். அத்தனை வேலையாட்கள் இருந்தாலும் ஆராதனாவிற்கு மாலை நேரங்களிலாவது தன் கையால் தோட்டத்தில் சில வேலைகளைச் செய்தால்தான் நிம்மதியாக இருக்கும்.

கல்லூரியில் சேர்ந்த நாள் முதலாக தனது தோட்ட வேலைகளைச் செய்ய நேரமின்றித் தவித்துக் கொண்டு இருந்த ஆராதனாவிற்கு அந்த வார இறுதி விடுமுறை நாள். கிடைத்தது வரப்பிரசாதமாக அமைந்தது. காலை எழுந்து காபி குடித்தவுடன் தோட்டத்தில் வந்து அமர்ந்து விட்டாள் ஆராதனா.

தோட்டத்திற்கு வந்து ஒவ்வொரு செடியிலும் பூத்திருந்த மலர்களையும், பூக்காமல் இருந்த மொட்டுக்களையும், தடவிக் கொடுத்தபடியே ஒரு முறை சுற்றி நடந்து முடித்த பிறகு தான் ஆராதனாவின் மனம் சமாதானம் ஆகியது.

ஆராதனா வந்தவுடன் வேலையாட்கள் விலகிச் சென்றுவிட சின்னான் மட்டும் அவளுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொண்டு அவளுடன் நின்றிருந்தான்.

"இந்தச் செடியை நன்றாக வேர்விடும் அளவிற்கு பதியம் போட்டாய்தானே?"

"ஆமாம் சின்னம்மா, பாருங்க.. நல்லா வேர் விட்டிருக்கு.." செடியை திருப்பிக் காட்டினான் சின்னான்.

"இந்த ஒரு செடி மட்டும் போதாது சின்னாண்ணா. இன்னும் ஒரு நாலு செடியாவது வேண்டும். அப்பத்தான் பந்தல் அழகா இருக்கும்..." கவலையுடன் கூறிய ஆராதனாவை சமாதானம் செய்யப் போன சின்னானின் குரலையும் மீறிக் கேட்டது ராதிகாவின் குரல்.

"ஆமாம் சின்னாண்ணா. இன்னும் ஒரு பத்துச் செடியாவது இருந்தால்தான்.. அதை வளர்த்து.. பூப்பறிச்சு.. உங்க சின்னம்மாவே அதைக் கட்டி.. விற்றுக் காசு பார்க்க முடியும். அடச்சீ.. எழுந்து வா. நமக்குக் கிடைச்சிருக்கிறதே ஒரே ஒரு நாள் லீவு. அதையும் தோட்டத்தில் வந்து உட்கார்ந்து வேஸ்ட் பண்ணிக்கிட்டு இருக்க?"

ராதிகாவின் பேச்சைக் கேட்டு வந்து சிரிப்பை சின்னான் வாய்க்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

"ஏய்.. இந்த ஒரு நாளிலாவது நான் நிம்மதியா கொஞ்ச நேரம் தோட்டத்தில் இருந்துக்கறேன்டி. ப்ளீஸ்... இன்னிக்கு என்னை டிஸ்டர்ப் பண்ணாதேடி.." கெஞ்சலாகக் கூறினாள் ஆராதனா.

"சரியான தோட்டப் பைத்தியம்டி நீ. பார்த்துக்கிட்டே இரு.. உனக்கு ஒரு விவசாயி மகன்தான் மாப்பிள்ளையா வரப்போறான்."



அவளது வார்த்தைகளைக் கேட்ட சின்னான் திடுக்கிட்டு ராதிகாவைப் பார்த்தான்.

"அப்படிச் சொல்லாதீங்கம்மா. கன்னிப் பொண்ணு வாக்குப் பளிச்சுடும். எங்க சின்னம்மா இந்த வீட்டில் ஒரு இளவரசியா இருக்கிறவங்க. வாக்கப்பட்டு போற வீட்டில் அவங்க ஒரு மகாராணியாட்டம் வாழணும்" கண் கலங்கச் சொல்லிய சின்னானின் பாசம் ராதிகாவை ஆச்சரியம் கொள்ள வைத்தது.

"ஸாரிண்ணா. நான் சும்மா விளையாட்டுக்காக அப்படிச் சொல்லிட்டேன்.." சின்னானின் முகம் பார்த்துத் தடுமாறிய ராதிகாவை மென்மையாக அணைத்துக் கொண்டாள் ஆராதனா.

"நீ சொன்ன மாதிரி நடந்தாலும் எனக்குச் சந்தோசம் தான் ராதிகா. விவசாயம் பண்றதுக்கு புண்ணியம் பண்ணியிருக்கணும். இத்தனூண்டு தோட்டத்திலேயே எனக்கு இவ்வளவு சந்தோசம் கிடைக்குதுன்னா இதையே பெரிய அளவில் செய்தால் இன்னும் நிறைய சந்தோசம்தானே கிடைக்கும். அதுவும் நல்லதுதானே.." கைகளில் ஒட்டியிருந்த மண்ணை தோட்டத்தின் ஓரத்தில் இருந்த பைப்பில் கழுவிக் கொண்டே வரிசைப் பற்கள் தெரிய சிரித்த ஆராதனாவின் எளிமை ராதிகாவிற்கு மிகவும் பிடித்தது.

"போதும்.. சின்னம்மா.. போதும். இல்லாட்டி நான் வாய் தவறி ஏதாவது செல்லிட்டுப் போக.. உங்க சின்னாண்ணா கதறிக் கதறி அழ ஆரம்பிச்சுடுவார். ஆளை விடு சாமி.." கையெடுத்துக் கும்பிட்டாள் ராதிகா.

தோழியின் உற்சாகம் தனக்கும் தொற்றிக் கொள்ள அவளுடன் இணைந்து வேகமாக வீட்டிற்குள் ஓடினாள் ஆராதனா. இருவரும் ஓட்டப் பந்தய வீராங்கனைகள் போல ஒருவருடன் மற்றவர் போட்டி போட்டுக் கொண்டு ஓடியதில் எதிரில் வந்த வைகுந்தனின் மேல் இடித்துக் கீழே விழப்போனாள் ராதிகா.

ஹாலில் அமர்ந்து தங்கையுடனும் தில்லைநாயகத்துடனும் பேசிக் கொண்டிருந்த நந்தகுமார் அதைப் பார்த்துப் பதறி எழ.. அண்ணனின் பதற்றம் தன்னையும் தொற்றிக் கொள்ள வேகமாகத் திரும்பினாள் வைரமணி.

அதற்குள் புயலாக வந்து மோதிய ராதிகாவை அவன் இடித்துத் தள்ளியதில் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் பூச்சரமாக அணைத்துக் கொண்டான் வைகுந்தன்.

நடப்பதை அறியாமல் ராதிகாவும் விரும்பி அவன் அணைப்பில் தஞ்சம் கொள்ள சில நிமிடம் இருவரும் அப்படியே நின்று விட்டனர். முதலில் உணர்வுக்கு வந்தது ராதிகா தான். அவள் வேகமாக வைகுந்தனின் மார்பில் கை வைத்து விலகி நிற்கச் செய்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவர்கள் இருவரையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த பெரியவர்களைப் பார்த்ததும் அவளுக்கு அழுகையே வந்து விட்டது. அவள் கன்னத்தில் வழிந்த நீரைத் துடைக்கவும் தோன்றாமல் நின்றுவிட வேகமாக அவளது அருகில் வந்து ராதிகாவை அணைத்துக் கொண்டாள் வைரமணி.



ராதிகாவின் கண்ணீரைக் கண்டு பதறி நின்ற மகளையும் சமாதானமாகப் பார்க்கத் தவறவில்லை அவள். வைரமணியைப் பொறுத்த வரையில் ராதிகா தனக்கு ஏற்ற மருமகள் என்பது மட்டும் இல்லாமல் தனது மகனுக்கு பொருத்தமான மனைவியாகவும் ராதிகா இருப்பாள் என்பதில் ஆனந்தமே.

அன்னையின் பார்வையே அவளது சம்மதத்தை உணர்த்திவிட ராதிகாவை புதிய சொந்தத்தோடு பார்த்தான் வைகுந்தன்.



## 12

ராதிகாவும் வைகுந்தனும் ஒருவரையொருவர் கிண்டலடித்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருக்க அங்கு தன்னுடைய இருப்பையே அந்நியமாக உணர்ந்தாள் ஆராதனா.

பெரியவர்களின் முன்னிலையில் வைகுந்தன் ராதிகாவிடம் அவன் கொண்டிருந்த அன்பினை உணர்த்திய நாள் முதலாக இருவருக்கும் இருந்த அன்பு உறுதியாகி விட ராதிகா வைகுந்தனிடம் உரிமையுடன் பழக ஆரம்பித்து இருந்தாள்.

வைரமணி ராதிகாவின் பெற்றோரைச் சந்தித்து தன் மகனின் விருப்பத்தை தெரிவித்து அவர்களின் சம்மதத்

தையும் பெற்றிருந்தது ராதிகாவின் நெருக்கத்தை மேலும் அதிகரித்து இருந்தது.

வைகுந்தனும் அவனுடைய வயதிற்கே உரிய ஆர்வத்தோடும் உரிமையோடும் ராதிகாவைப் பார்ப்பதும் பேசுவதுமாக இருந்தது ஆராதனாவின் தன்மை உணர்வை மேலும் அதிகரித்தது.

ராதிகாவின் மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தாலும் அவளது காதலைப் பார்த்து ஒருவித ஏக்கம் ஆராதனாவின் ஆழ் மனதிற்குள் தோன்றியதை அவளால் தடுக்க முடியவில்லை. அந்த ஏக்கத்தின் எதிரொலியாக ஒருவித தனிமை உணர்வும் ஏமாற்றமும் ஆராதனாவின் உள்ளத்தில் அவளையறியாமல் உருவாகிக் கொண்டிருந்ததை வைகுந்தனும் ராதிகாவும் கவனிக்கத் தவறிக் கொண்டிருந்தார்கள்.

அதற்கு மேல் சாப்பிட முடியாமல் பாதி சாப்பாட்டை அருகில் இருந்த குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு ஆராதனா எழுந்து சென்று கை கழுவிவிட்டு வந்ததைக் கூட கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தார்கள் ராதிகாவும் வைகுந்தனும்.

ஆராதனா டேபிளில் இருந்த தனது ஹேண்ட் பேகை எடுப்பதைப் பார்த்த ராதிகா பேச்சை நிறுத்திவிட்டு ஆராதனாவைக் கேள்விக் குறியாகப் பார்த்தாள்.

''நான் கிளாசுக்கும் போறேன் ராதிகா. நீ சாப்பிட்டு விட்டு மெதுவாக வா...''

ஆராதனா கூறியதைக் கேட்டவுடன் மனதிற்குள் இதமாக உணர்ந்தான் வைகுந்தன்.



ஆயிரம்தான் தோழியைப் போல பழகியிருந்தாலும் அவளை அருகில் வைத்துக் கொண்டு ராதிகாவிடம் நெருக்கமாக பேச முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் அவன். ராதிகாவோ அவனது தவிப்புகளை உணராதவளாக தன்னுடைய உயிர்த்தோழியை பிரியாமல் இருந்தாள்.

அவளை விட்டு விலகி வரச் சொன்னால் தன்னையே ராதிகா தவறாக எண்ணிவிடும் சூழ்நிலை உருவாகி விடும் என்பதால் வைகுந்தனால் எதையும் வெளிப் படையாகக் கூறவும் முடியவில்லை.

ஆராதனாவையே அவர்களுக்கு அவன் விரும்பிய தன்மையை அளித்துவிட்டு விலகிச் செல்வதை வைகுந்தன் மனதார வரவேற்றான்.

''அதுக்குள்ள என்னடி அவசரம். இரு நானும் சாப்பிட்டு முடிக்கப் போறேன். ரெண்டு பேரும் சேர்ந்தே போகலாம்'' தன்னுடைய தவிப்பை உணராமல் வேகமாகச் சாப்பிட ஆரம்பித்து ராதிகாவைச் செய்வதறியாமல் பார்த்தான் வைகுந்தன்.

''இல்ல ராதிகா.. நீ மெதுவாகச் சாப்பிட்டு வா. எனக்கு கொஞ்சம் தலைவலியா இருக்கு. நான் முதலில் போறேன்'' எதையோ வாய்க்கு வந்ததைச் சொல்லி விட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் ஆராதனா.

அவர்களது வகுப்பறை இரண்டாவது மாடியில் இருந்தது. கேண்டீனே மெயின் பில்டிங்கில் இருந்து கொஞ்சம் விலகி தனியாக மரங்களின் நடுவில் தனித்து

இருந்த ஒரு கட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது எனவே மனதிற்குள் சிந்தனை செய்தபடியே மெதுவாக நடந்து செல்வதற்குள் ராதிகாவும் வந்து விடுவாள் என்ற ஆறுதலுடன் மெதுவாக நடந்து கொண்டிருந்தாள் ஆராதனா.

''ஏய்.. நில்லு..'' யாரோ அதட்டுவதைப் போல் தோன்றியது ஆராதனாவிற்கு.

யாராவது யாரையாவது அதட்டியிருப்பார்கள் என்ற எண்ணத்தில் நிற்காமல் நடந்து கொண்டிருந்தாள் அவள்.

வேகமாக ஆராதனாவின் அருகில் ஓடி வந்து நின்ற ஒருவன் ஆராதனாவின் முன்னால் கை நீட்டி மறித்து அவளை நிறுத்தினான்.

ஒன்றும் புரியாமல் அவளைப் பார்த்தவனை கால் முதல் தலை வரை ஆராய்ச்சியாகப் பார்த்தவளின் பார்வையில் ரசனை தோன்றியது.

''கூப்பிட்டால் காது கேட்காதா? நீ பாட்டுக்கு நிற்காமல் போய்கிட்டு இருக்க.. திமிரா'' முன்பின் அறி முகம் இல்லாதவளிடம் பேசுகிறோம் என்ற நினைவே இல்லாதவனாக கேட்ட அவனை பயத்துடன் பார்த்தாள் ஆராதனா.

''என்னைக் கூப்பிட்டீங்கன்னு தெரியாது. யாரையோ கூப்பிடுறாங்கன்ற நினைவில வந்துட்டேன்'' பயத்தில் இதழ்கள் வெளுக்க மெல்லிய குரலில் கூறியவளின் முகத்தை ஆசையுடன் பார்த்தான் அவன்.



''என் பெயர் கிரி. உன்னுடைய சீனியர். சீனியரை பார்த்தால் மரியாதை கொடுக்கணும்கிறது உனக்குத் தெரியாதா?'' மிரட்டலுடன் கேட்ட கிரியை அவர்களை விட்டு சற்று தள்ளி நின்று கொண்டிருந்த நண்பர்கள் கைதட்டி உற்சாகமூட்டினார்கள்.

''தெ... தெரியும்..''

''தெரிஞ்சும் கூப்பிட்டால் நிக்காமல் போவியா?''

''தெரியாது.. எனக்குத் தெரியாமல்.''

''இப்பத்தான் தெரியும்னு சொன்ன.. அப்புறம் தெரியாதுன்னு சொல்ற.. என்ன.. மப்புல இருக்கியா? உளறிக் கொட்டிக்கிட்டு இருக்க...'' கிரி கேட்டவுடன் அவர்களைச் சுற்றி விசில் ஒலி பறந்தது.

''சூப்பர் மச்சி.. எப்படி மடக்குது பாரு தல..'' கூட்டத்தில் இருந்த ஒருவன் குரல் கொடுத்ததில் கிரி காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு மிதப்பாக ஆராதனாவைப் பார்த்தான்.

''என்ன.. கேட்டதுக்குப் பதிலே வரல?''

''இல்ல...'' தயக்கத்துடன் இழுத்துக் கொண்டே சுற்றிலும் யாராவது உதவிக்கு வரமாட்டார்களா என்ற வேண்டுதலுடன் பார்த்தாள் ஆராதனா. அகன்ற கண்களுடன் அவள் சுற்றிப் பார்த்ததைப் பார்த்த கிரியின் நண்பர்களின் கூச்சல் அதிகரித்தது.

''என்ன இல்ல.. இதான் பதிலா.. ஆமா நீ நந்தன் கிரானைட்ஸ் ஓனரோட பொண்ணாமே. அப்படியா?''

''ஆமா.''

''அப்போ.. நந்தகுமாரோட மகளா நீ?'' இரண்டும் ஒன்றுதானே என்ற எண்ணத்துடன் கிரியை நிமிர்ந்து பார்த்தாள் ஆராதனா. அவள் கோடீஸ்வரி என்ற எண்ணத்தில் கண்களில் பேராசையுடன் நின்று கொண்டிருந்தான் கிரி.

விவரம் அறிந்த நாள் முதலாக தன்னிடம் இருக்கும் பணக்கார அந்தஸ்திற்காகச் சுற்றி வந்த கூட்டத்தினரை இனம் கண்டு பழகியிருந்த ஆராதனாவிற்கு கிரியிடம் இருந்த பேராசை எண்ணத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அவள் ஒருவித நிமிர்வுடன் கிரியைப் பார்த்தாள்.

''இரண்டும் ஒன்றுதான் மிஸ்டர் கிரி. இப்ப உங்களுக்கு என்ன வேண்டும்? அதை முதலில் சொல்லுங்க.''

''நான் என்ன கேட்டாலும் கொடுப்பியா ஆராதனா. அதுதானே உன்னுடைய பெயர்'' கேட்டுக் கொண்டே அவளருகில் வந்த கிரியைப் பார்த்துப் பின்னால் நகர்ந்தாள் ஆராதனா.

அவளது பின்னடைவைப் புன்னகையுடன் பார்த்தபடியே மேலும் முன்னேறிய கிரியின் மார்பில் அவளைத் தடுத்து ஒரு கை பதிந்தது.

கோபகமாக நிமிர்ந்து பார்த்தவனின் முன்பாக வந்து நின்ற மனோஜ் மற்றொரு கையால் ஆராதனாவின் தோளை அணைத்துக் கொண்டான். அவளது



அணைப்பை எதிர்பார்க்காத ஆராதனா திகைத்தாலும் அதனை மறுக்காமல் அவனை நெருங்கி நின்று கொண்டாள். அவள் மேலிருந்து எழுந்த இதமான நறுமணத்தை உணர்ந்த மனோஜின் மனம் மயக்கத்தில் சூழ்ந்தது.

''மனோஜ்..'' கோபத்துடன் கேட்டுக் கொண்டே திரும்பி தன்னுடைய நண்பர்களைப் பார்த்த கிரி திகைத்தான்.

மனோஜின் குரல் கேட்டவுடனேயே அவனது நண்பர் கூட்டம் மாயமாக மறைந்து விட்டது.

''மனோஜ்தான் கிரி. உனக்கு என்ன வேண்டுமோ அதை என்னிடம் கேள் கிரி. நான் தருகிறேன். பாவம்... பொம்பளைப் பிள்ளைகள் கிட்டப் போய் கேட்டுக்கிட்டு இருக்கிற.''

''மனோஜ்.. உன் வேலை என்னவோ அதைப் பார்த்துக்கிட்டுப் போய்க்கிட்டே இரு. என் விசயத்தில் தலையிடற வேலை எல்லாம் வேண்டாம்'' நடுங்கும் குரலை வெளிக்காட்டாமல் கூறினான் கிரி.

''அடச்சீ நிறுத்து. இதுவும் என் வேலைதான்டா. தனியாப் போற பொண்ணுகிட்ட வம்பு பண்ணுறதுதான் சீனியரோட வேலையா. அதைத் தடுத்துக் கேட்கிறதும் சீனியரோட வேலைதான்.''

''அந்த வேலையை எல்லாப் பொண்ணுங்ககிட்டயும் காட்ட வேண்டியதுதானே. அதென்ன இந்தப் பொண்ணு கிட்ட மட்டும் ஸ்பெஷல் அக்கறை?'' கேலியுடன் கேட்டான் கிரி. அவனை கண்கள் இடுங்கப் பார்த்த

மனோஜ் திரும்பி ஆராதனாவின் விழிகளை ஒரு நொடி நேராகப் பார்த்தான்.

அவனது பார்வைக்கு விழிகளைத் தாழ்த்தாமல் தானும் அவனை அழுத்தமாகப் பார்த்தாள் ஆராதனா. அவளது பார்வையைக் கண்ட மனோஜின் இதழ்கள் லேசாக விரிந்தது.

மனோஜின் மெல்லிய புன்னகையைப் பார்த்த ஆராதனாவின் கன்னங்களில் வெட்கச் சிவப்பு தோன்ற அவளும் புன்னகைத்துத் திரும்பிக் கொண்டாள்.

தன்முன் நடந்த நாடகத்தைப் புரிந்தும் புரியாமல் பார்த்த கிரி வெறுப்புடன் தன் தலைமுடியைக் கலைத்துக் கொண்டான். அவனது செயலைப் பார்த்த இருவரின் புன்னகையும் சிரிப்பாக மாறியது.

ஆராதனா மெதுவாகச் சிரிக்க அவனைப் பார்த்த மனோஜ் வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்தான். சிரிப்புடன் கிரியைப் பார்த்த மனோஜ் அழுத்தமாக அவனது கேள்விக்குப் பதில் கூறினான்.



# 13

‘‘ஆமாம் கிரி. ஆராதனா எனக்கும் ஸ்பெஷல் தான்...’’ தன்னையே பார்த்துக் கொண்டு கிரியிடம் கூறிய மனோஜின் வார்த்தைகள் ஆராதனாவின் மீது பூமாலை பொழிவதைப் போல் இருந்தது அவளுக்கு.



மனோஜின் வார்த்தையை மறுத்துக் கூறாமல் மேலும் அவனருகில் நெருங்கி நின்ற ஆராதனாவின் செயலே அவளுடைய உள்ளத்தைப் புரிய வைக்க திகைப்புடன் விலகினான் கிரி.

அவன் அங்கிருந்து சென்றவுடன் ஆராதனாவின் தோள் மீது இருந்த கையை மனோஜ் விலக்கிக் கொள்ள அவனை ஏக்கத்துடன் பார்த்தாள் ஆராதனா. அவளது பார்வையைக் கண்ட மனோஜ் புருவம் உயர்த்தி என்ன என்பதுபோல் பார்க்க ஆராதனாவின் முகத்தில் குப்பென சிவப்புப் படர்ந்தது.

‘‘என்ன மாதிரியான மென்மை இது. ஒரு பார் வைக்கும் சிவக்கும் இவள் என் உயிரையே உருக்கிக் குடிக்கிறாளே’ தவிப்புடன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான் மனோஜ்.

‘‘உன்னை தனியா அனுப்பிட்டு உன்னோட வைகுந்தன் என்ன பண்ணிக்கிட்டு இருக்கான்?’’ கோபத்துடன் கேட்டான் மனோஜ்.

அவனுடைய கோபம் மனதிற்கு இதத்தைத் தர அவனுடைய ‘உன் முகுந்தனை’ ஆராதனா கவனத்தில் கொள்ளவே இல்லை.

‘‘அவன் ராதிகாவோட சேர்ந்து சாப்பிட்டுக்கிட்டு இருக்கான்...’’ தயக்கத்துடன் கூறிய ஆராதனாவைக் கூர்ந்து பார்த்தான் மனோஜ். அவனது பார்வையின் குறுகுறுப்பைத் தாங்க முடியாமல் தலைகுனிந்தாள் ஆராதனா.

ஆனால் அவளது தலை குனிவு மனோஜிற்கு வேறு எதையோ உணர்த்த அவனது முகம் கன்றியது.

''நீ சாப்பிடவில்லையா?'' மனோஜின் குரலில் இருந்த மாறுதலை ஆராதனா கவனிக்கவில்லை. அவள் இல்லை என்பதைப்போல் தலையசைத்தாள்.

ஆராதனாவின் பார்வை சிந்தனையுடன் திக்கில்லாமல் நோக்கியதை ஒருவித ஏமாற்றத்துடன் பார்த்தான் மனோஜ்.

''ஏன்?''

''தெரியலை. சாப்பிடப் பிடிக்கலை. அதனால தூக்கிப் போட்டு விட்டு வந்துவிட்டேன்.'' அவளது குரலிலேயே அவளுடைய பசியினை உணர்ந்த மனோஜ் ஆதரவாகப் பார்த்தான்.

''சரி வா.. என்னோடு சேர்ந்து ஒரு காபியாவது சாப்பிடு.''

''இல்லையில்ல. மறுபடியும் கேண்டீன் போய்ச் சாப்பிடத் தோணலை. எனக்கு வேண்டாம்'' அவசரமாக மறுத்த ஆராதனாவை சந்தேகக் கண்களால் ஆராய்ந்தான் மனோஜ்.

''ஓகே..வா. கிளாசுக்காவது போகலாமில்ல? இல்ல.. அங்கயும் போக இஷ்டம் இல்லையா?''

தன்னை அவன் கண்டறிந்து விட்டானோ என்ற தயக்கம் தோன்றியது ஆராதனாவிற்கு.



''போகலாம்...'' ஒற்றை வார்த்தையில் கூறியவளுடன் இணைந்து நடந்தான் மனோஜ்.

''நான் ஒண்ணு கேட்கலாமா ஆராதனா?'' அனுமதி கொடுப்பவளைப் போல மனோஜைப் பார்த்துப் புன்னகைத்தாள் ஆராதனா.

''வைகுந்தன் ராதிகாகூட பழகுவது உனக்குப் பிடிக்கலையா?'' அவனது கேள்வியில் உடல் தூக்கிப்போட திரும்பினாள் ஆராதனா.

கடைசியில் தன்னுடைய தனிமை உணர்வை இவன் புரிந்து கொண்டு விட்டானே என தவிப்புடன் எண்ணிக் கொண்டாள் ஆராதனா. அவனது தவிப்பு பெருமூச்சாக வெளிப்பட அவனை அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள் ஆராதனா.

அவனது அமைதி மனோஜின் இதயத்தில் இடியாக இறங்கியது. அவள் இல்லை என்று மறுத்துவிட மாட்டாளா என்ற எண்ணத்துடன் தவிப்புடன் அவளைப் பார்த்தான் மனோஜ். ஆராதனா வைகுந்தனை விரும்பிய காரணத்தாலேயே அவளுக்கு வைகுந்தன் ராதிகாவுடன் பழகுவது பிடிக்கவில்லையோ என்ற மனோஜின் சந்தேகம் உறுதியானதைப் போல் இருந்தது மனோஜிற்கு.

''நான் தப்பா எதுவும் கேட்டுட்டேனா? ஏன் பதிலே சொல்லல?'' தன் சந்தேகத்தை உறுதி செய்து கொள்ளும் எண்ணத்துடன் மறுமுறையும் கேட்டான் மனோஜ்.

அவன் நினைப்பது போல இல்லை என்ற உண்மையை ஆராதனா மனோஜிற்கு அந்த நொடியில் உணர்த்தியிருந்தால் அதன் பிறகு வந்த பல சோதனைகளை அவள் அனுபவித்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

ஆனால் உண்மையை மறைக்கவும் முடியாமல் பொய் சொல்லவும் தோணாமல் மௌனத்தின் பின்னால் மறைந்து நின்ற ஆராதனா தன்னுடைய துன்பத்தைத் தானே உறுதி செய்து கொண்டாள்.

அவளது மௌனத்தை சில நிமிடங்கள் அமைதியாகப் பார்த்த மனோஜ் அதன் பிறகு ஆராதனாவிடம் பேச எதுவுமே இல்லை என்பதைப் போல திரும்பி வேகமாக நடந்து சென்று விட்டான். அவனது செயலை எதிர்பார்க்காத ஆராதனா விக்கித்துப் போய் அந்த இடத்திலேயே நின்று விட்டாள்.

சற்று நேரத்தில் அவள் அருகில் வந்த ராதிகா ஆராதனாவின் திகைத்த தோற்றத்தை சந்தேகத்துடன் நோட்டமிட்டுவிட்டு வைகுந்தனைப் பார்த்தாள்.

வைகுந்தன் உதடு பிதுக்கி தோள் குலுக்குவதை அலட்சியத்துடன் தலையசைத்து மறுத்துவிட்டு மறுபடியும் ஆராதனாவின் பக்கமாகத் திரும்பினாள் ராதிகா.

''ஆரா.. ஆரா..'' தோள் தொட்டுத் திருப்பிய தோழியின் முகத்தை பார்த்து மலங்க மலங்க விழித்தாள் ஆராதனா.

''ஏய் எதுக்குடி இப்படி முழிக்கிற? பேய் கீய் அடிச்சிருக்கா.. ஆரா.. என்னதான்டி ஆச்சு? சொல்லித் தொலை'' ராதிகாவின் கோபத்தைப் பார்த்துச் சிரித்தான் வைகுந்தன்.



''டேய் லூசு... அவளைப் பார்த்தால் உனக்கு நக்கலாக இருக்கா. கொன்னுடுவேன் கொன்னு. ஏய் ஆரா என்னைப் பாருடி...'' கோபத்தில் கத்திய ராதிகாவின் குரலில் அவர்களைச் சுற்றி இருந்தவர்கள் திரும்பி அவர்களைப் பார்க்க வைகுந்தன் ராதிகாவைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்.

''நீ முதலில் ஒழுங்காகப் பிஹேவ் பண்ணு ராதி. ஆராதனாவை அப்புறமா கண்ட்ரோல் பண்ணிக்கலாம்'' கோபத்துடன் அடிக்குரலில் சீறிவிட்டு ஆராதனாவின் கைப்பற்றி இழுத்துக் கொண்டு நடந்த வைகுந்தனின் பின்னால் ஏறக்குறைய ஓடினாள் ராதிகா.

வைகுந்தன் இழுத்த இழுப்பில் சுய உணர்வுக்கு வந்த ஆராதனா அவமானத்துடன் அவர்களைப் பார்க்கத் தயங்கிக் கொண்டே அவர்களுடன் அமைதியாக நடந்தாள்.

அவர்கள் இருவரையும் கிளாஸிற்குள் விட்ட வைகுந்தன் கோபம் மாறாத முகத்துடன் ராதிகாவைத் திரும்பியும் பார்க்காமல் போய்விட ராதிகா வேதனையுடன் ஆராதனாவைப் பார்த்தாள்.

தோழியின் பார்வையை சந்திக்க விரும்பாதவள் போல் வேறு திசையில் பார்த்த ஆராதனாவின் முகத்தை சந்தேகத்துடன் பார்க்க ஆரம்பித்தாள் ராதிகா.



# 14

பறவைகள் கூட்டம் கூட்டமாக தங்களின் கூடு தேடிப் பறந்து கொண்டிருந்தது. மாலை சூரியனின் செந்நிறக் கதிர்களால் வானமே செந்தூர நிறமாகக் காட்சியளித்துக் கொண்டு இருந்தது. ஆராதனா நட்டு வைத்த மல்லிகைக் கொடியில் இருந்து மலர்ந்த மலர்களின் வாசம் அந்த மாளிகையை முற்றுகை இட்டுக் கொண்டிருந்தது.

இவை எதுவுமே கவனத்தில் பதியாதவளாக மாடி பால்கனியில் இருந்த மூங்கில் ஊஞ்சலில் அமர்ந்து தொலைதூர வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள் ஆராதனா.

''ஆராதனா... என்ன பண்ணிக்கிட்டு இருக்க?'' கையில் அன்னம்மா கட்டித் தந்த கெட்டி முல்லைச் சரத்தை வைத்துக் கொண்டு ஆராதனாவின் அருகில் இருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தாள் வைரமணி.

அவளது கேள்விக்கு பதில் சொல்லத் தோன்றாமல் புன்னகையை பதிலாக அளித்த ஆராதனா எடுத்துச் சென்று அத்தையின் காலருகில் மண்டியிட்டு அமர்ந்து அவள் கையில் இருந்த முல்லைச் சரத்தைத் தன் தலையில் சூடிக் கொண்டாள்.



ஆராதனாவின் தலையில் பூவை வைத்துவிட்ட வைரமணியின் உள்ளம் அவளது அடக்கத்தை எண்ணிப் பெருமிதம் கொண்டது.

''காலேஜ் லைஃப் எப்படி இருக்கு ஆரா? நல்லா ஜாலியாகப் போகுதா?''

''இருக்கு அத்தை.''

''கோச்சிங் நல்லா இருக்கா ஆரா? சொல்லித் தருவதெல்லாம் புரிகிறதா?''

''ம்ம்.. புரிகிறது.''

''ராதிகா ஏன் ஒரு வாரமா இங்க வரலை? இதுக ரெண்டுக்கும் இடையில் சண்டை ஏதாச்சும் வந்துடுச்சா? உனக்கு தெரியுமா ஆரா..?''

''தெரியாது..''

ராதிகாவைப் பற்றிய எண்ணம் தோன்றியவுடன் வைரமணியின் சிந்தனை மாறிவிட, அவள் தன்னுடைய கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக் கொண்டிருந்த ஆராதனாவைக் கவனிக்காமல் வைகுந்தனைத் தேடி அவனுடைய அறைக்குள் நுழைந்தாள்.

ஆராதனா மறுபடியும் தன்னுடைய எண்ணங்களுடன் ஒன்றியவளாக ஊஞ்சலில் அமர்ந்தாள்.

அவளுடைய உள்ளம் முழுவதும் மனோஜையே சுற்றி வந்தது. அன்று அவளிடம் பேசாமல் திரும்பி நடந்த மனோஜ் அதன் பிறகு வந்த நாட்களில் ஆராதனாவின் கண்களிலேயே படவில்லை.

ஆராதனாவும் அவனைத் தேடிச் சலித்த கண்களுடன் அவனது வரவை எதிர்பார்த்துச் சோர்ந்து விட்டாள். நான்கு மாத காலம் ஓடிவிட்ட நிலையிலும் மனோஜின் கோபம் தணியாத காரணத்தை ஆராதனா தனக்குள் தேடித் தேடி களைத்து விட்டாள்.

மனோஜைத் தேடி அவனது கிளாசிற்கே போக வேண்டும் என்ற துடிப்பு மனதிற்குள் தோன்றியும் அதைச் செயல்படுத்த அஞ்சியவளாக அமைதியுடன் இருந்து விட்டாள் ஆராதனா.

சில நாட்களாகவே.. ஏன் சில மாதங்களாகவே ஆராதனாவின் முகம் தெரிவில்லாமல் இருப்பதையும் அவள் சாப்பிடக்கூடத் தோன்றாமல் வெறித்தபடி அமர்ந்திருப்பதையும் முதலில் கவனித்தவள் ராதிகா தான். அவளும் காதலில் விழுந்தவள்தான் என்பதால் அவளால் ஆராதனாவின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றத்தை எளிதாக கண்டு கொள்ள முடிந்தது என்றும் எதையும் உறுதியாகத் தெரிந்து கொள்ளாமல் வைகுந்தனிடம் அதைப் பற்றிக் கூற விரும்பாததால் அவள் அமைதியாக ஆராதனாவைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள்.

அன்று காலை வழக்கம் போல கல்லூரி செல்ல விருப்பமே இல்லாதவளாக கடனுக்காக கல்லூரிக்குள் நுழைந்த ஆராதனாவின் கண்கள் அப்படியே விரிந்து நிலைத்து நின்று விட்டது. அடுத்த அடி எடுத்து வைக்கவும் தோன்றாமல் சுற்றுப் புறம் மறந்தவளாக கண்களில் கண்ணீர் பெருக அவள் அப்படியே சிலையாக நின்று விட்டாள்.



அவளது கண்களையே பார்த்துக் கொண்டு அவள் எதிரில் நின்றிருந்த மனோஜின் நிலையும் அந்த நேரத்தில் ஆராதனாவின் நிலையைப் போலவே இருந்தது.

மனோஜைப் பார்க்காமல் ஆராதனா எந்த அளவிற்கு ஏங்கினாளோ அதைவிட அதிகமாகவே மனோஜும் ஆராதனாவிற்காக ஏங்கினான். ஆனால் ஆராதனாவை போல மனோஜ் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஒவ்வொரு நாள் காலையும் அவள் கல்லூரி வருவதற்கு முன்பாகவே வந்து அவளுக்காக மறைவில் காத்து நிற்பான் அவன். ஆராதனா காரில் இருந்து இறங்கியவுடன் சுற்றிச் சுழலும் அவளது கண்கள் யாரையோ தேடிச் சலித்து ஓய்வதையும் அவள் ஏமாற்றத்துடன் செல்வதையும் பார்த்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் போராடிக் கொண்டிருந்தான் மனோஜ்.

ஆராதனாவின் கண்கள் தன்னைத் தான் தேடுகிறது என்பதை மனோஜ் உணர்ந்துதான் இருந்தான். ஆனால் அவள் வந்து இறங்குவது வைகுந்தனின் காரில். அவன் அருகில் அமர்ந்து, என்பதை மனோஜால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாக ஆராதனாவை வெறுக்கவும் முடியாமல் அவளை விரும்பவும் முடியாமல் தனக்குள் போராடி ஓய்ந்து கொண்டிருந்தான் மனோஜ்.

இறுதியில் ஆராதனாவின் களைத்த தோற்றமும், காதலுடன் தேடும் கண்களும் மனோஜின் மனதைக்

கொள்ளை கொண்டு அவனை வென்றுவிட அதற்கு மேல் தாங்க முடியாமல அவள் முன்பாக வந்து நின்று விட்டான் மனோஜ்.

ஆராதனாவின் மேல் அவனுக்கிருந்த கோபம் மறையாத நிலையில் அவனுடைய அடிமனதில் சென்று தங்கிவிட்டது அது. அந்தக் கோபத்தையும் மீறிப் பொங்கிய காதல் உணர்வால் மனோஜ் அந்தக் கோபத்தை மறந்து விட்டான்.

எதிர்பாராமல் தோன்றிய மனோஜின் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஆராதனா ஒரு பெரும் கேவலுடன் ஓடிவந்து அவனை அணைத்துக் கொள்ள அவளது வேகத்திற்கு இணையான வேகத்துடன் அவளைத் தன் அணைப்பில் அடக்கிக் கொண்ட மனோஜ் சட்டென்று அருகில் இருந்த சிறிய அறைக்குள் நுழைந்து கதவடைத்துக் கொண்டான். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடந்து முடிந்த இந்தச் சம்பவத்தை அங்கு இருந்த எவருமே அறிந்து விடாமல் செய்து விட்டான் மனோஜ்.

அழுகையில் நடுங்கும் உடலுடன் அவனது மார்பில் புதைந்து கொண்ட ஆராதனாவின் தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்தபடி அமைதியாக அவனை அணைத்து நின்றிருந்தான் மனோஜ்.

மெல்ல மெல்ல அழுகை குறைய ஆராதனா அவன் மார்பில் இருந்து தலை உயர்த்தி மனோஜின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள். அவளது பார்வையைக் கண்ட மனோஜ் மெதுவாகக் குனிந்து ஆராதனாவின்



கண்ணிமைகளில் மென்மையான முத்தங்களைப் பதித்தான்.

அவனது இதழ் தீண்டலில் உடல் நடுங்கி அவனை இறுக்கமாக அணைத்து அவனுடன் ஒட்டி நின்றாள் ஆராதனா. அவளைச் சுற்றித் தன் கைகளை மாலையாக்கி அவளது நெருக்கத்தின் இடைவெளியை மேலும் குறைத்து ஆராதனாவைத் தன்னுள் புதைத்துக் கொண்டான் .மனோஜ்.

''ஆராதனா'' கிசுகிசுப்பாக அழைத்த அவனை முகம் உயர்த்திப் பார்த்தாள் ஆராதனா.

''ம்ம்ம்...?''

''ஐ லவ் யூடி...'' உரிமையுடன் கூறிய மனோஜின் கன்னத்தில் கால்களை உயர்த்தி எழுப்பி முத்தமிட்டாள் ஆராதனா.

அவளை அப்படியே உயரத்தில் தூக்கி அவளது இதழ்களை தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டான் மனோஜ்.

''ஐ லவ் யூடி...'' அழுத்தமாக அதே நேரத்தில் மெல்லிய குரலில் கூறியவனைக் காதலுடன் பார்த்தாள் ஆராதனா.

''சரி... அவனைப் போலவே மெல்லிய குரலில் அழுத்தமாகக் கூறிய ஆராதனாவை ஏமாற்றமாகப் பார்த்தான் மனோஜ்.

''அவ்வளவுதானா....'' ஏக்கத்துடன் கேட்டான் அவன்.

"பின்ன...?"

"நீ என்னை லவ் பண்ணலியா?"

"என்ன கேள்வி இது? லவ் பண்ணாமத்தான் இப்படி..." முகம் சிவந்து திரும்பிய ஆராதனாவின் பின்னால் வந்து அணைத்து கழுத்தில் முத்தமிட்டாள் மனோஜ்.

"அப்ப சொல்லு.." எதிர்பார்ப்புடன் கேட்டவனை நோக்கித் திரும்பி நின்று அவனது கண்ணோடு கண் பார்த்தாள் ஆராதனா.

"ஐ லவ் யூ" அழுத்தமாகக் கூறி அவன் மார்பில் வெட்கத்துடன் முகத்தை மறைத்துக் கொண்டவளை அணைத்துக் கொண்டு சுவரில் சாய்ந்து நின்று விட்டான் மனோஜ்.



## 15

மாணவர்கள் அனைவரும் வருகின்ற ஓசையும் பேச்சுக்குரலும் கேட்டுத் திடுக்கிட்டு அவனை விட்டு விலகி நின்று தவிப்புடன் மனோஜின் முகம் பார்த்தாள் ஆராதனா.

"எல்லோரும் வந்துக்கிட்டு இருக்காங்க. நம்மளை இப்படிப் பார்த்தால்..." நடுக்கத்துடன் கேட்டவளை அழுத்தமாகப் பார்த்தான் மனோஜ்.



"பார்த்தால் என்ன?"

"என்னங்க இது? அசிங்கமாகி விடாது?" கோபத்துடன் கூறியவளின் வார்த்தைகளைக் கேட்ட மனோஜின் கண்கள் இடுங்கின.

"என்னைக் காதலிப்பது உனக்கு அசிங்கமாகத் தோணுதா ஆராதனா?"

அவனது கேள்வியில் உடல் தூக்கி வாரிப் போட அவசரமாக மறுத்தாள் ஆராதனா.

"ஐயய்யோ. நான் அப்படிச் சொல்லலையே... நம்மளை மத்தவங்க பார்க்கும் பார்வை அசிங்கமாக இருக்கும்னுதான் சொன்னேன்..."

"என் பொண்டாட்டியை எல்லோரும் மரியாதையுடன் மட்டும்தான் பார்க்கணும். நான் அதைத்தான் என்றுமே விரும்புவேன்..."

"அப்போ அதுக்கான வழியைச் சொல்லுங்க. இப்ப எப்படி நாம வெளியே போறது?"

"என்னைவிட்டு விலகி வெளியே போறதிலேயே குறியா இருடி" ஏமாற்றத்துடன் கூறியவனை நெருங்கி நின்றாள் ஆராதனா.

"நான்தான் காலம் பூராவும் உங்க கூடவே இருக்கப் போகிறேனே! இப்போதைக்கு இங்கிருந்து வெளியில போய்த்தானே ஆகணும்" அன்புடன் கேட்டவளின் மூக்கைத் திருகினான் மனோஜ்.

"இப்பத்தான் என் பொண்டாட்டியைப் போல பேசுற? இனி வேற எந்தக் கவலையும் உனக்கு

வேண்டாம். எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்'' அவளது கைப்பற்றி இழுத்துச் சென்ற மனோஜ் இரண்டு சுவர்களுக்கும் இடையில் இருந்த கதவிற்கு அருகில் சென்று அவளைச் சற்றுத் தள்ளி நிறுத்தினான்.

''என்ன கதவு இது?'' புரியாமல் கேட்டாள் ஆராதனா.

''லேப்புக்குப் போகிற கதவு இது. இதைத் திறந்து நீ லேபுக்குள் போய் இரு. நான் சுத்தி வந்து லேப் கதவை காரிடார் பக்கமாகத் திறந்து விடுகிறேன். நீ வெளியில் வந்து விடு...'' கூறிவிட்டு நகர்ந்தவன் நின்று திரும்பி ஆராதனாவைப் பார்த்தான்.

பின் வேகமாக அருகில் வந்து அவளை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு விலகி நின்றான். கலைந்திருந்த அவனது தலைமுடியைச் சரி செய்துவிட்டு அவள் முகம் பார்த்து தலையாட்டி விடைபெற்றவனிடம் நிம்மதியாக தலையாட்டி விடை கொடுத்தாள் ஆராதனா.

''நான் கதவைத் திறந்தவுடன் லூசு மாதிரி உடனே வெளியே வந்துவிடாதே. கொஞ்ச நேரம் பொறுமையாக உள்ளேயே இருந்துவிட்டு அப்புறமாக வா...'' சொல்லிவிட்டு அறைக் கதவைத் திறந்து வெளியே சென்று மீண்டும் பூட்டினான் மனோஜ்.

மனோஜின் புத்திசாலித்தனத்தையும் திருட்டுத் தனத்தையும் சேர்ந்தே மனதிற்குள் ரசித்தபடியே கதவைத் திறந்து லேபுக்குள் ஆராதனா செல்வதற்கும் மனோஜ் வெளிப்புறமாக லேப் கதவைத் திறப்பதற்கும் சரியாக இருந்தது.



கதவைத் திறந்த மனோஜ் அங்கே நிற்காமல் வேகமாக நடந்துவிட கால்மணி நேரம் கடந்து வெளியே ஆள் நடமாட்டம் இல்லாத நேரத்தில் லேபை விட்டு வெளியேறிய ஆராதனா ஓட்டமும் நடையுமாக கிளாசிற்கும் போய் அவளுடைய இடத்தில் அமர்ந்தாள்.

''இவ்வளவு நேரமாக எங்கடி போயிருந்த? வைகுந்தன் உன்னை அப்பவே அனுப்பிட்டதா சொன்னாரே?''

சந்தேகமாகக் கேட்ட ராதிகாவின் முகம் பார்க்க முடியாமல் பேகில் இருந்து நோட்டை எடுக்கும் பாவனையுடன் குனிந்துக் கொண்டாள் ஆராதனா.

''உன்னிடம் தான் கேக்கிறேன் ஆராதனா? எங்க போயிருந்த.''

''பாத்ரூம் போயிருந்தேன்டி. அதுக்குக்கூட போகக் கூடாதா?''

''போகலாமே.. ஆனால் பாத்ரூம் நீ வந்த திசைக்கு எதிர்ப்பக்கமாக இருக்கு ஆராதனா'' கேட்டவளை திகைத்துப் பார்த்தாள் ஆராதனா.

''அது.. வந்து... நான்.. நான் லேபுக்குப் போயிருந்தேன் ராதிகா. லேபில் ஒரு பொருளைப் பார்க்க வேண்டியதாக இருந்தது. அதான் போயிட்டு.. முதலில் பாத்ரூம் போயிட்டு அப்புறமாக லேபுக்குப் போனேன்டி..'' உளறிக் கொட்டிய ஆராதனாவிடம் பேச வாய் திறந்த ராதிகா வகுப்பிற்குள் நுழைந்த ஆசிரியரைப் பார்த்தவுடன் வாய் மூடிக் கொண்டாள்.

ஆனால் அவள் வாயால் கேட்காத வார்த்தைகளை ராதிகாவின் கண்கள் ஆராதனாவிடம் கேட்க பதில் கூறாமல் அவளது பார்வையைத் தவிர்த்தாள் ஆராதனா.

ஒரு வழியாக மதிய உணவு இடைவேளை வந்துவிட நிம்மதியுடன் ஆராதனாவின் பக்கம் திரும்பிய ராதிகா அவர்களை அழைத்துப் போக வந்த வைகுந்தனைப் பார்த்தவுடன் மறுபடியும் வாயை மூடிக் கொண்டாள்.

ஒரு சின்னச் சிரிப்புடன் ராதிகாவின் முகத்தைப் பார்த்தபடி அவளுடன் நடந்த ஆராதனா எதிரில் வந்த மனோஜைப் பார்த்தவுடன் காலையில் நடந்தவைகளின் நினைவு வர முகம் சிவந்து கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

ஆனால் மனோஜ் ஆராதனாவைப் போல கடைக் கண்ணால் தயக்கத்துடன் அவளைப் பார்க்கவில்லை. உரிமையுடன் நேருக்கு நேராக ஆராதனாவின் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டு அவர்களைக் கடந்து சென்றான்.

மனோஜின் உரிமையான பார்வையையும் தன் தோழியின் வெட்கச், சிவப்பு நிறைந்த முகத்தையும் பார்த்த ராதிகாவின் கண்கள் ஆராய்ச்சியுடன் சுருங்கியது. ஆராதனாவின் வெட்கத்திற்கும், அன்று காலை அவன் வகுப்பிற்கு லேட்டாக வந்ததற்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக ராதிகாவின் உள் உணர்வு கூறியது. அவள் தங்களைக் கடந்து சென்று விட்ட மனோஜைத் திரும்பித் திரும்பி பார்த்தபடியே வந்து கொண்டிருந்த ஆராதனாவையே யோசனையுடன் பார்த்தாள்.



வைகுந்தனின் உள்ளமோ ஆராதனாவைச் சந்தேகப் படாமல் தன் அருகில் வந்து கொண்டிருந்த அவளைப் பார்த்த மனோஜின் பார்வையால் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டு இருந்தது. அவன் பல்லைக் கடித்துக் கொண்டே மனோஜைத் திரும்பிப் பார்த்தபடி நடந்தான்.



# 16

அன்று வார இறுதி விடுமுறை தினம் என்பதால் தன்னுடைய வழக்கப்படி காலையில் இருந்து தோட்டத்தில் வேலை பார்த்துவிட்டு வந்து குளித்து சாப்பிட்டு விட்டு ஓய்வாக மாடி பால்கனியில் அமர்ந்திருந்தாள் ஆராதனா.

வெகுநாட்களுக்குப் பிறகு ஆராதனாவின் வீட்டிற்கு வந்திருந்த ராதிகாவை அன்புடன் உபசரித்துக் கொண்டிருந்த மனைவியை கேலியுடன் பார்த்தபடி அமர்ந்திருந்தார் தில்லைநாயகம்.

"என்னம்மா வைரமணி.. மருமகளை ரொம்ப ஓவராக உபசரித்துக் கொண்டிருக்கியே..?" தில்லைநாயகத்தின் அருகில் வந்து அமர்ந்த நந்தகுமார் தங்கையிடம் கேலியாகக் கேட்டார்.

"என்னண்ணா செய்யுறது? அப்பத்தான நாளைக்கு எங்களை ராதிகா நல்லாப் பார்த்துப்பா."

''அதுவும் சரிதான் வைரமணி. வருமுன் காப்போம் பாலிசியில் இறங்கிட்ட போல இருக்கு. நடத்து.. நடத்து..'' சொன்ன நந்தகுமாருடன் தில்லைநாயகமும் இணைந்து சிரிக்க ராதிகா வெட்கத்துடன் ஆராதனா விடம் ஓடி வந்தாள்.

காலை டிபனை முடித்துவிட்டு அது போதாதென தட்டு நிறைய முந்திரி பக்கோடாவுடன் அக்காவின் எதிரில் அமர்ந்து கொறித்துக் கொண்டே கதை பேசிக் கொண்டிருந்த ஆதித்யா ராதிகா ஓடி வந்த வேகத்தைப் பார்த்த தட்டின் மேல் அப்படியே கவுந்து படுத்து மூடிக் கொண்டான்.

தங்கள் அருகே வந்து ராதிகா நின்றதை உறுதி செய்து கொண்டபின் தட்டைவிட்டு எழுந்தவன் பாதுகாப்பாக பக்கோடா தட்டை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு பின் திரும்பி ராதிகாவை முறைத்தான்.

''இந்தியா சார்பில் ரன்னிங் ரேஸ் எதுலயாச்சும் கலந்துக்கப் போறீங்களாக்கா? எப்பப் பார்த்தாலும் ஓடிக்கிட்டே இருக்கீங்க? நீங்க வந்த வேகத்தில் என் பக்கோடா அத்தனையையும் கொட்டி இருப்பீங்க..'' குண்டுக் கன்னங்களும் செல்வச் செழிப்பு தந்த வளமான உடல்வாகுமாக இருந்த ஆதித்யா தன் குண்டுக் கண்களை உருட்டிக் கேட்ட தினுசில் வாய் விட்டுச் சிரித்து விட்டாள் ராதிகா.

தோழியின் சிரிப்பைப் பார்த்த ஆராதனாவும் அவளுடன் இணைந்து சிரிக்க இருவரின் சிரிப்பொலியும் ஹாலில் அமர்ந்திருந்த கணவரின் காதிலும் எதி ரொலித்தது.



''வைகுந்தனுக்கு வெளியில பொண்ணு பார்த்து இருந்தாலும் கஷ்டம்தான் வைரம். வர்ற பொண்ணு நம்ம பொண்ணை அனுசரித்து நடக்குமாங்கிற கவலை யோட நாம இருந்திருக்கணும். ஆனா இப்ப அந்தக் கவலை இல்ல...''

''ஆமாண்ணா, நீங்க சொல்வதும் உண்மைதான். ஏதோ நாம செஞ்ச புண்ணியம்தான். நம்ம பிள்ளைகளை ஒத்துமையா வாழ வைக்கிற வரம் கிடைச்சிருக்கு.''

''ராதிகாவும் ஆராதனாவின் வயதுதானே வைரம். அவளுக்கு நல்ல வரனா நம்ம வைகுந்தன் அமைஞ் சுட்டேன். நாமும் ஆராதனாவிற்கு நல்ல வரனாக பார்க்க ஆரம்பிக்கணும் வைரம்..'' அண்ணனின் மனதில் இருந்த ஆதங்கத்தை வைரம் நொடியில் புரிந்து கொண் டாள்.

''பார்த்துடலாம் அண்ணா. மற்ற வீடுகளைப் போல நம்ம பிள்ளைகளை நாம முறைப் பொண்ணு முறை மாப்பிள்ளையா வளர்க்காம கூடப் பிறந்தவங்களைப் போல வளர்ந்துட்டோம். அதனாலதான் வெளியில மாப்பிள்ளை பார்க்க வேண்டியதாக இருக்கு.''

''சீச்சி.. என்ன வைரமணி இப்படியொரு வார்த் தையைச் சொல்லிட்ட? ஆராதனா நம்ம பொண்ணு மாதிரி. அவளைப் போய் முறை பொண்ணு அது இதுன்னுகிட்டு. எனக்கே இதைக் கேட்கப் பிடிக்கலை. இனி இப்படிப் பேசாதே. உன்னோட இந்தப் பேச்சை வெளி ஆளுங்க யாராவது கேட்டால் என்ன நினைப் பாங்க? நாளைக்கு நம்ம ஆராதனாவிற்கு மாப்பிள்ளை

பார்க்கும்போது அவளும் நம்மோட பொண்ணு மாதிரி தான்றதை புரிய வைச்சு அதைப் புரிஞ்சுக்கிற ஒருத் தனுக்குத்தான் அவளைக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும். உலகத்தில எல்லோருடைய குணமும் ஒரே மாதிரி இருக்காதுடா நந்தா நாம் கொஞ்சம் பொறுமையா நல்ல பையனாத் தேட ஆரம்பிக்கணும்'' நண்பனின் பேச்சில் இருந்த கவலை தில்லைநாய கத்தின் முகத்தில் தெரிந்தது.

''நீங்க உங்க பங்குக்கு அண்ணனைப் போட்டுக் குழப்பாம அமைதியா இருங்க. இங்க பாருங்கண்ணா. நம்ம ஆராதனாவின் அழகிற்கும் குணத்திற்கும் எந்த தேசத்து ராஜா வந்து அவளைக் கொத்திக்கிட்டு போகப் போறானோ? கவலையை விடுங்கண்ணா'' அண்ணனின் மனக்கவலைக்கு வார்த்தைகளாலேயே மருந்திட முயன்ற மனைவியைப் பெருமையுடன் பார்த்தார் தில்லைநாயகம்.

அவர்கள் மூவரின் முன்பாகவும் பழச்சாறு டம்ளரை வைத்துவிட்டு மீதம் இருந்த டம்ளர்களுடன் மாடிக்கு வந்தாள் அன்னம்மா.

ஆதித்யாவின் அருகில் அமர்ந்து அவனது தோளில் கைபோட்டுக் கொண்டே ஆராதனாவிடம் அரட்டை அடித்துக் கொண்டிருந்த ராதிகாவைப் பார்த்த அன்னம் மாவின் முகம் மலர்ந்தது.

''ராதிகாக் கண்ணு.. உனக்குப் பிடிச்ச அன்னாச்சிப் பழ சூஸ்... குடி..'' அன்னம்மா சொல்லிய விதத்தில் தோழி கள் இருவரின் சிரிப்பும் அதிகரித்தது.



''அன்னம்மாக்கா.. அது சூஸ் இல்ல.. ஜூஸ்...''

''சூஸ்...'' ராதிகா சொல்லியதை அன்னம்மா தன் னுடைய பாணியில் அழுத்தமாகச் சொல்ல ஆராதனா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

''ஐயோ அக்கா.. அது..'' மறுபடியும் ஆரம்பித்த ராதி காவின் வாயை அவசரமாகத் தன் கையால் பொத்தினாள் ஆராதனா.

''ராதிகா.. அன்னம்மாவுக்கு கிளாஸ் எடுக்கணும்னால் முதலில் ரெண்டு பாட்டில் ஹார்லிக்ஸ் குடிச்சுட்டு தெம்பாக வரணும். இந்த ரிஸ்க் உனக்குத் தேவையா?''

''அக்கா.. நமக்கெல்லாம் ரிஸ்க் எடுக்கிறது ரஸ்க் சாப்புடுற மாதிரிக்கா. நீங்க விடாதீங்க...'' பக்கோடாவை மேலும் சுவாரசியமாகக் கொறிக்க ஆரம்பித்தான் ஆதித்யா.

''உதைபடப் போற நீ. உனக்கு பொழுது போறதுக்காக என் காதில் ரத்தம் வரணுமா? இன்னிக்கு சன் டே வேற. அன்னம்மாக்கா நமக்காக ஸ்பெஷல் பிரியாணி செய்யப் போறதா சொன்னாங்க. உனக்கு வேண்டாம்னா.. ராதிகா கிளாஸ் எடுக்கட்டும்.''

''வேண்டாம் வேண்டாம். நமக்கு பிரியாணிதான் முக்கியம். இப்ப அன்னம்மாவுக்கு கிளாஸ் எடுக்கிறதா முக்கியம். ராதிகாக்கா.. நீங்க டயத்தை வேஸ்ட் பண்ணாதீங்க'' பஞ்சாயத்துத் தலைவனாக தீர்ப்புச் சொல்லியவனின் காதைப் பிடித்துத் திருகினாள் ராதிகா.

''சரியான சாப்பாட்டு ராமன்டா நீ! அக்காவும் தம்பியும் சேர்ந்துக்கிட்டு என்னையா ஓட்ட ஆரம்பிக்கிறீங்களா? உங்க ஒற்றுமையைக் காட்ட நான்தான் கிடைச்சேனா?''

''விடுடி.. விடுடி. நமக்குள்ளே மான ரோசமெல்லாம் இடைஞ்சலாக வரலாமா. வாசலில் செருப்போட சேர்த்து அதையும் கழட்டி வெச்சுரணும்டி. இதையெல்லாம் உனக்கு இன்னும் சொல்லிக் குடுக்கணுமா என்ன?'' ஆதித்யாவின் காதை விட்டுவிட்டு ஆராதனாவைப் பிடிக்க ஓடினாள் ராதிகா. அவளது கையில் அகப்படாமல் அன்னம்மாவின் பின்னால மறைந்து கொண்டு பழிப்புக் காட்டினாள் ஆராதனா.

''சரியான வெளையாட்டுப் பிள்ளைதான் போ. இது எல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு? பொம்பளைப் புள்ளைக பொறந்த வீட்டில் இருக்கிற வரைக்கும் தான் கொண்டாட்டமெல்லாம். போற இடம் எப்படி இருக்கப்போகுதோ என்னமோ?'' அன்னம்மா ஆராதனாவின் கன்னம் வழித்துப் புன்னகைத்தாள்.

விளையாட்டுத்தனம் மறைந்து முகத்தில் சிந்தனை ரேகை படர அன்னம்மாவைப் பார்த்த ஆராதனா அமைதியாகச் சென்று ஊஞ்சலில் அமர்ந்தாள்.

''அன்னமாக்கா.. இப்ப எதுக்காக இப்படிப் பேசறீங்க? அதுக்கெல்லாம் இன்னும் நாள் இருக்குக்கா. அதுவரை நாங்க ப்ரீயா இருக்குறோம்'' அன்னம்மாவிடம் சொல்லுவதைப்போல தோழிக்குப் புரிய வைக்க முயன்றாள் ராதிகா.



ஆனால் அவளது எண்ணம் புரியாத அன்னம்மா வேகமாக ராதிகாவிடம் திரும்பி அவளை முறைக்க ஆரம்பித்தாள்.

''ரொம்ப நாள் எல்லாம் இல்ல கண்ணு. எங்க ஐயா பாப்பாவுக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பிச்சட்டார். நானே அந்தக் கவலையில இருக்கேன். எங்க பாப்பாவைப் பிரிஞ்சு நான் எப்படித்தான் இருக்கப் போறேனோ? உனக்கென்ன எங்க வைகுந்தன் தம்பிய கட்டிக்கிட்டு ஜாலியா இருக்கப்போற. ஆனா எங்க பாப்பா..'' புலம்பிக் கொண்டே அங்கிருந்து சென்ற அன்னம்மாவின் முதுகை வெறித்துக் கொண்டே சிலையாக அமர்ந்து விட்டாள் ஆராதனா.



## 17

பசுமையான தோட்டப் பயிர்களின் ஊடாக மிதந்து வந்த காற்றின் தாலாட்டலில் சரசரவென்ற சத்தத்துடன் தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தது தென்னை மரம்.

தந்தைக்குத் துணையாக தோட்டத்தில் விளைந்த காய்களைத் தரம் பிரித்துக் கூடைகளில் போட்டுக் கட்டும் பணியில் தீவிரமாக இருந்தான் மனோஜ். வேலைக்கு வந்த பெண்களின் கைகள் காய்களைத் தனித்தனியாக தரம் பிரித்து வேகமாகக் குவித்துக் கொண்டிருக்க அவைகளை அள்ளி மகனது அருகில்

கொண்டு வந்து கொட்டிக் கொண்டு இருந்தார் நல்லுச்சாமி

நல்ல காய்களைத் தவிர மீதம் இருந்த சொத்தைக் காய்களில் புழுக்கள் இல்லாத நல்ல பகுதிகளை வெட்டிக் கொண்டிருந்தாள் ஒருத்தி. அவற்றை அள்ளி வாளியில் இருந்த தண்ணீரில் போட்டுக் கழுவிக்கழுவி அருகில் இருந்த பெரிய சட்டிகளில் சேகரித்துக் கொண்டிருந்தாள் மற்றொரு பெண்.

நல்ல காய்களைக் கூடைகளில் அடுக்கியும், சாக்கு மூட்டைகளில் கட்டியும் பக்கத்து டவுனுக்குக் கொண்டு சென்று மொத்தம் கடைகளில் மற்றும் காசாக்கி விடுவார் நல்லுச்சாமி. மீதமுள்ள சொத்தைக் காய்களை வெட்டி வேக வைத்து அதனைக் காய வைத்து வற்றல்களாக மாற்றி அதையும் கிலோ கணக்கில் எடைபோட்டுத் தனித்தனியாக பாக்கெட்டுகளில் போட்டுக் கட்டி அதை யும் கடைகளில் கொடுத்து காசாக்கி விடுவார்.

தந்தையின் சமயோசிதப் புத்தியையும் சாமர்த்தியத் தையும் கண்டு பலமுறை மனோஜ் வியந்து நிற்பான்.

''விவசாயத்தை குறை சொல்லிக்கிட்டு நிக்கிறது மடத்தனம். நம்மைக் காப்பாற்ற பூமித்தாய் அவளை நம்பியிருக்கிற பிள்ளைகளை என்னிக்கும் கைவிட மாட்டா'' நம்பிக்கையுடன் பலமுறை நல்லுச்சாமி கூறி கேள்விப்பட்டிருக்கிறான் மனோஜ்.

''ஆனால் அப்பா - மாச வருமானம் வருகிறது போல விவசாயத்தில் இல்லையேப்பா. ஆறு மாசத்துக்கு ஒரு



தரமோ, நாலு மாசத்துக்கு ஒரு தரமோ தான் வருமானம் வருது. அது வரைக்கும் விவசாயி தன் கைக்காசைப் போட்டுத்தானே பயிர்களைக் காப்பாத்தணும்'' வேண்டு மென்றே தந்தையை வம்பிழுப்பான் அவன்.

அவனை தீவிரமாகப் பார்த்துக் கொண்டேயிருக்கும். நல்லுச்சாமி அவனுக்கு உடனடியாக பதிலளிக்க மாட்டார்.

''ஒரு தொழிலைத் தொடங்கணும்னா லட்சக் கணக்கில் முதல் போடறதை நாம நியாயம்னு நினைக் கிறோம். அதைப் போலத் தான விவசாயமும்... அதுவும் ஒரு தொழிற்கூடத்தைப் போலத்தானே? நல்ல லாபம் வரணும்னா நாமளும் கைக்காசைப் போட்டால்தானே வரும்? காசைப் போட்டுவிட்டு கையைக் கட்டிகிட்டு உட்கார்ந்து இருந்தால் எந்தத் தொழிலுமே லாபகரமாக இருக்காது. நாமளும் நம்ம உயிரைக் கொடுத்து உழைக் கணும். அப்பத்தான் உழைப்புக்கேத்த ஊதியம் கிடைக்கும்'' மனோஜ் எதிர்பாராத நேரத்தில் பதில் கொடுப்பார் நல்லுச்சாமி.

சொல்லைப் போலவே செயலிலும் விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றிக் காட்டியவர் அவர். தன்னிடம் இருக்கும் ஐந்து ஏக்கர் நிலத்தில் இரண்டு ஏக்கரில் வாழைத் தோப்பும், இரண்டு ஏக்கரில் நெல்லும், மீதம் இருக்கும் ஒரு ஏக்கரில் பலவிதமான காய்கறி களையும் பயிரிட்டு முறைப்படி அனைத்தையும் பரா மரித்து வருவார் நல்லுச்சாமி.

காய்கறிகளில் தக்காளி, வெண்டைக்காய், கத்தரி செடிகளின் ஊடாக இருக்கும் காலி இடத்தில்

வெங்காயத்தை நட்டு அதிலும் லாபம் பார்ப்பார் அவர். காய்கறிகளைச் சுற்றி கீரைப் பாத்திகளாகப் போட்டு வாரத்தில் ஒருமுறை காய்கறிகளோடு கீரையையும் அறுத்து சின்னச் சின்ன கட்டுகளாக்கி அதையும் விற்று விடுவார்.

தோட்டத்தைச் சுற்றியும் கொஞ்சம் கொஞ்சமாக நட்டு வைத்த தென்னங் கன்றுகள் அனைத்தும் சேர்த்து இன்று இருநூறு தென்னை மரங்களாக வளர்ந்து நின்று அதுவும் தன் பங்கிற்கு வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

இதுபோக ஊரைச் சுற்றி இருந்த மாந்தோப்புகளையும் குத்தகைக்கு எடுத்து விடுவார் நல்லுச்சாமி.

''விவசாயமும் பங்குச் சந்தை போலத்தான் தம்பி. ஒன்றையே நம்பி முதலீடு பண்ணாமல் இதில கொஞ்சம் அதில கொஞ்சம்னு முதல் போட்டு வெச்சா ஒன்றில்லாவிட்டால் இன்னொண்ணு கை கொடுக்கும். நஷ்டம்றது வராது'' தன்னம்பிக்கையோடு கூறுவார் அவர்.

அந்தத் தன்னம்பிக்கையை முதலாகக் கொண்டு முன்னேறியவர்தான் அவர் என்பதை உணர்ந்திருக்கும் மனோஜ் என்றுமே தந்தையின் வார்த்தைகளை மறுத்துப் பேசவே மாட்டான்.

நாள் முழுவதும் நல்லுச்சாமி வெயிலில் நின்று வேலை பார்த்து உழைப்பாரே தவிர தன் மனைவி தமயந்தியை தோட்ட வேலைகளைச் செய்ய என்றுமே



அவர் அனுமதித்தது இல்லை. வீட்டில் இருந்து கொண்டு சமையல் வேலைகளைச் செய்வதும், கணவன் குழந்தைகளைப் பராமரிப்பதும் மட்டுமே தன் மனைவியின் வேலையாக இருக்க வேண்டும் என்று விரும்புவார் அவர். பணக்கார வீட்டில் பிறந்து வசதியாக வளர்ந்த தமயந்தியை அவளது பிறந்த வீட்டினரைப் போல வசதியாக வாழ வைக்க முடியாவிட்டாலும் தன்னால் முடிந்த அளவிற்கு அவளை கண்ணுக்குள் வைத்துப் பாதுகாப்பதைத் தன் கடமையாக நினைப்பவர் நல்லுச்சாமி.

கணவனின் மனமறிந்த தமயந்தியும் அவரது எண்ணத்திற்கு மதிப்பளித்து வீட்டோடு இருந்து விடுவாள்.

''பெரிய சீமான் வீட்டுச் செல்லக்குழந்தை இவள். என் தம்பி காட்டிலும் மேட்டிலும் கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்க இவள் மட்டும் சொகுசாக உட்கார்ந்து தின்னுக்கிட்டு இருக்கா பாரு... எல்லாம் என் தம்பியோட தலையெழுத்து...'' அக்கறையே இல்லாவிட்டாலும் தமயந்தியின் மனம் நோக வேண்டும் என்பதற்காகவே தண்ணீர் கிணற்றிலும், விறகு எடுக்கும் இடத்திலுமாக தயந்தியின் காதுபடக் கூறி வராத கண்ணீரைத் துடைப்பாள் செண்பகம்.

அவை அனைத்தையும் கேட்டுவிட்டு முகத்தில் இருக்கும் சிரிப்பு மாறாமல் வந்த வேலையை மட்டும் பார்த்து விட்டு அமைதியாகச் செல்லும் தமயந்தியைப் பார்த்த மற்ற பெண்கள் வியப்பில் கன்னத்தில் கை

வைத்து கொண்டு நிற்பார்கள். செண்பகம் பேசியதைக் கூட நல்லுச்சாமிவிடம் கூற மாட்டாள் தமயந்தி.

அவளைப் பொறுத்தவரையில் நல்லுச்சாமி மட்டும் தான் அவளுக்கு முக்கியம். அதைப் போலவே தமயந்தி மட்டும்தான் நல்லுச்சாமிக்கும் முக்கியம். இருவரும் ஒருமித்த கருத்தோடும் உண்மையான அன்போடும் வாழ்ந்த காரணத்தாலேயே போட்டிருந்த உடைகளோடு வீட்டை விட்டு வந்த அவர்களால் இன்று இவ்வளவு தூரம் முன்னேற முடிந்தது.

தங்களது ஒரே மகனையும் பொறுப்போடு வளர்த்து ஆளாக்கி இன்று ஒரு இன்ஜீனியராக உருவெடுக்க வைக்கவும் முடிந்தது.

ஒரு வகையில் தன்னுடைய மனைவியும் தனது அன்னையைப் போலவே இருக்க வேண்டும் என்பதே மனோஜின் கனவாகவும் ஆசையாகவும் இருந்தது. ஆனால் கோடீஸ்வரியான ஆராதனா தன்னுடைய கனவினை நிறைவேற்றுவாளா என்பதை எண்ணி மற்றொரு வகையில் ஐயமாகவும் இருந்தது அவனுக்கு.



# 18

வாரம் முழுவதும் வேலை பளுவால் மதிய உணவிற்கு வீட்டிற்கு வராமல் தொழிற்சாலையிலோ, அலுவலகத்திலோ இருக்கும் இடத்திலேயே உணவருந்திக் கொள்வார்கள் தில்லைநாயகமும் நந்தகுமாரும்.



ஆனால் வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை மட்டும் எத்தனை வேலைகள் இருந்தாலும், அத்தனை வேலைகளையும் ஒதுக்கிவிட்டு வீட்டோடு இருந்து குடும்பத்தினருடன் சேர்ந்து மதிய உணவை உண்பதை ஒரு வழக்கமாக ஏன் கடமையாகவே வைத்து இருந்தார்கள் அவர்கள் இருவரும்.

அதனால் ஞாயிற்றுக்கிழமையன்று மட்டும் அந்த உணவு மேஜையே கல்யாண வீடு போலக் களை கட்டும். வாரம் முழுவதும் பேசாத பேச்சுக்களை பேசி முடிக்கும் இருவரின் இடையே தன் கல்லூரி கலாட்டாக்களை வைகுந்தனும் கூற அந்த டேபிளே அமளியால் இரண்டு படும்.

வீட்டிற்கு ஒரே பெண்ணான ராதிகாவிற்கு வைகுந்தனின் அந்த வீட்டுச் சூழல் மிகவும் பிடிக்கும். அதற்காகவே வார இறுதி நாளில் அவள் தன் வீட்டில் இருக்க விரும்பாமல் ஆராதனாவை பார்க்கும் சாக்கில் அங்கு வந்து விடுவாள். வைகுந்தனை ராதிகா விரும்புவதற்கு அவனுடைய இந்தக் குடும்பச் சூழலும் ஒரு காரணம்.

''அன்னம்மா... பிரியாணி சூப்பர். வர வர உன் சமையல் டேஸ்டாகிட்டே இருக்கே...'' நந்தகுமார் மெச்சுதலாகக் கூறியதில் தன் தலையில் வைர கிரீடம்

தாங்கிய உலக அழகியைப் போல் ஆனந்தத்தில் நெகிழ்ந்து விட்டாள் அன்னம்மா.

''ஐயா... இன்னொரு கரண்டி வைக்கட்டுங்களா?'' கேட்டுக் கொண்டே வேகமாக வந்த அன்னம்மாவின் கையில் இருந்த கரண்டியை பிடுங்கினாள் வாசுகி.

''ஏற்கனவே பிரசரும் சுகரும் உங்க ஐயா உடம்பில் தாண்டவம் ஆடுது. இதில் நீ வேற பிரியாணியை அள்ளி வைக்க ஓடு.. பேசாமல் இருக்க மாட்ட'' எஜமானியின் அதட்டலால் முகம் சிணுங்க தள்ளி நின்று கொண்டாள் அன்னம்மா.

''ஏன் வாசுகி அவளைத் திட்டிக்கிட்டிருக்க? நீயும் ஒரு கரண்டிக்கு மேல வைக்கமாட்ட... வைக்க வர்ற அவளையும் விடமாட்ட... நான் பாவம்டி...'' மாமாவின் புலம்பலைக் கேட்ட வைகுந்தன் நைசாக தன் பிளேட்டில் இருந்த பிரியாணியை அள்ளி வாசுகி அறியாமல் நந்தகுமாரின் பிளேட்டில் போட்டு விட்டு ஒன்றும் அறியாதவன் போல காலி தட்டை வாசுகியின் முன்பாக நீட்டினான்.

வைகுந்தனின் பிளேட் காலியாக இருந்ததைப் பார்த்த வாசுகி பதறிப்போய் ஒன்றுக்கு இரண்டு கரண்டியாக பிரியாணியை அள்ளி வைக்க அதைப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் இடது கையால் வாயைப் பொத்திக் கொண்டு வைகுந்தனைப் பார்க்க அவன் அமைதியாக இருக்கும்படி கண்களால் ராதிகாவை எச்சரித்தான்.



''அம்மா... சில பேர் செய்யுற திருட்டுத் தனத்தை வெளியில் தெரியாமல் செஞ்சிடுறாங்களே.. அது எப்படிம்மா'' சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டே வாசுகியிடம் கேட்ட ராதிகா கடைக் கண்ணால் வைகுந்தனைப் பார்த்தாள்.

ராதிகாவின் குத்தலைப் புரிந்து கொண்ட நந்தகுமார் கண்களால் சிரித்தபடியே அவரும் வைகுந்தனைப் பார்த்தார். இருவரின் பார்வையையும் அறிந்தும் தலை நிமிராமல் ஒன்றும் நடக்காததைப் போல அமைதியாக சாப்பாட்டில் கவனமாக இருந்தான் வைகுந்தன்.

தன்னைச் சுற்றி நடக்கும் எதுவுமே கருத்தில் படாத ஆராதனாவின் உள்ளமெல்லாம் அன்னம்மா கூறிய வார்த்தைகளைச் சுற்றியே உழன்று கொண்டிருந்தது. அவள் சாப்பாட்டில் கவனம் இல்லாமல் எதையோ கொறித்தபடி அமர்ந்திருந்தாள்.

''அம்மா நான் கேட்டதுக்குப் பதிலே சொல்லலியே? இப்படித் திருட்டுத்தனம் பண்ணுகிற பசங்களைத்தான் அவங்க வீட்டில் நல்லவங்கன்னு நம்புறாங்கம்மா. என்னைப் போல வெகுளியாக இருக்கிறவங்களுக்கெல்லாம் காலமே இல்லை'' ராதிகாவின் பேச்சைக் கேட்ட ஆராதனா திடுக்கிட்டவளாகத் திரும்பி அவளை பார்த்தாள்.

''என்ன ஆரா... நாள் சொல்றது சரிதானே? நீயே சொல்லு...'' ராதிகா தன்னைப் பற்றித்தான் அனைவரும் முன்னிலையில் கூறுகிறாளோ என்ற சந்தேகத்தில் பதில் கூற முடியாமல் திகைத்தாள் ஆராதனா.

''ஏய் ஆரா... பதில் சொல்லுடி? நீயும் ஆன்ட்டியைப் போலவே அமைதியா இருக்க...'' தன் இடது கையை ஆராதனாவின் கை மேல வைத்த ராதிகாவின் கையை தன்னை அறியாமல் தட்டிவிட்டாள் ஆராதனா.

''ஆரா?!'' திகைத்து பார்த்தவளிடம் அடிக் குரலில் சீறினாள் ஆராதனா.

''வாயை மூடிக்கிட்டு சாப்பிடு ராதிகா. நான் உனக்கு அப்புறமா எல்லாத்தையும் சொல்றேன்'' அவள் எதைப் பற்றிக் கூறுகிறாள் என்பதை அறியாவிட்டாலும் கொஞ்ச நாட்களாக தான் ஆராதனாவின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டது சரிதான் என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டாள் ராதிகா.

''எதை...?''

''அதான் சொல்றேன்னு சொன்னேனில்ல? இப்ப பேசாம இரு'' அதற்கு மேல் அங்கிருக்க விருப்பம் இல்லாமல் சாப்பாட்டை பாதியிலேயே நிறுத்திவிட்டு எழுந்துவிட்டாள் ஆராதனா.

''என்னடா ஆரா இது... இப்பல்லாம் நீ சரியாகவே சாப்பிடுவது இல்லை. உடம்பே பாதியாக இளைச்சுடுச்சு பாரு. இப்படி இருந்தால் எப்படிம்மா...'' மகளது கை பிடித்து கெஞ்சாத குறையாக மன்றாடினாள் வாசுகி.

''எனக்குப் போதும்மா. பசிச்சா அப்புறமாய்க் கொஞ்சம் சாப்பிட்டுக்கிறேன்மா...'' தாயின் கையை எடுத்து விட்டு விட்டு கை கழுவிக் கொண்டு தன்னறைக்குள் சென்று விட்ட ஆராதனாவை சிந்தனையோடு பார்த்தாள் ராதிகா.



அவள் கொஞ்ச நேரம் அங்கேயே இருந்துவிட்டு யாரும் பார்க்காத போது ஆராதனாவின் அறைக்குள் நுழைந்து கதவடைத்து தாள் போட்டாள். கதவைப் பூட்டிக் கொண்டு ஆராதனாவிடம் சென்றவள் அவளது முதுகு அழுகையில் குலுங்கிக் கொண்டிருப்பதை அறிந்து வேகமாக அவள் அருகில் அமர்ந்து அவளைத் திருப்பி அவளது முகத்தைப் பார்த்தாள். தாங்க முடியாத வேதனையோடு தெரிந்த ஆராதனாவின் முகம் ராதிகாவின் உள்ளத்தில் பெரும் திகிலை உண்டாக்கியது.

''ஆரா... என்னடி ஆச்சு?'' கவலையுடன் கேட்ட ராதிகாவின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள் ஆராதனா.

சற்று நேரம் அவளை அழவிட்ட ராதிகா அவளது முதுகைத் தடவிக் கொண்டே அமைதியாக அமர்ந்திருந்தாள். ஆனால் ஆராதனாவின் அழுகை குறைவதாகத் தோன்றவில்லை அவளுக்கு.

''ஆராதனா... இப்ப அழுகையை நிறுத்தப் போறீயா இல்லையா? இப்படி அழுதழுது முகம் வீங்கிப் போனால் அப்புறம் வீட்டில் இருக்கிறவங்களை எப்படி பேஸ் பண்ணுவ?'' ராதிகா கூறுவதில் இருந்த நியாயம் புரிந்த ஆராதனாவின் அழுகை உடனடியாக நின்றது.

ஆராதனாவின் முகத்தை உயர்த்தி அவளது கண்களை துடைத்துவிட்ட ராதிகா எழுந்து சென்று அருகில் இருந்த தண்ணீர் ஜக்கில் இருந்து தண்ணீர் ஊற்றி அதை

ஆராதனாவிடம் நீட்டினாள். மறுபேச்சின்றி அதனை வாங்கி ஒரு நொடியில் குடித்துவிட்டு காலி டம்ளரை நீட்டிய ஆராதனாவை கேள்விக் குறியுடன் கூர்ந்து பார்த்தபடியே நின்றிருந்தாள் ராதிகா.



# 19

ஒற்றைப் பெண்ணாகப் பிறந்து வளர்ந்திருந்த ராதிகாவிற்கு இருக்கும் ஒரே தோழி ஆராதனாதான். உயிர் தோழி அவள். ஆராதனாவைத் தோழி என்பதை விட உடன் பிறந்தவளாக எண்ணியே பாசம் கொண்டிருந்தாள் ராதிகா.

சிறிய வயதில் இருந்தே ஒன்றாகப் படித்த ஒத்த வயதுள்ள தோழி என்பதால் ராதிகாவிடம் ஆராதனா எதையும் மறைத்ததில்லை. தன்னுடைய ஆசை, கனவு, தேவை என்று எதையும் யாரிடமும் வெளிப்படையாகக் கூறாத ஆராதனா அவை அனைத்தையும் ராதிகாவிடம் சொல்லத் தயங்கியதே இல்லை. ஆராதனாவைப் பொறுத்தவரையில் ராதிகா தன்னில் ஒரு பாகம் என்றே அதுவரை கருதி வந்தாள்.

ராதிகாவின் மீது கொண்ட அன்பினால்தான் அவள் வைகுந்தனிடம் நெருக்கம் காட்டியபோது அதுவரை தோன்றாத தனிமை உணர்வு ஆராதனாவிற்குள்



தோன்றியது. அந்தத் தனிமை உணர்வும் கூட தவறென்பதை ஆராதனா மனோஜை விரும்ப தொடங்கியதில் இருந்தே புரிந்து கொண்டாள். எனவே தான் தோழியை வைகுந்தனிடம் தனிமையில் பேசவிட்டு ஆராதனா விலகிச் சென்று கொண்டிருந்தாள்.

ஆனால் அவள் அப்படி விலகிச் சென்ற காரணத்தாலேயே ராதிகாவினால் ஆராதனாவிற்குத் தோன்றியிருந்த காதலை அறிய முடியாமல் போய்விட்டது. ஆராதனாவிற்கும் ராதிகாவிடம் தன் காதலைத் தெரிவிக்கும் எண்ணம் இல்லாமல் போய்விட்டது. அதுவரை இருந்த ஒற்றுமையான அன்னியோன்யத்தை அவரவர்களின் காதலால் தொலைத்துவிட்டு நின்றிருந்தனர் இரண்டு தோழிகளும்.

“ஆரா... இதுவரை நீ எதையும் என்னிடம் மறைச்சதே இல்லையே? இப்ப மட்டும் என்ன வந்தது?” ராதிகாவின் குரலில் இருந்த குற்றச்சாட்டை உணர்ந்து கொண்டாள் ஆராதனா.

“நான் மனோஜை லவ் பண்றேன்டி?” வேறு எந்த விளக்கமும் இல்லாமல் நேரடியாக ராதிகாவிடம் கூறிவிட்டாள் ஆராதனா.

அவளது வார்த்தைகளை நம்பவும் முடியாமல் தவிர்க்கவும் தோணாமல் அப்படியே அயர்ந்து அமர்ந்துவிட்டாள் ராதிகா.

“யார்... நம்ம வைகுந்தனோட எதிரி... ஸாரி ஸாரி... நம்ம சீனியர் மனோஜையா நீ லவ் பண்ற?”

''ஆமா... அவரைத்தான்.''

''என்னடி சொல்ற... இது எப்ப இருந்து நடக்குது? எனக்குத் தெரியாமல் இன்னும் நீ எதையெல்லாம் மறைச்சுத் தொலைச்ச?'' கோபத்துடன் கேட்ட ராதிகாவை அழுத்தமாகப் பார்த்தாள் ஆராதனா.

''லவ் பண்றது தப்பா ராதிகா? இதை நீ சொல்லலாமா? நான் என் மனதிற்குப் பிடித்தவரை விரும்பறேன். இதில் மறைக்க என்ன இருக்கு?''

''அப்புறம் எதுக்காகடி என்கிட்ட இதுவரை சொல்லாமல் இருந்த?''

''சொல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கல ராதிகா. நான் சொல்லணும்னு நினைக்கிறபோதெல்லாம் ஏதோ ஒரு எண்ணம் என்னைச் சொல்ல விடாமல் தடுத்து விட்டது.''

''ஆரா... எனக்கு என்ன சொல்வதுன்னே புரியலைடி. நீ சொல்வது போல லவ் பண்றது தப்பில்லைதான். ஆனால் அது நம் சூழ்நிலையைப் பொறுத்து தப்பாக மாறவும் வாய்ப்பு இருக்கு ஆரா...'' சிந்தனையுடன் தோழியின் முகம் பார்த்த ஆராதனாவின் விழிகள் கலங்கியது.

''ராதிகா..'' கலங்கிய கண்களுடன் அழைத்த ஆராதனாவின் குரலில் தெரிந்த வேதனை ராதிகாவை உலுக்கியது.

''ஆரா... அமைதியாக இருடி. நான் என்னால் முடிந்த உதவியைச் செய்யறேண்டி. கண்டிப்பாக உன் மனசுக்கு



பிடிச்சவரோட நீ வாழறதுக்கு என்னவெல்லாம் செய்யணுமோ அதையெல்லாம் நான் செய்யறேண்டி. கவலைப்படாதே'' தோழியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்து கொண்ட ஆராதனாவின் கைகள் நடுங்குவதை ராதிகாவால் உணர முடிந்தது.

அதிர்ந்து பேசக் கூடத் தெரியாத, எல்லோருக்கும் நன்மை செய்யும் குணமுடைய, துன்பத்தைக் கூட வெளியில் காட்டாமல் தனக்குள்ளேயே புதைத்துக் கொள்ளும் மென்மையான குணம் படைத்த ஆராதனாவின் மனமறிந்து அவளுடைய அன்புக்கு உரியவன் நடந்து கொள்வானா என்ற கவலை தோன்றியது ராதிகாவிற்கு.

''ஆரா... மனோஜைப் பற்றி உனக்கு என்ன தெரியும்... அவர் ஊர்...''

''அவரோட ஊர் பக்கத்தில் இருக்கும் தாழம்பட்டி கிராமம். அப்பா பேர் நல்லுச்சாமி. விவசாயம் பண்றார். அம்மா தமயந்தி.. ஹவுஸ் ஒய்ஃப். இவர் அவர்களுக்கு ஒரே மகன்தான். இவரோட அப்பாவும் அம்மாவும் கூட லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டவங்க தானாம். அதனால அவரோட சைடில் எங்களோட மேரேஜுக்கு எதிர்ப்பு இருக்காது...''

''பரவாயில்லடி. இத்தனை டீடெய்ல்ஸ் தெரிஞ்சு வெச்சிருக்கிற! ஆமா... ஊரில் அவங்களுக்கு சொந்தமா சொத்து பத்து ஏதாச்சும்...''

''ம்ம்ம்... ஒரு வீடும், மோட்டார் கிணறும், ஐந்து ஏக்கர் நிலமும் இருக்குடி. அவங்க தோட்டத்தில் காய்கறி,

வாழை தோப்பு, தென்னந்தோப்பு, நெல் வயல் எல்லாம் இருக்குதான். அதோட அந்த ஊரிலேயே இவங்க கிணத்தில்தான் தண்ணீர் வற்றாம இருக்குமாம்...'' நந்தன் கிரானைட்ஸ் ஓனரின் மகளும் மிகப் பெரிய கோடீஸ்வரியுமான ஆராதனா அந்த ஐந்து ஏக்கர் நிலத்தைப் பற்றிக் கண்கள் விரிய பெருமையாகக் கூறுவதைக் கேட்ட ராதிகாவிற்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

காதல்தான் ஒருவரை எப்படியெல்லாம் ஆக்கி விடுகிறது! பணத்திலேயே பிறந்து, செல்வாக்கோடு வளர்ந்து, வசதி வாய்ப்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் பங்களாவாசியான ஆராதனாவை ஓட்டு வீட்டில், விவசாயி மகனோடு கிராமத்தில் வாழ்வதைப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் எண்ண வைத்து விட்டது அது. இந்தக் காதல் மனிதருக்கு வரமா... சாபமா... என்ற சிந்தனை ராதிகாவின் மனதில் தோன்றியது. அவள் ஒரு தீர்மானத்தோடு ஆராதனாவைப் பார்த்தாள்.

''ஆரா.. என்னுடைய லவ் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்னுடைய அதிர்ஷ்டம்னுதான் சொல்லணும். ஏன்னா உலகத்தில் இருக்கும் முக்கால் வாசி பெத்தவங்க காதலை முழு மனதாக ஏற்றுக் கொள்வது இல்லை. ஒருவேளை நான் அந்தஸ்திலும், மற்றவற்றிலும் உங்களோடு ஒத்துப் போவதால் என் காதல் சக்சில் முடிந்திருக்கலாம். ஆனால் உன் கதை அப்படி இல்லை ஆராதனா...''



''தெரியும் ராதிகா...''

''புத்திசாலி ஆராதனா. அதே நேரத்தில் மிகவும் மென்மையானவ. உன்னை உன் அருமை தெரிஞ்சு வெச்சிருக்கிற ஒருத்தனால தான் உன் வாழ்வை சந்தோசமாக்க முடியும் ஆரா...''

''அவர் செய்வார் ராதிகா...''

''உனக்கு அவர் மேல் அத்தனை நம்பிக்கை இருந்தால் நல்லதுதான் ஆரா. ஆனால் உன் மனசுப்படி எல்லாம் நடக்க கொஞ்சம் நாளாகும். அப்படி நாள் கழிச்சுக் கூட எத்தனையோ எதிர்ப்புகளையும், தடைகளையும் நீ சமாளிக்கணும்.''

''சமாளிப்பேன் ராதிகா...''

''ஒருவேளை உன் காதலுக்கு அம்மாவும் அப்பாவும் சம்மதிக்கலேன்னாக் கூட நீ மனசு ஒடிஞ்சிரக்கூடாது. பொறுமையா காத்திருந்து அவங்க மனசை மாத்த டிரை பண்ணனும். அப்படி இருக்காமல் தப்பான எந்த முடிவுக்கும் நீ போயிரக் கூடாது ஆரா. எனக்குச் சத்தியம் செய்து கொடு...'' தன் முன் நீண்ட ராதிகாவின் கரத்தின் மேல் ஒரு நொடி கூட யோசிக்காமல் கை வைத்தாள் ஆராதனா.

''நான் கோழையில்லை ராதிகா. நிச்சயம் போராடுவேனே ஒழிய தப்பான எந்த முடிவுக்கும் போக மாட்டேன்'' ஆராதனாவின் குரலில் தெரிந்த உறுதியைக் கண்டு நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டாள் ராதிகா.



# 20

தன்முன் இருந்த லேப் டாப்பில் கவனமாக இருந்த மனோஜின் முகத்தில் இருந்த தீவிரத்தைக் கவனித்துக் கொண்டே வீட்டைச் சுற்றி இருந்த தோட்டத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தாள் தமயந்தி.

முன்புறம் ஒரு சிறிய வராண்டா, உள்புறம் ஒரு ஹால், அதன் ஒரு பக்கம் படுக்கையறை, அடுத்த பக்கம் சமையல் அறை என்ற அமைப்பில் அளவாக இருந்தது அவர்களது வீடு. தற்சமயம் ஓட்டு வீடாக இருந்தாலும் கூடிய விரைவில் அந்த ஓட்டைப் பிரித்து கான்க்ரீட் போட்டுவிட வேண்டும் என்பது நல்லுச்சாமியின் ஆசை. மகனது திருமணத்தைத் தங்களது புதிய வீட்டில் தான் நடத்த வேண்டும் என்ற கனவு தமயந்திக்கும் இருந்தது.

வீட்டைச் சுற்றியிருந்த பகுதியை மூங்கில் தட்டி கொண்டு காம்பவுண்டுச் சுவரைப் போல மறைத்துக் கட்டி அதை ஒரு தனி வீடாக மாற்றியிருந்தாள் தமயந்தி. வீட்டின் அருகில் சற்று தள்ளி மாமரம் கிளைகளைப் பரப்பி நிற்க அதன் அருகில் எலுமிச்சை மரம் உடலெங்கும் கனிகளைச் சுமந்து தள்ளாடிக் கொண்டிருந்தது. வீட்டின் முன்புறம் நிரந்தரமாக இருக்கும்படியாக பந்தல் போட்டு அதனடியில் கயிற்றுக்



கட்டில்கள் இரண்டினையும் போட்டு வைத்திருந்தாள் தமயந்தி. மனோஜிற்கு வீட்டின் முன்புறம் இருக்கும் கட்டிலில் அமர்ந்து படிப்பதுதான் மிகவும் பிடிக்கும்.

அன்னையின் கை வண்ணத்தில் செழிப்பாக வளர்ந்து பந்தலாக்கி படர விடப்பட்டிருந்த ஜாதிமல்லிக் கொடியில் இருந்து மலர்களின் நறுமணம் சூழ்ந்திருக்க சுத்தமான காற்று உடல் தழுவிச் செல்ல கட்டிலில் கால் நீட்டி ஒருக்களித்துப் படுத்தபடியே தான் படித்துக் கொண்டிருப்பான் மனோஜ். மகன் படிக்கத் தொடங்கி விட்டால் அவனுக்கு எந்தவிதமான இடையூறும் வந்து விடாமல் கவனித்துக் கொள்வதை ஒரு கடமையாகவே எண்ணி செயல்படுத்திக் கொண்டிருப்பாள் தமயந்தி. அந்த நேரத்தில் நல்லுச்சாமிகூட குரல் உயர்த்திப் பேச முடியாது. மனைவியின் கோபத்திற்குப் பயந்து வாய் திறக்காமல் அமைதி காத்து விடுவார் அவர்.

படிப்பென்று வந்துவிட்டால் உணவு கூட உண்ணப் பிடிக்காமல் வெறி பிடித்தவனாக மனோஜ் இருப்பது தமயந்திக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.

மாமர இலைகளைக் கூட்டி அள்ளி சற்றுத் தள்ளி இருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு எலுமிச்சைக் கனிகளைப் பறிக்கத் தொடங்கினாள் தமயந்தி. அந்த ஊரில் தமயந்தியின் கையால் செய்யப்பட்ட எலுமிச்சை ஊறுகாய்க்கு மதிப்பு அதிகம். சுத்தமான நல்லெண்ணெய் மற்றும் தமயந்தியின் கை வண்ணமும் கலந்த நறுமணத்தோடு சுவையும் கூடிய தமயந்தியின் ஊறுகாய் அவள் தயாரித்த அன்றே விற்றுத் தீர்ந்துவிடும்.

நல்லுச்சாமி மனைவியின் உழைப்பை எதிர்பார்க்காத அவள் ஊறுகாய் தயாரிப்பதை ஆரம்பத்தில் எதிர்த்தாலும் தமயந்தியின் வேண்டுகோள் மற்றும் பிடிவாதத்திற்குப் பணிந்து அதற்கு அனுமதி அளித்திருந்தார். ஆனால் ஊறுகாய் தேவைப்படுபவர்கள் அவர்களது வீட்டிற்கு வந்துதான் வாங்கிச் செல்ல வேண்டும் என்ற ஒரே கண்டிசனோடு அதற்கு அனுமதி அளித்திருந்தார் அவர். அதன் மூலம் வரும் வருமானத்தை தமயந்தியின் பெயரில் போஸ்ட் ஆபீசில் மாதா மாதம் கட்டிவிடுவார் நல்லுச்சாமி. அதுவும் ஒரு வகையான சேமிப்பு தானே என்ற எண்ணத்தில் கணவரைத் தடுக்க மாட்டாள் தமயந்தி.

"ம்ம்ம்... தமயந்தி உன் கைப்பக்குவமே தனிதான்டி. மீன் குழம்பு வாடை பத்து வீடு தாண்டியே வீசுதே. வாவா சாப்பாடு வை" மகனைக் கவனிக்காமல் உற்சாகமாக குரல் கொடுத்தபடி வந்த நல்லுச்சாமியை வேகமாக அருகில் வந்து தடுத்தாள் தமயந்தி.

கேள்வியாகப் பார்த்தவரிடம் மகனைக் கைகாட்டி விட்டு வீட்டிற்குள் நுழைந்த மனைவியின் பின்னாலேயே அமைதியாக வந்தார் நல்லுச்சாமி.

சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு துண்டை எடுத்துக் கொண்டு வெளியேறிய நல்லுச்சாமி வீட்டிற்கு சைடில் இருந்த சிமிண்ட் தொட்டியில் இருந்த தண்ணீரை அள்ளி முகம் கை கால்களை கழுவிக் கொண்டு துண்டால் துடைத்தபடியே மனோஜின் எதிரில் இருந்த மற்றொரு கட்டிலில் வந்து அமர்ந்தார் நல்லுச்சாமி.



தந்தை வந்ததைக் கூட கவனத்தில் கொள்ளாமல் தன் வேலையிலேயே தீவிரமாக இருந்த மனோஜை கேள்விக் குறியாக பார்த்த நல்லுச்சாமி மெதுவாகத் திரும்பி மனைவியை நோக்கினார்.

"சாப்பிட்டுவிட்டுப் படிக்கலாம் மனோஜ். நீ வீட்டில் வயிறார சாப்பிடுவதே ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தான். இப்பக்கூட இப்படி வேலை பார்த்துக்கிட்டு இருந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்? மூளைக்கும் கொஞ்சம் ஓய்வு வேணும்ப்பா."

தந்தையின் பேச்சு கவனத்தைத் திருப்ப அவரை நிமிர்ந்து பார்த்தான் மனோஜ்.

"நீங்க சாப்பிடுங்கப்பா... எனக்கு நிறைய வேலை பாக்கி இருக்கு. அதையெல்லாம் முடிச்சாத்தான் என்னால நிம்மதியா உட்கார முடியும்..." மீண்டும் லேப் டாப்பில் கவனமாகி விட்டான் மனோஜ்.

"இல்ல தம்பி... அப்பா உன் கூட சேர்ந்து தான் சாப்பிடுவாங்க. வாய்யா... வந்து ஒருவாய் சாப்பிட்டுவிட்டு அப்புறமா வேலையைப் பாரு. உன்னை நாங்க தொந்தரவு பண்ண மாட்டோம்" அன்னையின் மெல்லிய குரலில் அதுவரை செய்திருந்த வேலைகளை கவனமாக பத்திரப்படுத்தி விட்டு லேப் டாப்பை மூடினான் மனோஜ்.

அவன் வருவதற்குள் அவர்கள் அமருவதற்காக வீட்டின் முன்புறம் இருந்த பந்தலிலேயே பாயைக் கொண்டு வந்து விரித்துவிட்டு சமைத்த உணவு

வகைகள் இருந்த பாத்திரங்களை அதன் முன் கொண்டு வந்து வைத்தாள் தமயந்தி.

தலைவாழை இலைகளை சிமிண்ட் தொட்டியில் இருந்த தண்ணீரில் கழுவிக் கொண்டு வந்து மூவருக்கும் விரித்து போட்டார் நல்லுச்சாமி. கணவர் கொண்டு வந்த விரித்த இலைகளில் பொரித்த மீன் துண்டுகளை வைத்தாள் தமயந்தி. மனோஜிற்கு மீன் என்றால் மிகவும் பிடிக்கும். அதிலும் பொரித்த மீன் துண்டுகளை அவன் மிகவும் விரும்பிச் சாப்பிடுவான். மகனது விருப்பத்திற்காகவே தோட்டத்துக் கிணற்றில் மீன்களை வளர்த்தார் நல்லுச்சாமி.

மிதமான சூட்டுடன் இருந்த மீன் துண்டை வாயில் வைத்த மனோஜின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள் தமயந்தி. சமைத்த உணவினை மகன் விரும்பிச் சாப்பிடுவதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பது தமயந்தியின் வழக்கம். அன்னையின் சமையலை எதையாவது சொல்லிப் பாராட்டிக் கொண்டே சாப்பிட்டால்தான் மனோஜிற்கும் திருப்தியாக இருக்கும். ஆனால் அன்று அவனது கவனம் முழுவதும் வேறு அங்கோ இருப்பதைப் போல உணவினை கடமைக்காக உண்டு கொண்டு இருந்தான் மனோஜ்.

''என்ன தம்பி... சாப்பாடு நல்லா இல்லையா?'' மனைவியின் குரலில் தெரிந்த ஏமாற்றத்தைக் கவனித்த நல்லுச்சாமியின் பார்வை திரும்பி அருகில் அமர்ந்திருந்த மகனது முகத்தில் பதிந்தது.

''மனோஜ்... சாப்பாட்டில் கவனம் வைத்து சாப்பிடு. படிப்பை எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்.



சாப்பிடுவதில் கவனம் இல்லாமல் சாப்பிட்டால் உணவு உடம்பில் ஒட்டாது'' கண்டிப்புடன் கூறிய தந்தையை கவலையுடன் பார்த்தான் மனோஜ்.

''இல்லப்பா. இது படிக்கிற விசயம் இல்லை. எங்க காலேஜில் அடுத்த வாரம் கேம்பஸ் இண்டர்வியூ இருக்கு. அதுக்குத் தயாராகிக்கிட்டு இருக்கேன்.''

மகன் கூறியது புரியாமல் நல்லுச்சாமியும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதைக் கவனித்து புன்னகைத்தான் மனோஜ்.

''கேம்பஸ் இண்டர்வியூன்னா... பெரிய பெரிய கம்பெனிகளில் இருந்தும்.. சின்னக் கம்பெனிகளில் இருந்தும்... காலேஜிக்கே வந்து வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பார்கள் அம்மா. அதில் தேர்வாகிவிட்டால் படிப்பு முடிந்தவுடன் வேலை தேடி அலையாமல் அந்தந்த கம்பெனிகளில் போய் ஜாயின் பண்ணிக் கலாம்...''

''படிக்கும்போதே வேலைக்கா...!'' ஆச்சரியமாக வாய் பிளந்தாள் தமயந்தி.

''ஆமாம்மா. இது நமக்கு மிகப்பெரிய வாய்ப்பு. எங்க காலேஜ் கொஞ்சம் பெரிய காலேஜுன்றதால பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் வந்து வேலைக்காக ஆட்களை தேர்ந்தெடுப்பாங்கப்பா. அதுக்கான பிரசன் டேசனைத்தான் நான் ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன். இதைப் பார்த்து அவங்க இம்ப்ரெஸ் ஆகிட்டாங்கன்னா உங்க மகனோட வாழ்க்கையே ஒரு பெரிய லெவலுக்குப்

போய்விடும்மா. அதான் ரொம்பக் கவனமா ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன்..." தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே கூறிய மனோஜின் கண்களில் தெரிந்த கனவுகளை தமயந்தியின் அன்னை உள்ளம் புரிந்து கொண்டது.

"கவலைப்படாதே மனோஜ். உன் திறமை மேல எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கு. கண்டிப்பா நீ நினைக்கிற இடத்துக்கு உன்னால உயர முடியும். உன் உழைப்புக்கேற்ற மரியாதை நிச்சயம் கிடைக்கும்ப்பா. ஆனால் பயப்படாம வேலையைப் பாரு. பயத்தை விட தன்னம்பிக்கைதான் என்னிக்கும் கை கொடுக்கும். கவனமாக இருந்தால் எல்லாவற்றிலும் ஜெயிக்கலாம் மனோஜ்... நீ ஜெயிக்கப் பிறந்தவன்டா..." பாதி பெருமையும் மீதி நெகிழ்வுமாக மகனிற்கு நம்பிக்கை கொடுத்த நல்லுச்சாமி தன் கலங்கிய கண்ணைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.



## 21

அடுத்த ஒரு வார காலமும் காலேஜே திருவிழா கோலம் கொண்டது. இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்கள் அனைத்திலும் இருந்து வந்த நிர்வாகப் பிரதி நிதிகளுக்குத் தேவையான வசதிகளை கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக சிறப்பாகச் செய்து கொடுத்



திருந்தான் மனோஜ். அவன் மாணவர் தலைவன் என்பதால் அனைத்தையும் அவனே முன்னின்று செய்து கொடுக்க, மனோஜின் ஆளுமைத் திறமையையும் சமயோசிதப் புத்தியையும் அனைத்து நிறுவனத்தின் நிர்வாகிகளும் நேரடியாகத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது அது.

அவனது தன்னம்பிக்கை நிறைந்த வார்த்தைகளும் அவன் தயாரித்திருந்த பிரசன்டேசனும் மனோஜிற்கு ஐந்து மிகப்பெரிய கம்பெனிகளின் வேலையை வாங்கிக் கொடுத்தது. படிப்பிலும் அவன்தான் முன்னணியில் இருக்கும் மாணவன் என்பதால் அந்த நிறுவனங்கள் அனைத்துமே மனோஜை வேலைக்கு அமர்த்திக் கொள்ள விரும்பி போட்டிப் போட்டது. எவருக்கும் கிடைக்காத வாய்ப்புகளைத் தன் உண்மையான உழைப்பினால் தனதாக்கிக் கொண்ட மனோஜ் அந்த மமதை எதுவும் இல்லாமல் அமைதியாகவே வலம் வந்து கொண்டிருந்தான்.

ஆனால் ஆராதனாவின் கால்களோ தரையில் நிற்கவே இல்லை. அவள் வானத்தில் மிதப்பவளைப் போல மனதாரப் பறந்து கொண்டிருந்தாள். ஒரு இடத்தில் அமர முடியாமல் நெளிந்து கொண்டும், விரல் நகங்களை கடித்துக் கொண்டும் அமர்ந்து இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்த ஆராதனாவை பாடம் நடத்திக் கொண்டிருந்த புரபசர் பலமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த ராதிகா ஆராதனாவின் கையில் ஒரு கிள்ளுக் கிள்ளி அவளை அடக்க முயன்றாள்.

ஆனால் பலமுறை ராதிகா அழுத்திக் கிள்ளியதில் அவள் கைதான் வலித்ததேயொழிய ஆராதனாவிற்கு அதெல்லாம் உரைத்ததைப் போலவே இல்லை. அவள் கிளாஸ் முடியும் நேரத்திற்காக காத்திருப்பவளைப் போல தன் கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும் வெளியே பார்ப்பதுமாக உட்கார முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். கிளாஸ் முடிந்ததற்கான அறிகுறியாக மணி ஒலித்த வுடன் வெளியே ஓடிய ஆராதனா ராதிகாவிடம் கூட சொலலிக் கொள்ளத் தோன்றாமல் மனோஜைத் தேடி ஓடினாள்.

அதுவரை ஆராதனா தன்னுடைய வகுப்பறைக்குத் தன்னை தேடி வந்திராத காரணத்தால் தன் வகுப் பறைக்கு முன்பாக அவள் வந்து நின்றவுடன் வேகமாக வெளியே வந்தான் மனோஜ். அவனுக்கு கண் ஜாடை காட்டிவிட்டு நடந்த ஆராதனா நேராக மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் ஏற ஆரம்பிக்க ஒன்றும் பேச தோன்றாமல் அவளைப் பின் தொடர்ந்தான் மனோஜ்.

பிறர் அறிய மனோஜை பார்ப்பதைத் தவிர்க்கும் ஆராதனா அன்று தானாக அவனைத் தேடி வகுப் பறைக்கே வந்ததையும், அவன் பின்தொடர தனி மையைத் தேடிச் செல்வதையும் மனோஜ் மிகவும் விரும்பினான். அவனது வெற்றியை தனது வெற்றியாக கொண்டாடும் ஆராதனாவின் செயலை அவன் மனப் பூர்வமாக நேசித்தான்.

மொட்டை மாடிக்குச் செல்லும் படிக்கட்டின் இறுதியில் இருக்கும் மேடையில் அமர்ந்த ஆராதனா



அவளது அருகில் வந்து அமர்ந்த மனோஜின் கன்னத்தில் அழுத்தமாக ஒரு முத்தம் பதித்தாள்.

''ஏய்... என்னடி இது? அதிர்ச்சிக்கு மேல அதிர்ச்சி யாகக் கொடுக்கற? என்னிக்கும் இல்லாமல் என்னைத் தேடி வந்திருக்க. நான் கேட்காமலேயே முத்தமெல் லாம்...'' சொல்லிக் கொண்டிருந்த மனோஜை அதற்கு மேல் பேசவிடாமல் தன் இதழ்களால் அவனது வாய் மூடி அவனது மடியில் சாய்ந்து கொண்டாள் ஆராதனா. அவளை இறுக்கி தன்னுடன் அணைத்துக் கொண்ட மனோஜ் வெகுநேரம் அங்கு அமர்ந்திருப்பதை விரும் பாதவனாக அவளை உடனடியாக விடுவித்தான்.

''நீ கிளம்பு ஆராதனா. யாராவது பார்த்தால் தப்பாக பேசுவாங்க...'' கூறிய மனோஜை ஏமாற்றத்துடன் ஏறிட்டாள் ஆராதனா.

''நான் எவ்வளவு ஆசையா ஓடி வந்தேன்? இப்படி விரட்டுறீங்களே மனோஜ். உங்களை வாழ்த்துவதற் காவது டைம் குடுங்களேன்...'' கெஞ்சிய ஆராதனாவின் தோள்களில் கை போட்டுக் கொண்டான் மனோஜ்.

''வாழ்த்துவதென்ன ஆராதனா... ட்ரீட் வெச்சே கொண்டாடலாம். ஆனால் அதையெல்லாம் நாளைக்கும் காலேஜுக்கு வெளியில் வெச்சுக்கலாம். இப்பக் கிளம்பலாம் ஆராதனா. சொன்னால் புரிஞ்சுக்க...''

''ஏன் இப்படி இருக்கீங்க மனோஜ்? யாராவது பார்த்தால் என்னன்னு என்னிடம் லவ் சொன்ன முதல் நாளே கேட்ட நீங்களா இப்ப இப்படிப் பேசறீங்க?

என்னோட காதல் உங்களுக்கு அலுத்துவிட்டதா மனோஜ்?'' ஏமாற்றத்தின் வேகம் தாங்காமல் பொரிந்து தள்ளினாள் ஆராதனா.

''டேய்... என்னைப் பார்த்து இப்படியெல்லாம் கேட்க உனக்கு எப்படி மனசு வந்தது ஆராதனா? நான் உன் மேல எவ்வளவு அன்பு வெச்சிருக்கேன்றது உனக்குத் தெரியாதா? நீ என் உயிர்டி. நான் சாதிக்கிற சாதனைக் களுக்கெல்லாம் தூண்டுகோலா இருக்கிறது உன்மேல நான் வெச்சிருக்கிற அன்புதான்டி. உன்னை மகா ராணியாக வாழ வைக்கிறதுக்காகத்தான்டி நான் இவ்வளவு பாடுப்பட்டுக்கிட்டு இருக்கேன். அதைப் புரிஞ்சுக்காம எப்படியெல்லாம் பேசிட்ட நீ?'' வேதனை யுடன் பேசிய மனோஜை ஏமாற்றம் மாறாமல் பார்த்தாள் ஆராதனா.

''பின்ன என்ன மனோஜ்? நானே உங்க சொந்தம்கிற போது நம்மைச் சேர்த்து வச்சு யார் பார்த்தால் என்ன? எதுக்காக இப்படி பயப்படுறீங்க?''

''இது பயம் இல்லை ஆராதனா. பொறுப்புணர்ச்சி. என்னோட ஆராதனாவைப் பத்தி யாரும் தவறாப் பேசிவிடக்கூடாது என்கிற பொறுப்புணர்ச்சி. அத்தோட நம்மைப் பத்தி நம்ம வீட்டில் நாம் சொல்வதற்கு முன்னாடி வேற யாரும் போய் சொல்லிடக்கூடாதுன்னு நான் நினைக்கிறேன் ஆராதனா. அதனாலதான் இப்படிச் சொல்றேன்'' அவளது தோள்பற்றி எழுப்பியபடியே பேசிய மனோஜின் முகம் பார்ப்பதைத் தவிர்த்தவளாக அந்த இடத்தை விட்டு எழுந்தாள் ஆராதனா.



''இப்ப எதுக்காக இப்படி மூஞ்சியைத் தூக்கி வெச்சுக் கிட்டு இருக்க ஆராதனா? நான் சொல்வது உனக்குப் புரிந்ததா இல்லையா?''

''எல்லாம் புரியுது. ஆனால் அப்புறம் எப்படி நாளைக்கு எனக்கு ட்ரீட் வெப்பீங்களாம்? அப்ப உங்களோட இந்தப் பாலிசி எங்க போகுமாம்?'' நம்பாமல் கேட்டவளைத் திருப்பி அவள் கண்களை உறுதியாகப் பார்த்தான் மனோஜ்.

''அதை நான் பார்த்துக்கறேன் ஆராதனா. கண்டிப்பாக திருட்டுத்தனமா உன்னைக் கூட்டிக்கிட்டுப் போக மாட்டேன். அதை மட்டும் உறுதியாக நம்பு.

அவனைப் பார்த்து நம்பாமல் தலையாட்டிவிட்டு வேகமாக ஆராதனா அங்கிருந்து இறங்கிச் சென்றுவிட மனோஜ் சிறிது நேரம் அங்கேயே சிந்தனையுடன் அமர்ந்துவிட்டான். பின் ஒரு முடிவுக்கு வந்தவனாக எழுந்து கீழே இறங்கினான் அவன்.

வேகமாக இறங்கி வந்த ஆராதனாவிற்காகக் காத் திருந்த ராதிகா அவளை எந்தக் கேள்வியும் கேட்கா தவளாக அமைதியுடன் ஆராதனாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள். தான் சொல்லாமலேயே தன் மன உணர்வுகளைப் புரிந்து கொண்ட ராதிகாவின் தோளில் கண்ணீருடன் தலைசாய்த்துக் கொண்டாள் ஆராதனா.

வழக்கப்படி சாப்பிடுவதற்காக அழைத்துச் செல்ல வந்த வைகுந்தனைப் பார்த்து அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்ட ஆராதனாவின் கையை ஆதரவாக பற்றிக் கொண்டாள் ராதிகா.



# 22

காற்றைக் கிழித்துக் கொண்டு மனோஜின் பைக் பறந்து கொண்டிருக்க அவனுக்குப் பின்னால் அமர்ந்திருந்த ஆராதனாவின் நீண்ட பின்னல் காற்றில் பறக்க அதை எடுத்து முன்னால் போட்டு கையால் அணைத்துக் கொண்டாள் அவள்.

அவளது அசைவால் லேசாக வண்டி குலுங்க பதட்டத்துடன் திருப்பிப் பார்த்த மனோஜின் காதருகில் வாய் வைத்துக் காரணத்தைக் கூறினாள் ஆராதனா. அதைக் கேட்ட மனோஜின் முகம் காதலால் மின்ன அவன் ஒரு கையால் வண்டியை ஓட்டிக் கொண்டே மறு கையைப் பின்னால் கொண்டு வந்து ஆராதனாவைத் தன்னோடு நெருக்கமாக அமர வைத்துக் கொண்டான்.

மனோஜின் இடையை வளைத்துக் கட்டிக் கொண்ட ஆராதனா அவனது தோள் வளைவில் தலை சாய்த்து அமர்ந்து கொண்டாள்.

முதல் நாளில் ஆராதனாவிடம் அவன் கூறியதை உண்மையாக்கிக் காட்டிய மனோஜின் ஆளுமையில் தன்னைப் பறிகொடுத்த ஆராதனாவின் பெண்மை அவளிடம் தஞ்சம் கொண்டது.

ஏமாற்றத்தை வெளிக்காட்ட முடியாமல் அமர்ந்திருந்த ஆராதனாவின் தவிப்பைப் புரிந்து கொண்ட



வனாக அவள் முன்பாக உணவுத் தட்டை வைத்து விட்டு வைகுந்தனின் அருகில் அமர்ந்து கொண்டாள் ராதிகா.

“நான் இந்த மனோஜ் பயலை என்னவோ என்று நினைச்சேன் ராதி. ஆனால் அவன் உண்மையிலேயே திறமைசாலிதான். இன்னிக்கு நம்ம காலேஜ் ஹீரோ இவன்தான் ராதி...” பொறாமை அற்ற குரலில் மனதார மனோஜைப் பாராட்டினான் வைகுந்தன்.

மனோஜின் பெயரைக் கேட்டவுடன் ஒளி பெற்ற ஆராதனாவின் கண்களைப் பார்த்த ராதிகா எதுவும் கூறாமல் அமைதியாக இருந்தாள்.

“ஒண்ணு ரெண்டு இல்லை ராதிகா. மொத்தமாக ஐந்து கம்பெனிகள் அவனை வேலைக்கு அமர்த்திக் கொள்ள போட்டி போட்டுக் கூப்பிடுது. சம்பளம் எவ்வளவு தெரியுமா ராதி... மன்த்லி ஒன் லேக் கொடுக்கக் கூட ரெடியா இருக்காங்க... பெரிய விசயம் தான் இது...”

“.........”

“ஒரு பிரெஷ் கேண்டிடேட்டுக்கு இவ்வளவு சேலரி கொடுக்க ரெடியா இருக்காங்கன்னா அவங்க இவனோட திறமை மேல எவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்கணும்!”

“......”

“மனோஜ் ஒரு பிரசன்டேசன் கொடுத்திருந்தான் பாரு... ப்பா... நான் பார்த்து அசந்துட்டேன் தெரியுமா!

இவனுக்குள்ள இவ்வளவு டேலண்ட் இருக்குன்றது எனக்கு இன்னிக்குத்தான் புரிஞ்சது ராதிகா. ரியலி வெரி வெரி பிரிலியண்ட் கை ஹி இஸ்...''

''.......''

''இப்பவே இவ்வளவு திறமை இருக்குன்னா இன்னும் ஒர்க் பண்ணப் பண்ண இவனோட நாலெட்ஜ் எங்கயோ போயிடும். இவன் ரொம்ப சீக்கிரத்திலேயே முன்னுக்கு வந்துவிடுவான் ராதிகா.''

''..........'' மனோஜைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்ததில் ராதிகாவின் மௌனத்தைக் கவனிக்காத வைகுந்தன் பேசி முடித்தவுடன் ராதிகாவைக் கேள்வியாகப் பார்த்தான்.

''என்ன ஆச்சு உங்க ரெண்டு பேருக்கும்? வாய் ஓயாமல் சளசளன்னுக்கிட்டு இருப்பீங்க... இன்னிக்கு இவ்வளவு அமைதியாகிட்டீங்க!''

''நீ எந்த இன்டர்வியூவிலும் கலந்துக்கலியா வைகுந்த்...?'' கேட்டவளிடம் அலட்சியமாக தோள் குலுக்கினான் வைகுந்தன்.

''இல்ல ராதி. நம்ம கம்பெனிகளைப் பார்த்துக்கவே ஆள் இல்லாமல் இருக்கு. இதில நான் இன்னொரு கம்பெனியில வேலை தேடிப் போகணுமா? அத்தோட அந்த வாய்ப்பு வேலை தேடற இன்னொருத்தனுக்குக் கிடைச்சா நல்லதுதானே. அதான் நான் எதிலயும் கலந்துக்கல...''

''ஓஹோ!'' ஒற்றை வார்த்தையில் பேச்சை முடித்துக் கொண்ட ராதிகாவை வியப்புடன் பார்த்தான் வைகுந்தன்.



''ஏய்... என்னதாம்ப்பா ஆச்சு உனக்கு? நான் இதில் கலந்துக்கிட்டு ஜெயிச்சு வரலேன்னு கஷ்டமா இருக்கா?''

''ப்ச்... இல்ல...''

''அப்புறம் என்னடி ஆச்சு...'' கேட்டவனின் கண்ணோடு கண் கலந்தாள் ராதிகா.

''வைகுந்த்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மனோஜை பாராட்டி பேசுனியே... அது உண்மையா? உனக்கு அவன் மேல கோபமோ பொறாமையோ இல்லியா?''

''சத்தியமா இல்ல ராதி. நான் மனசாரத்தான் பாராட்டினேன். ஏன் கேக்குற?''

''இல்ல... அவர் கூடிய சீக்கிரத்தில் முன்னுக்கு வந்துடுவார்னு சொன்னியே... அது உண்மைதானா?''

''ஆமாம். உண்மைதான். ஆனா நீ எதுக்காக இப்ப அவனை இவ்வளவு மரியாதையா 'அவர்' போட்டுப் பேசிட்டிருக்க சந்தேகமாகக் கேட்ட வைகுந்தனின் காலில் பிறர் அறியாமல் மேஜைக்கடியிலேயே ஒரு உதை கொடுத்தாள் ராதிகா.

''கொன்னுடுவேன்... கொன்று. சந்தேகமாகவா கேள்வி கேக்கிற? நான் எனக்காகப் பேசலைடா...''

''என்னடி... மிதிச்சதும் இல்லாம டா போட்டு வேற கூப்பிடுற?'' அப்பாவியாக வாய் பிளந்தான் வைகுந்தன்.

''அத்தோட விட்டேனேன்று சந்தோசப்படு. புரிஞ்சுதா? முதல்ல நான் கேட்டதுக்கு ஒழுங்காப் பதில் சொல்லு...?''

"அதான் அப்பவே சொல்லிட்டேனேடி. வரவர நீ லேடி ரௌடி மாதிரி பிஹேவ் பண்ற ராதிகா. இப்படியே போச்சுன்னா நம்ம மேரேஜ் ஐடியாவையே கேன்சல் பண்ண வேண்டியதாக இருக்கும்... பார்த்துக்க" அவனது எச்சரிக்கையை சட்டை பண்ணாமல் அவனைக் கூர்ந்து பார்த்தாள் ராதிகா.

"வைகுந்த்.. இத்தனை டேலண்ட் இருக்கிறவனை நாம நம்மளோட சொந்தமாக்கிக்கிட்டா தப்பில்லை தானே?" அருகில் ஆராதனா இருக்கும் நினைவில்லா தவள் போல காதலுடன் தன் கையைப் பிடித்துக் கொண்ட ராதிகாவை புரியாமல் பார்த்தான் வைகுந்தன்.

"சொந்தமாகவா... என்ன ராதி சொல்ற... நம்ம கம்பெனி எதிலாவது வேலை போட்டுத் தரச் சொல்றியா?" வைகுந்தனை கொன்றுவிடும் வேகத்தோடு முறைத்தாள் ஆராதனா.

"நீ என்ன அவருக்கு வேலை போட்டுக் கொடுப்பது வைகுந்த்? அவருக்குத்தான் ஏற்கனவே கைமேல வேலை இருக்கே?" ரோசத்துடன் ஆராதனா கூறியதைக் கேட்ட வைகுந்தனின் மூளை மேலும் குழப்பியது.

"நீ எதுக்காக இப்ப இவ்வளவு கோபப்படுற? ஹேய்... என்னதான்ப்பா நடக்குது?" புரியாமல் கேட்ட வைகுந்தனின் தோளில் கை வைத்து அவனுக்கும் ஆராதனாவிற்கும் இடையில் அமர்ந்தான் மனோஜ்.

மனோஜை அங்கு அந்த நேரத்தில் எதிர்பாராத வைகுந்தன் திகைப்புடன் ஆராதனாவை நோக்கினான்.



ஆனால் ஆராதனாவின் பார்வை ஆவலுடன் மனோஜின் முகத்தில் பதிந்திருக்க அவளது முகத்தில் தோன்றிய மயக்கம் எதையே உணர்த்துவதைப் புரிந்து கொண்டான் வைகுந்தன்.

"என்னைப் பற்றிக் குறைவாகப் பேசினால் அவளுக்கு கோபம் வரத்தானே செய்யும் வைகுந்தன்?" அழுத்தமாகக் கேட்டான் மனோஜ்.

"என்ன!!?"

"ஆமாம் வைகுந்த். நானும் ஆராதனாவும் ஒருவரை ஒருவர் விரும்பறோம். மனதார அன்பு செலுத்திக் கொண்டிருக்கிறோம். யெஸ்... வி லவ் ஈச் அதர்..." மனோஜ் கூறுவதை நம்பத் தோன்றாமல் அமர்ந்திருந்த வைகுந்தனின் தோளில் கை வைத்து அவனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த அறிவுறுத்தினாள் ராதிகா.

"வைகுந்த்... நம்ம ஆரா மனோஜை லவ் பண்றது உண்மைதான். அதைத்தான் நான் உன்னிடம் சொல்ல வந்தேன்" ராதிகாவின் வார்த்தைகள் காதில் விழுகாத வனாக ஆராதனாவைப் பார்த்தான் வைகுந்தன்.

"வைகுந்த்... ப்ளீஸ்..." எதற்கும் கெஞ்சாத ஆராதனாவின் வாயில் இருந்த வந்த வார்த்தைகளைக் கேட்ட வைகுந்தன் துடித்துப் போனவனாக மனோஜின் கரம் பற்றிக் கொண்டான்.

"என்னை நம்பு வைகுந்த். நான் ஆராதனாவை நல்லபடியாக பார்த்துக் கொள்வேன். உன்னை விட..." அழுத்தமாக கூறிய மனோஜின் வார்த்தைகள் மனதிற்கு

இதம் அளிக்க அவனது கடைசி வார்த்தை மட்டும் ஏனோ உறுத்தலாக இருப்பதைப் போல உணர்ந்தான் மனோஜ்.

ஆனால் கெஞ்சலுடன் பார்த்துக் கொண்டிருந்த ஆராதனாவின் தோற்றத்தில் மற்ற அனைத்தையும் மறந்துவிட்டு அவர்களது காதலுக்கு ஆதரவாக மனோஜின் கரம் தட்டிப் புன்னகைத்தான் வைகுந்தன்.



# 23

மனோஜ் கூறியதைப் போலவே மறுநாள் காலை கல்லூரிக்கு வைகுந்தனுடன் வந்திறங்கிய ஆராதனாவை வைகுந்தனின் சம்மதத்தோடு அழைத்து வந்துவிட்டான்.

முதல்முறையாக தன் மனம் கவர்ந்தவனின் பின்னால் பைக்கில் அமர்ந்து போகும் ஆனந்தத்தோடு மனோஜின் தோள்பற்றி அமர்ந்த ஆராதனாவைக் கண்ட வைகுந்தனின் கண்களில் கண்ணீர் திரையிட்டது. எத்தனையோ கோடீஸ்வர மாப்பிள்ளைகளை ஆராதனாவிற்காக வரிசையில் நிற்க வைக்கத் தங்களது குடும்பமே ஆவலாக இருக்கையில் அவளது உள்ளம் மனோஜிடம் தஞ்சம் கொண்டதை வைகுந்தனால் முழு மனதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.



ஆனால் ஆராதனாவின் நெஞ்சமோ தன்னுடைய மனோஜுடம் அவள் தனியாக வெளியே போவதை எண்ணிப் பூரித்துக் கொண்டிருந்தது. அவள் உரிமையுடன் மனோஜின் முகம் பார்த்துச் சிரித்தாள்.

''போகலாமா...'' மனோஜ் கேட்ட ஒற்றை வார்த்தையே ஒரு கோடி வார்த்தைகளாக கேட்டது அவளுக்கு.

''ம்ம்...'' அவள் கூறிய ஒற்றைப் பதிலே காதில் தேனாகப் பாய்ந்து மனோஜின் ஆண்மையைக் குளிர வைத்தது.

அவன் புஷ்பக விமானத்தை ஓட்டும் பெருமிதத்தோடு பைக்கை ஸ்டார்ட் பண்ணி அடுத்த நொடியே வேகமெடுத்துப் பறந்தான்.

''எங்க போவோம் ஆராதனா?''

''முதன்முதலில் வெளியில வர்றோம். ஏதாவது கோயிலுக்குப் போய்விட்டு அதன் பிறகு முடிவு செய்து கொள்வோம்'' கூறிய ஆராதனாவைப் பார்த்துச் சிரித்த மனோஜ் அதன் பிறகு அவளிடம் எதுவும் கேட்காமல் வண்டியைப் பறக்க விட்டான்.

பைக் நின்றவுடன் உணர்வு வந்தவளாக வண்டியை விட்டு இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தவளின் அருகில் வந்து புன்னகைத்தான் மனோஜ்.

''என்ன பார்க்கிற ஆராதனா?'' அவனைப் புரியாமல் பார்த்துவிட்டு அந்த இடத்தை ஆராய்ந்தாள் ஆராதனா.

மூங்கில் தட்டில் தடுப்புடன், அழகாக எளிமையாக அமைந்திருந்த ஓட்டு வீடும், அதன் அருகிலேயே மாமரமும், எலுமிச்சை மரமும், ரோஜாச் செடிகளும், ஜாதிமல்லிப் பந்தலுமாக அந்த இடமே மனதிற்கு அமைதியைத் தருவதைப் போல இருந்தது ஆராதனாவிற்கு.

''இங்க வாயேன்...'' அவளது கைப்பற்றி இழுத்துச் சென்ற மனோஜ் அவளை ஒரு ரோஜாச் செடியின் அருகில் அழைத்துச் சென்று நிறுத்தினான்.

செழிப்பாக வளர்ந்திருந்த அந்த ரோஜாச் செடியில் அழகான அடர்ந்த சிவப்பு நிற ரோஜாப் பூக்களும், மொட்டுக்களும் காற்றுக்குக் குலுங்கி அசைந்து கொண்டிருந்தன.

செடியில் இருந்த மலர்ந்த ரோஜாக்களைப் பிடுங்கி ஒன்று சேர்த்து ஆராதனாவிடம் நீட்டினான் மனோஜ்.

''என்ன இது...''

''நம் காதலின் சின்னம் இது ஆராதனா. நான் உன்னைப் பார்த்த அன்று தான் இந்தச் செடியை வாங்கிக் கொண்டு வந்து நட்டு வெச்சேன். என்றாவது ஒரு நாள் இந்தச் செடியில் பூக்கும் பூ உன்னோட தலையை அலங்கரிக்கும்னு கனவு கண்டேன்... அது இன்னிக்குப் பலிச்சிருக்கு ஆராதனா'' அவனை பிரமிப்போடு பார்த்தவளின் கண்கள் ஆசையுடன் அந்த வீட்டை வலம் வந்தது.

''அப்ப இது...?''



''நம்ம வீடு ஆராதனா...'' கூறியவளின் இடையை அணைத்து அருகில் இழுத்துக் கொண்டான் மனோஜ். அவன் தோளில் ஆசையுடன் சாய்ந்து கொண்டவளின் காதோரமாக முணுமுணுத்தான் அவன்.

''நீதானே கோவிலுக்குப் போகணும்னு சொன்ன... அதான் இங்க கூட்டிக்கிட்டு வந்திட்டேன். உனக்கு நம்ம வீட்டைப் பிடிச்சிருக்கா...'' தவிப்புடன் கேட்டவனின் இடையை பற்றிக் கொண்டது ஆராதனாவின் கரங்கள்.

''ரொம்பப் பிடிச்சிருக்கு...''

பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த தமயந்தியின் கண்கள் வியப்பில் விரிந்தது. அன்னையைப் பார்த்த மனோஜ் ஆராதனாவை மெதுவாக தள்ளி நிறுத்தி அவளது கைப் பற்றி அன்னையிடம் அவளை அழைத்துச் சென்று நிறுத்தினான்.

தமயந்தியின் பார்வையை உறுதியுடன் எதிர் கொண்டது மனோஜின் கண்கள்.

''மனோஜ்...''

''அம்மா... இவள் ஆராதனா. உங்க மருமகள்'' எதையோ கேட்க வந்த அன்னைக்கு எவ்வித விளக்கமும் கூறாமல் நேரடியாக ஆராதனாவை அறிமுகம் செய்து வைத்தான் மனோஜ்.

அந்த நொடி மனோஜை காதலித்ததற்காகப் பெருமைப்பட்டாள் ஆராதனா. இவள் என்னுடையவள் என்று ஒரு சொல்லில் அவளுக்கான அங்கீகாரத்தைக்

கொடுத்துவிட்ட மனோஜின் ஆண்மையை மனதார நேசித்தாள் ஆராதனா.

அதற்கு மேல் எவ்வித விளக்கத்தையும் தமயந்தியும் மனோஜிடம் எதிர்பார்க்கவில்லை. உடனடியாக வீட்டுக்குள் சென்றுவிட்ட அவள் விரைவிலேயே கையில் ஆரத்தித் தட்டுடன் வந்து அவர்களைச் சுற்றி விட்டு ஆராதனாவை அன்புடன் பார்த்துப் புன்னகைத் தாள்.

''வாம்மா... உள்ளே வா...'' அவளது இடையணைத்து உள்ளே அழைத்துச் சென்றாள் தமயந்தி.

வீட்டிற்குள் நுழைந்த ஆராதனாவின் பார்வை வீட்டைச் சுற்றிச் சுழன்றது.

''என்ன... உங்க பங்களாவைப் போல ஆடம்பரமா இல்லைன்னு பார்க்கறியா?'' கேட்டவனை முறைத்தாள் ஆராதனா.

''எனக்கு ஆடம்பரமெல்லாம் வேண்டாங்க. அன்பு இருந்தால் போதும்.''

''அது என்னிக்கும் குறையாது ஆராதனா. அள்ள அள்ளக் குறையாதது அன்பு ஒன்றுதானே...'' ஆரா தனாவின் முகம் நிமிர்த்தி அவளை அன்புடன் மனதில் வைத்துக் கொண்ட தமயந்தியை ஆராதனாவிற்கு மிகவும் பிடித்துப் போனது.

அவள் தமயந்தியின் பாதம் தொட்டு நிமிர அவளை அணைத்து உச்சியில் முத்தமிட்டு மகிழ்ந்து விட்டாள் தமயந்தி.



''இப்படியே பாசத்தைப் பொழிச்சுக்கிட்டு இருந்தால் போதுமாம்மா? நான் இவளுக்கு ட்ரீட் கொடுப்பதாகச் சொல்லிக் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். போற போக் கைப் பார்த்தால் ரெண்டு பேரும் சேர்ந்து என்னைப் பட்டினி போட்டு விடுவீங்க போல இருக்கே?'' பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு கூறிய மகனின் காதைப் பிடித்தாள் தமயந்தி.

''போக்கிரி. செய்வதையும் செஞ்சிட்டு அதிகாரம் வேறயா. இரு இரு.. என் மருமகள் போகட்டும். அப்புறம் இருக்கு கச்சேரி...'' சிரித்துக் கொண்டே முந்தானையை இழுத்துச் சொருகிக் கொண்டு சமையல் அறைக்குள் நுழைந்த தமயந்தியைப் பின் தொடர்ந்தாள் ஆராதனா.

''நீ எதுக்குடா இங்க வர்ற...? நீ போய் உட்கார். நான் ஒரு மணி நேரத்தில் விருந்தே போடறேன்.''

''இல்லத்தை. நான் ஏதாவது ஹெல்ப் பண்ணலா முன்னு...'' இழுத்தாள் ஆராதனா.

''உனக்கு சமைக்கவெல்லாம் தெரியுமா ஆராதனா?'' வியப்புடன் கேட்டாள் தமயந்தி.

''ம்ஹூம்... சாப்பிட மட்டும்தான் தெரியும்மா...'' அவ ளுக்கான பதிலைக் கூறிக் கொண்டே வந்த மனோஜை சங்கடமாகப் பார்த்தாள் ஆராதனா.

''இதுக்கெல்லாம் கவலைப்படாதே ஆராதனா. நான் இருக்கேன்ல... உனக்கு அத்தனையையும் கத்துக் கொடுக்கிறேன் பாரு... இப்ப நீ போய் ரெஸ்ட் எடு...'' கூறிக் கொண்டே அடுப்பைப் பற்ற வைத்த

தமயந்தியை தயக்கத்துடன் பார்த்துக் கொண்டே சமையல் அறையில் இருந்து வெளியேறினாள் ஆராதனா.

அவளது உள்ளத்தை அறிந்தவன் போல ஆதரவுடன் ஆராதனாவைப் பார்த்துப் புன்னகைத்தான் மனோஜ்.



## 24

அன்று மாலை ஆராதனா வரும் வரையில் வைகுந்தனின் மனம் அவனிடமே இல்லை. ஆராதனாவின் காதல் உண்மையானது பரிசுத்தமானது என்பதில் வைகுந்தனுக்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஆனால் மனோஜின் காதல் உண்மையானது தானா என்பதை வைகுந்தனால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை. மனோஜை அவன் அன்றுவரை எதிரியாகப் பார்த்ததும் கூட அதற்கு ஒரு காரணமாக இருக்கலாமோ என்று அவனுக்குத் தன் மீதே சந்தேகம் தோன்றியது. அதற்கு மேல் ஆராதனாவின் காதலை பெரியவர்களிடம் மறைப்பதில் வைகுந்தனுக்கு விருப்பம் இல்லை.

சரியாக கல்லூரி முடியும் நேரத்திற்கு மனோஜின் பின்னால் அமர்ந்து வந்த ஆராதனாவின் தலையில் தமயந்தி நெருக்கமாகக் கட்டி வைத்து விட்ட ஜாதி மல்லிச் சரம் மணம் கொடுத்துக் கொண்டிருந்தது.



அந்தப் பூவை விடவும் அழகாக மலர்ந்திருந்த ஆராதனாவின் முகத்தை சிந்தனையுடன் ஆராய்ந்தான் வைகுந்தான். அவள் முகத்தில் கலப்படமற்ற ஆனந்தத்தை மட்டுமே காண அவனது மனதில் நிம்மதி பிறந்தது.

வைகுந்தன் காரின் கதவைத் திறந்து விட பின் இருக்கையில் அமர்ந்த ஆராதனா கையாட்டி விடை பெற்றுக் கொள்ளும் வரை அவளையே பார்த்தபடி நின்றிருந்த மனோஜின் உள்ளத்தில் என்றுமில்லாத அமைதியும் சந்தோசமும் நிறைந்திருந்தது. கார் கிளம்பிச் சென்ற பின்னரும் வெகுநேரம் அக்கார் சென்ற திசையையே பார்த்தவாறு நின்றிருந்தான் அவன்.

தன்னைச் சுற்றிலும் மலரின் நறுமணத்தைச் சுமந்து கொண்டு வந்த ஆராதனாவை வியப்புடன் பார்த்தாள் வாசுகி.

''ஆரா... வீட்டுக்கு வருகிறபோதே பூ வாங்கித் தலையில் வெச்சுக்கிட்டு வர்றியா... பிரஷ்ஷா இருக்கே... நல்லா வாசனையும் அடிக்குது!'' ஆராதனாவின் அருகில் வந்து அவள் பின்னலில் இருந்த பூவின் வாசனையை நுகர்ந்தாள் வாசுகி.

அன்னையின் கேள்விக்குப் பதில் கூற இயலாதவளாக வைகுந்தனின் முகத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு அமைதியாக தன் அறைக்குச் சென்று விட்டாள் ஆராதனா.

அறைக்குள் நுழைந்து கதவடைத்த ஆராதனா கைப்பையை டேபிளில் எறிந்துவிட்டுப் படுக்கையில்

விழுந்தாள். அவளுக்கு கால்கள் தரையில் நிற்காமல் வானத்தில் பறப்பதைப் போல இருந்தது. மனம் முழுவதும் உல்லாசம் பொங்கி வழிய வாய்விட்டுப் பாட வேண்டும் போன்ற ஆசை தோன்ற பிடித்த பாடல் களைப் பாடியவாறே கட்டிலில் குப்புறப் படுத்துக் கனவினில் மிதக்க ஆரம்பித்தாள் ஆராதனா.

வீட்டிற்குள் நுழைந்த வைகுந்தனுக்கு தன் அறைக்குச் செல்ல மனம் ஒப்பவில்லை. அவன் சிந்தனையுடன் ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து தில்லைநாயகம் மற்றும் நந்தகுமாரின் வரவிற்காகக் காத்திருக்க ஆரம் பித்தான்.

தனது மாமாவும், அப்பாவும் ஆராதனாவின் காதலை முழு மனதாக ஏற்றுக் கொள்வார்களா என்ற பயத்தி லேயே அவன் சிந்தனை முழுவதும் உழன்று கொண் டிருந்தது.

என்றும் இல்லாத வழக்கமாக அமைதியாக சோபாவில் அமர்ந்திருந்த வைகுந்தனின் தோற்றம் வைரமணியின் பார்வைக்குப் புதிதாகத் தெரிந்தது. அவள் ஒரு சிறு புருவச் சுழிப்புடன் மகனைப் பார்த்துவிட்டு அவனருகில் வந்து அவனுடைய நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அன்னையின் அக்கறை மனதிற்கு இதமளிக்க வைகுந்தன் அவளது முகத்தை திருப்பிப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்னடா வைகுந்த். என்னிக்கும் இல்லாமல் இன்னிக்கு அமைதியா உட்கார்ந்திருக்க? ஏதாச்சும் மூடு அவுட்டா?'' கவலையை மறைத்த குரலில் கேட்டாள் வைரமணி.



''மூடு அவுட்டெல்லாம் ஒண்ணும் இல்லம்மா. ஒரு சின்ன யோசனை. அதான் அப்படியே உட்கார்ந்திட் டேன்.''

''அடடா... என் புள்ளையே என்னிக்கோ ஒரு நாள்தான் மூளையை யூஸ் பண்ணுவான். அதையும் நான் கெடுத்திட்டேனே!'' போலியாக வருத்தப்பட்டுச் சிரித்தாள் வைரமணி.

அன்னையின் சிரிப்பினால் சிறிதும் பாதிக்கப்படாத வனாக அமர்ந்திருந்த வைகுந்தனைப் பார்த்த வைர மணியின் சிரிப்பு மறைந்தது.

''வைகுந்த்... இன்னிக்கு உன் முகமே சரியில்லையே. ஏன் என்ன விசயம்?'' அன்னையின் முகம் பார்ப்பதைத் தவிர்த்த வைகுந்தனுக்கு அவளது புத்திசாலித்தனத்தை எண்ணி எரிச்சல் ஏற்பட்டது.

''அதான் ஒண்ணும் இல்லைன்னு சொன்னேனில் லம்மா? அப்புறமும் எதுக்காக இப்படி தொண தொணக் கிறீங்க?'' எரிச்சலுடன் எரிந்து விழுந்தான் வைகுந்தன்.

அவனது கோபத்தை அலட்சியம் செய்தவளாகத் திரும்பி மகனது முகத்தை கண்டிப்புடன் ஏறிட்டாள் வைரமணி.

''வைகுந்த்...'' அழுத்தமாக மகனை அழைத்தாள் அவள்.

''இப்ப உண்மையைச் சொல்லப் போறியா இல் லையா?'' அமைதியுடன் ஒலித்த அன்னையின் குரலில் கலவரமாக அவளைப் பார்த்தான் வைகுந்தன்.

''அம்மா....''

''அம்மாதான் கேட்கிறேன் வைகுந்த். என்ன பிரச்சனையாக இருந்தாலும் சொல்லு வைகுந்த். என்னால் முடிஞ்ச யோசனை சொல்றேன்...''

''அம்மா... லவ் மேரேஜ் பத்தி நீங்க என்னம்மா நினைக்கறீங்க..'' சம்பந்தமில்லாமல் வந்த வைகுந்தனின் கேள்வியால் திகைப்புடன் அவனைப் பார்த்தாள் வைரமணி.

''திடீர்னு இப்படியொரு கேள்வியைக் கேட்கக் காரணம் என்ன வைகுந்த்? உனக்கும் ராதிகாவுக்கும் ஏதாவது பிரச்சனையா? சண்டை கிண்டை போட்டுக் கிட்டீங்களா?''

''அம்மா... ப்ளீஸ்... நான் கேட்பது என்னைப் பத்தி இல்லை. பொதுவாகக் கேட்கிறேன் நான்...''

''வைகுந்த்... என்ன சொல்ல வர்றியோ அதை நேரடியா சொல்லு. சுத்தி வளைக்காதே.''

''அம்மா... நான் சொல்வதை கொஞ்சம் பொறுமையா நிதானமாகக் கேளுங்க... ப்ளீஸ்...''

''ஏற்கனவே நான் ரொம்பப் பொறுமையாத்தான் கேட்டுக்கிட்டு இருக்கேன் வைகுந்த்...'' எரிச்சலுடன் கூறினாள் வைரமணி. பொதுவாக வைகுந்தன் எதைப் பற்றிப் பேசுவதற்கும் தயங்கவே மாட்டான். மனதில் தோன்றுவதை மறைக்காமல் பேசிவிடுவான் அவன். இன்று அவன் எதையே கூற முடியாமல் தயங்குவதை எண்ணி வைரமணியின் உள்ளம் அடித்துக் கொண்டது.



''அம்மா... நான் நம்ம ஆராதனாவைப் பற்றித்தான் பேசிக்கிட்டு இருக்கேன்மா. ஆராதனா...'' சொல்லத் தயங்கி நிறுத்திய வைகுந்தனின் முகத்தைப் பார்த்த வைரமணியின் உள் உணர்வு நிலைமையின் தீவிரத்தை அவளுக்கு எடுத்துரைத்தது.

வைரமணி சுற்றிலும் பார்த்துவிட்டு வைகுந்தனின் கைப்பற்றி எழுப்பித் தன் அறைக்கு அழைத்துச் சென்று கதவை அடைத்தாள்.

''இப்ப சொல்லு வைகுந்த். என்ன விசயம்?'' மகனது முகத்தை கூர்ந்து பார்த்தாள் வைரமணி.

''அம்மா... எங்க காலேஜ்ல மனோஜ்னு ஒரு பையன். என் செட்தாம்மா. ஆனா அவன் கம்ப்யூட்டர் மேஜர். ரொம்ப திறமைசாலிம்மா....''

''இன்னும் நீ சொல்ல வேண்டிய விசயத்திற்கே வரலை வைகுந்த்... சொல்லு...''

''அம்மா... அவனை நம்ம ஆரா...''

''வைகுந்த்... எதைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் உறுதியாகத் தெரிந்தால் மட்டும்தான் பேசணும். நம்ம ஆரா அப்படிப்பட்ட பெண் இல்லை என்பது நமக்கு நல்லாத் தெரியும். அப்படி இருக்கிறப்ப நீ...''

''நானும் அப்படித்தான்ம்மா நம்பினேன். ஆனால் ஆரா அந்தப் பையனை லவ் பண்றாம்மா. அதை அவங்க ரெண்டு பேருமே என்கிட்ட சொல்லிட்டாங்க...''

''எப்ப?''

''நேத்து... மதியம் கேண்டீனில் சாப்பிடும்போது அவன் வந்து சொன்னான்.''

''அப்ப ஆரா உன்கிட்ட சொல்லலியா?'' மீண்டும் நம்பிக்கை துளிர்க்க கேட்ட அன்னையின் முகத்தை பார்க்காமல் தலை திருப்பிக் கொண்டான் வைகுந்தன்.

''இல்லம்மா. ஆரா என்கிட்ட சொல்லலை. ஆனால் அவள் முகம் எனக்கு எல்லாத்தையும் உணர்த்தி விட்டதும்மா. அவளைப் பக்கத்தில் வெச்சுக்கிட்டுத்தான் மனோஜ் என்கிட்ட அவங்களோட லவ் பத்திச் சொன்னான். ஆரா அதை மறுக்கல.''

நெஞ்சில் கை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டாள் வைரமணி.

வைகுந்தனின் திருமணத்தை அவள் காதல் திருமணமாகவே நினைக்கவில்லை. ஏனெனில் ராதிகா அவர்களது கண்முன் அவர்களின் வீட்டிலேயே வளர்ந்தவள். அவளை அந்நியமாக நினைக்கத் தோன்றாத காரணத்தினாலேயே வைரமணி மகனது விருப்பத்தை ஆதரித்தாள். ஆனால் ஒரு பெண்ணின் காதல் என்பது அந்தக் குடும்பத்தையே நிலை தடுமாற செய்துவிடும் என்பது வைரமணிக்கு நன்றாகத் தெரியும். அதிலும் பணக்கார வீட்டின் பெண் வாரிசு என்றால் அந்த வீட்டினர் இன்னும் கவனமாக இருப்பது இயற்கை.

நந்தகுமார் ஆராதனாவின் மீது உயிரையே வைத்து இருப்பதை வைரமணி நன்றாக அறிவாள். அண்ணனுக்குத் தன் மகளின் குணத்தை எண்ணி உள்ளத்தில்



பெருமை இருப்பதையும் அவள் நன்றாகவே அறிவாள். இத்தகைய சூழ்நிலையில் தன் மகளது காதல் அண்ணனின் மனதில் என்ன மாறுதலை உண்டாக்கப் போகிறதே என்பதை எண்ணிய வைரமணியின் உள்ளம் பெரும் திகிலில் ஆழ்ந்தது.



# 25

அந்த அறையில் இருந்த அனைவரின் மூச்சுக் காற்றும் நின்றுவிட்டதைப் போல பெரும் நிசப்தமும் பேரமைதியும் அந்த அறையைச் சூழ்ந்தது.

ஏஸியின் குளிரிலும் முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட அமர்ந்திருந்த நந்தகுமாரின் தோளில் ஆதரவாகக் கை வைத்து தட்டிக் கொடுத்தார் தில்லைநாயகம்.

நண்பரின் கையை எடுத்துத் தன் கைகளுக்கும் அடக்கிக் கொண்ட நந்தகுமாரின் கைகள் கட்டுப்பாடில்லாமல் குலுங்குவதை செய்வதறியாமல் கண்களில் நீர் நிறையப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தாள் வாசுகி.

தங்களது குல தெய்வமாகக் கொண்டாடிய ஒரே மகள் இப்படியொரு சூழ்நிலையை உருவாக்குவாள் என்பதைக் கனவிலும் எண்ணிப் பார்த்திராத அந்தத் தம்பதியினருக்கு ஆறுதல் சொல்லும் வகையறியாமல்

பரிதவிப்போடு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வைரமணி.

ஆரம்பத்தில் வைகுந்தன் கூறியதைக் கேட்ட வைரமணி மருமகளுக்குப் புத்திமதி கூறித் திருத்தி விடலாம் என்ற எண்ணத்துடன் ஆராதனாவைத் தேடி அவள் அறைக்கு விரைந்தாள்.

அத்தையின் முகம் பார்த்தே அவள் பேச வந்த காரணத்தை ஓரளவு ஊகித்து விட்ட ஆராதனா அவளது கேள்வியை எதிர்நோக்கி வைரமணியின் முகத்தை நேராகப் பார்த்தாள்.

ஆராதனாவின் நிமிர்வே அவளது முடிவினை உணர்த்தி விட வைரமணி கெஞ்சலுடன் ஆராதனாவின் கையைப் 'பிடித்துக் கொண்டாள்.

''ஆரா... வைகுந்தன் சொல்வது உண்மையா? நான் அதை நம்ம விரும்பலை ஆரா. நீ சொல்லு...'' பரிதவிப்புடன் ஆராதனாவின் முகத்தில் விழி பதித்துக் கேட்டாள் வைரமணி.

ஆராதனா உறுதியுடன் வைரமணியின் விழிகளை ஏறிட்டு விட்டு அமைதியாக அதே நேரத்தில் அழுத்தமாக தனது பதிலைக் கூறினாள்.

''உண்மைதான் அத்தை. வைகுந்தன் சொன்னது உண்மைதான். நான் மனோஜை விரும்பறேன்.''

''ஆனால் ஆரா... உன் டாடி இதுக்கு ஒத்துக்கொள்வார்னு நினைக்கிறியா? அவர் உன்மேல உயிரையே வெச்சுருக்கார் ஆரா...''



''நானும் தான் என் டாடியை என்னோட உயிரா நினைக்கிறேன் அத்தை. அதற்கும் என் காதலுக்கும் என்ன சம்பந்தம்?''

''என்ன ஆரா இப்படி கேட்கிற? எந்தத் தகப்பன் தன் பொண்ணு இன்னொருத்தனைக் காதலிக்கிறதை ஒத்துக்குவாங்க? அவங்களுக்கு நீ தீராத அவமானத்தைத் தேடித் தரப் போறியா? சொல்லு ஆரா... கொஞ்சமாவது யோசனை பண்ணிப்பார் ஆரா.''

''ஏன் அத்தை ஒத்துக்க மாட்டாங்க? வைகுந்தனோட லவ்வை நீங்க எல்லோரும் ஒத்துக்கலையா? ஏன் ராதிகாவும் அவங்க அப்பாம்மாவுக்கு ஒரே பொண்ணுதான? அவங்க டாடி மகளோட விருப்பத்திற்கு ஒத்துக்கலையா? ஒருவேளை நானும் ஒரு பணக்கார வீட்டுப் பையனை லவ் பண்ணியிருந்தா நீங்க எல்லோரும் ஒத்துக்கிட்டிருந்திருப்பீங்களோ? ஆனா அத்தை... உண்மையான அன்பு பணத்தைப் பார்த்து வராது அத்தை. அது மனசை மட்டும்தான் பார்க்கும். நானும் என் மனோஜோட மனசை மட்டும்தான் பார்த்தேன். அவரும் அப்படித்தான். நான் பணக்காரிங்கறதுக்காக அவர் என்னை லவ் பண்ணலை.''

''ஆராதனா... யாரோ ஒருத்தனோட மனசைப் பத்தி இவ்வளவு உயர்வா பேசற நீ உன்னைப் பெத்த தகப்பனோட மனசைக் கொல்ல முடிவு பண்ணிட்டியே? இதுதான் உன்னோட டாடி மேல நீ உயிரா இருந்ததின் அர்த்தமா?''

''இன்னொரு முறை இப்படிப் பேசாதீங்க அத்தை. நான் மனோஜோட மனசையும் அன்பையும் உயர்வா

நினைக்கிறேன்றதுக்காக என் டாடியோட அன்பு எனக்கு குறைவாப் போய்விடுமா. ஒரு தகப்பனா அவரோட அன்பும் விலைமதிக்க முடியாததுதான் அத்தை. என் டாடி எனக்கு என்னிக்குமே உயர்வுதான்.''

''ஆராதனா.. நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளும்மா. ஏற்கனவே ஒரு காதலால் நம் வீட்டில் நடந்த பிரச்சனைகளும் ரணங்களும் போதும்டா. அது இன்னும் தொடர வேண்டாம் ஆராதனா...''

''ஏற்கெனவே ஒரு காதலா... வைகுந்தன் ராதிகாவைப் பத்தி சொல்றீங்களாத்தை? அதில் என்ன...''

''ப்ளீஸ் ஆரா. என்னிடம் எதையும் கேட்காதே. ஆனால் அந்த ரணங்களால் எனக்கு ஒரு மாணிக்கம் கிடைச்சது. ஆனால் எல்லோருக்கும் அது போல வாழ்க்கை அமைந்து விடாதுடா. சொன்னால் கேளுடா...''

''இல்லை அத்தை. எனக்கு நம்பிக்கை இருக்கு. என் மனோஜும் ஒரு மாணிக்கம்தான்னு நீங்க எல்லோரும் ஒத்துக்கிற காலம் வரும் வரைக்கும் நான் காத்திருப்பேன். ஆனால் ஒன்று மட்டும் உறுதி அத்தை. எப்படி நான் மனோஜைத் தவிர வேறு ஒருத்தரை மனசால கூட நினைக்கமாட்டேனோ, அதே போல என் டாடி மம்மியின் சம்மதம் இல்லாமல் அவரை நான் கல்யாணமும் பண்ணிக்க மாட்டேன். இது சத்தியம் அத்தை. இதனால நான் காலம் முழுவதும் கன்னியாவே வாழணுன்னாக் கூட வாழ்ந்துவிடுவேன்...'' வைரமணியிடம் உறுதியாகக்



கூறிய ஆராதனா அதற்கு மேல் சொல்ல ஒன்றும் இல்லை என்பதைப் போல் அங்கிருந்து சென்று பால் கனியின் ஊஞ்சலில் அமர்ந்து வானத்தை வெறிக்கத் தொடங்கினாள்.

அவளது உறுதியைக் கண்டு திகைத்தாலும் இதை அதற்கு மேல் மறைப்பது நியாயம் இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட வைரமணி இரவு உணவு முடித்த பிறகு அண்ணனையும் வாசுகியையும் அழைத்து உண்மையை உள்ளபடி அவர்களிடம் சொல்லிவிட்டாள்.

''மாமா...'' தயக்கத்துடன் அழைத்தான் வைகுந்தன். அவனது அழைப்பைக் கேட்ட நந்தகுமார் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''அந்த மனோஜ் திறமைசாலிதான் மாமா. கெட்ட பழக்கவழக்கம் எதுவும் கிடையாது. வசதி இல்லாவிட்டாலும் அவங்க அம்மா அப்பா அவனை ஒழுக்கமானவனாகத்தான் வளர்த்து இருக்காங்க.''

''காதலுக்கு நான் எதிரியில்லை மனோஜ். ஆனால் அருமைபெருமையா வளர்த்த மகள் ஒரு நல்லவனோட சேர்ந்து நிறைவான வாழ்க்கை வாழணும்னு ஒரு பெத்தவன் பரிதவிப்பது இயற்கைதானே. அதிலும் ஆராதனா நம்ம வீட்டு இளவரசி. அவள் போற இடத்திலும் இதைப் போலவே - இல்லையில்ல... இதை விட அதிகமான வசதிகளோட ஒரு மகாராணியா வாழணும்னு நாங்க எவ்வளவு கனவு கண்டிருப்போம்? அதையெல்லாம் வெறும் கனவாகவே ஆக்கிட்டாளே? இந்த டாடி

மேல அவளுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிடுச்சா வைகுந்த்? எதுக்காக அவ இப்படியொரு வழியைத் தேர்ந்தெடுத்தா? நான் என்ன செய்ய?'' அழுகையில் குலுங்கிய கணவரைப் பார்த்த வாசுகியின் அழுகையும் அதிகமானது. வைரமணி அண்ணியின் அருகில் அமர்ந்து அவள் கண்களைத் துடைத்துத் தன்னோடு அவளை அணைத்துக் கொண்டாள்.

''நந்தா... இப்படியே யோசனை பண்ணிக்கிட்டே இருப்பதில் ஒரு அர்த்தமும் இல்லடா. நாம ஆசைப் படுறதெல்லாம் பிள்ளைகள் சந்தோசமா வாழணும்னு தான். ஆராதனாவுக்கு அந்தப் பையனோட வாழற வாழ்க்கைதான் சந்தோசத்தைக் குடுக்கும்னா நாம அதை அவளுக்காக உருவாக்கிக் கொடுப்போம்...'' கேட்ட தில்லைநாயகத்தின் முகத்தை ஆழமாகப் பார்த்தார் நந்தகுமார்.

''பழசெல்லாம் மறந்துடுச்சா தில்லை. ஒரு காதலால் நாம பட்ட அவமானமெல்லாம்...''

''அதை இன்னொரு முறை சொல்லாதே நந்தா. நான் அந்த அவமானத்தைக் கொடுப்பினையா நினைக் கிறேன்டா. அதனாலதான நீயும், வைரமணியும் என் வாழ்க்கை முழுவதும் நிரந்தரமான சொந்தமா வந் தீங்க...''

''ஆனாலும் தில்லை...''

''அதெல்லாம் எதுவும் சொல்ல வேண்டாம் நந்தா. நாம போய் அந்தப் பையனோட குடும்பம் எப்படின்னு



பார்த்துட்டு வருவோம். அதன் பிறகு எல்லாத்தையும் பேசிக்கலாம்...''

''அப்ப அந்தப் பையனுக்கே ஆராதனாவைக் கொடுக்கலாம்னு சொல்றியா தில்லை...''

''அதில் ஒண்ணும் தப்பில்லை நந்தா. நமக்கு ஆராதனாவோட சந்தோசம்தான் முக்கியம். அப்படியே அவங்களோட குடும்பம் வசதியில குறைவா இருந்தால் கூட நாம வசதியை உருவாக்கிக் கொடுத்துவிடலாம் நந்தா. அதான் அந்தப் பையனும் திறமைசாலின்னு வைகுந்தன் சொல்றானே? அப்புறம் என்ன? நமக்கு அவங்களோட குணம்தான் முக்கியம் நந்தா. அதை மட்டும் நல்லா விசாரித்துவிட்டு அப்புறமாப் பேசிக் கலாம்...'' அனைவரும் ஒரு முடிவு தெரிந்த தெளிவுடன் எழுந்து செல்ல வரப்போகும் சோதனை புரியாமல் கணவரின் முகம் பார்த்து சிரித்தாள் வைரமணி.



## 26

''பரவாயில்லை நந்தா... ஊர் ஒன்றும் அத்தனை மோசமாகத் தெரியல. நல்லா செழிப்பாகவும் இருக்கு...'' தாழம்பாடி கிராமத்திற்குள் நுழைந்து நல்லுச்சாமியின் பெயர் சொல்லி அவரது வீட்டைக் கண்டுபிடித்து சென்று கொண்டிருந்த தில்லைநாயகம் அவரது அருகில் அமர்ந்திருந்த நந்தகுமாரிடம் கூறினார்.

நண்பரின் பேச்சைக் கேட்ட நந்தகுமாரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை. அவர் தன் மகளின் எதிர்காலத்தையே அறிந்து கொண்டு விடும் வெறியோடு எதிரில் தெரிந்த மண்சாலையை வெறித்துக் கொண்டே அமர்ந்திருந்தார்.

நந்தகுமாரின் மனநிலையைப் புரிந்து கொண்ட தில்லைநாயகம் அதற்குமேல் அவரிடம் எதுவும் பேசவில்லை. அவர் அமைதியாகக் காரைச் செலுத்திக் கொண்டு போய் தோட்டத்தின் மத்தியில் இருந்த ஓட்டு வீட்டின் முன்பாகத் தங்களது காரை நிறுத்திவிட்டு நந்தகுமாரை இறங்கும்படி கண்களால் அறிவுறுத்தி விட்டுத் தானும் இறங்கினார்.

காரை விட்டு இறங்கிய நந்தகுமாரின் கண்கள் அந்தச் சிறிய வீட்டையும் அதனைச் சுற்றி இருந்த தோட்டத்தினையும் ஆராய்ச்சியோடு பார்த்தது.

சிறிய ஓட்டு வீடாக இருந்தாலும் அதன் சுத்தமும் வீட்டைச் சுற்றி இருந்த தோட்டத்தின் அழகும், வீட்டின் முன்புறமாக போடப்பட்டு இருந்த தாழ்வாரத்தில் இருந்த கட்டில்களும் நாற்காலிகளும் நேர்த்தியாகப் போடப்பட்டு இருந்த விதமும் நந்தகுமாரின் கருத்தைக் கவர்ந்தது.

தொழிலதிபரான அவரது கண்களுக்கு ஒரு சிறிய இடத்தையும் வீணடிக்காமல் அனைத்து வகையான பயிர்களையும் விவசாயம் செய்து முறைப்படி பராமரித்து செழிப்பாக வளர்த்து இருந்த திறமையை மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவரது கண்களில் தெரிந்த மெச்சுதலை அறிந்து கொண்ட தில்லைநாயகம் நண்பரின் தோளில் கை போட்டு அவரது கருத்தை ஆமோதித்தார்.



''பரவாயில்லை தில்லை. விவசாயத்தை முறையாக மட்டும் இல்லாமல் லாபம் தரக்கூடிய வகையில் செய்து கொண்டிருக்கிறார்கள். பாராட்டக்கூடிய விசயம்தான்...''

''விவசாயத்தையே இவ்வளவு நேர்த்தியாகச் செய்யக்கூடியவரின் மகனுக்கு இயல்பாகவே தொழில் நடத்தும் திறமையும் இருக்கும் நந்தா... பார்க்கலாம்...''

நண்பருடன் பேசிக் கொண்டே வந்த நந்தகுமாரை பார்த்த நல்லுச்சாமி கட்டிலில் இருந்து எழுந்து அவர்களின் அருகில் வந்து அவர்களை அடையாளம் தெரியாதவராகப் பார்த்தார்.

''இங்க மிஸ்டர். நல்லுச்சாமிங்கறது...?'' கேள்வியாக இழுத்த தில்லைநாயகத்தை நோக்கிக் கரம் குவித்து வரவேற்றார் நல்லுச்சாமி.

''நான்தான்ங்க நல்லுச்சாமி. நீங்க...?'' அவரிடம் எப்படித் தங்களை அறிமுகம் செய்து கொள்வதென்கிற திகைப்புடன் நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களைக் கேள்வியாகப் பார்த்தவர் அதற்குமேல் அவர்களிடம் எதையும் கேட்காமல் புன்னகைத்தார் நல்லுச்சாமி.

''இருக்கட்டும் சார்... வாங்க. முதலில் வந்து உக்கார்ந்து கொஞ்சம் தண்ணீர் குடிங்க. அப்புறமாகப்

பேசிக்கலாம்'' அவரது வரவேற்பு உபசரிப்பில் நெகிழ்ந்த நந்தகுமார் அவர் கை காட்டிய நாற்காலியில் அமர்ந்து நண்பரைப் பார்த்தார்.

''நான் இந்தக் கட்டிலில் உட்கார்ந்துக்கறேன் நந்தா. எனக்கு இதுதான் பிடிச்சிருக்கு'' குழந்தையின் குதூகலத்துடன் கூறிக் கொண்டே கயிற்றுக்கட்டிலில் அமர்ந்து அதன் ஓரமாகப் போடப்பட்டிருந்த திண்டில் வசதியாகச் சாய்ந்து கொண்டார் தில்லைநாயகம்.

''இருக்கட்டும்... இருக்கட்டும். உங்களுக்கு எது வசதியோ அப்படியே உட்காருங்க. இதோ வர்றேன்...'' இருவரிடமும் பொதுவாகக் கூறிக் கொண்டே வீட்டிற்குள் சென்ற நல்லுச்சாமி ஒரு செம்பில் தண்ணீர் மற்றும் டம்ளருடன் வெளிவந்தார்.

அவரை டம்ளரில் தண்ணீர் ஊற்ற வேண்டாம் என்று மறுத்த நந்தகுமார் செம்பை வாங்கி அப்படியே குடித்து விட்டு நண்பரிடம் மீதம் இருந்த தண்ணீருடன் செம்பை நீட்டினார்.

அவர் நீட்டிய தண்ணீர் செம்பை வாங்கி அதில் இருந்த தண்ணீரை இயல்பாக தில்லைநாயகம் குடித்ததில் இருந்தே அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த அந்நியோன்யத்தை நல்லுச்சாமி புரிந்து கொண்டார்.

''இருக்கட்டும்... இருக்கட்டும்... அப்புறம் சார்...'' தயக்கத்துடன் கேட்ட நந்தகுமாரை இப்பொழுது தயக்கம் இல்லாமல் நேராகப் பார்த்தார் நந்தகுமார்.



''நான் நந்தகுமார். இவன் என்னோட மைத்துனர் தில்லைநாயகம்'' அவர் கூறி முடிக்கும் முன்பாக முகம் முழுவதும் சிரிப்புடன் அவர்களைப் பார்த்தார் நல்லுச்சாமி.

''நந்தகுமார்ன்னா... நம்ம ஆராதனாவோட அப்பாங்களா நீங்க... இருக்கட்டும்.. இருக்கட்டும்...'' ஆனந்தத்துடன் கூறிய நல்லுச்சாமியை வியப்புடன் பார்த்தார் நந்தகுமார்.

''என்னை உங்களுக்கு...?''

''உங்களைப் பற்றி எனக்கு வேற எதுவும் தெரியாதுங்க. ஆனால் ஆராதனாவோட அப்பாங்கிறது மட்டும் தெரியுது. அது போதாதுங்களா.. ஒரு நிமிசம் உட்கார்ந்திருங்க. நான் மனோஜோட அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்திடுறேன்...'' வேகமாக செருப்பை மாட்டிக் கொண்டே அவர்களைப் பார்த்தார் நல்லுச்சாமி.

''அவங்க எங்க போயிருக்காங்க? தோட்டத்தில் ஏதாவது வேலையாக இருக்காங்களா?'' கேட்ட நந்தகுமாரை நிமிர்வுடன் பார்த்தார் நல்லுச்சாமி.

''வீட்டுப் பொம்பளைகளோட உழைப்பினால் வருகிற வருமானத்தை நான் விரும்பமாட்டேனுங்க. என் உயிரும், உடம்பும் நல்லா இருக்கிற வரைக்கும் என் உழைப்பில் வருகிற வருமானத்தில் என் பெண்டாட்டி ராணியாட்டம் வாழணும்கிறதுதான் என் ஆசை. அதனால அவங்களை தோட்ட வேலையெல்லாம் பார்க்க விடமாட்டேங்க...''

"அப்புறம் எங்க போயிருக்காங்க?"

"இங்க ஊருக்குள் ஒரு விசேஷம். அதான் அங்க போயிருக்கா. நானும் கூடத்தான் போயிருந்தேன். ஆனால் வளைகாப்பு வீட்டில் ஆம்பிளைகளுக்கு என்ன வேலை? அதனாலதான் நான் முன்னாடியே வந்துட்டேன். அவங்களும் வருகிற நேரம்தான். ஆனா பெரிய மனுசங்க... உங்களைக் காக்க வைக்கிறது தப்பு இல்லையா. கொஞ்ச நேரம் நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் இப்ப வந்திடுறேன்..." கூறிக் கொண்டே அங்கிருந்த சைக்கிளை எடுத்து அவசரமாக மிதித்துக் கொண்டு போனார் நல்லுச்சாமி.

அவர் சென்ற பிறகு சிறிது நேரம் நண்பர்கள் இருவரும் தனக்குள் சிந்தனை செய்பவர்களாக அமைதியுடன் இருந்தனர்.

"நல்ல மனுசங்களாத்தான் இருக்காங்க நந்தா.. பையனையும் பார்த்துவிட்டால் நாம ஒரு முடிவுக்கு வந்திடலாம்.." யோசனையாகக் கூறினார் தில்லைநாயகம்.

அவரது வார்த்தைக்காகக் காத்திருந்தவனைப் போல பைக்கில் வேகமாக வந்து இறங்கிய மனோஜ் அவரின் இருவரையும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே வண்டியில் இருந்து இறங்கி அதனை ஸ்டாண்ட் போட்டான்.

அவனது தோற்றத்தைக் கொண்டே அவன்தான் மனோஜ் என்பதை ஊகித்துக் கொண்ட தில்லை



நாயகமும், நந்தகுமாரும் அவனைக் கால் முதல் தலை வரை உற்றுக் கவனித்தபடியே அமர்ந்திருந்தார்கள்.

"அம்மா..." வீட்டிற்குள் குரல் கொடுத்த மனோஜ் வேகமாக உள்ளே சென்று தோளில் இருந்த பேக்கை வைத்துவிட்டு அதே வேகத்தோடு வெளியே வந்து அவர்கள் இருவரையும் கேள்வியாகப் பார்த்தான்.

"சாரி சார். நீங்க...?"

"ஐம் நந்தகுமார். அண்ட் ஹி இஸ் தில்லைநாயகம்..." நந்தகுமாரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் மனோஜின் முகத்தில் ஒரு வித மரியாதையும் சொந்தமும் தோன்றியதை கவனித்தார் நந்தகுமார்.

"சாரி அங்கிள். நான் மனோஜ். ஐ திங்க்... நீங்க என்னைப் பார்க்கத்தான் வந்திருப்பீங்க. ஆனா... ஸாரி அகெயின் நீங்க யாருன்னு தெரியாததாலதான்..."

"இட்ஸ் ஆல்ரைட் மனோஜ்... உட்காரு.." இயல்பாக கூறினார் தில்லைநாயகம்.

"இருக்கட்டும் அங்கிள்... நான் நிக்கிறேன். நீங்க ஏதாவது சாப்பிடறீங்களா... இளநீ... காபி... ஏதாவது. அப்பாவையும் அம்மாவையும்..." என்ன பேசுவதென்பதை அறியாமல் உளறிக் கொட்டிய மனோஜை அன்புடன் பார்த்தார் தில்லைநாயகம்.

"காம் டவுன். மனோஜ். எதுக்காக இப்படி நெர்வஸ் ஆகிற? நாங்க உங்க அப்பாவைப் பார்த்துட்டோம். அவர் உங்க அம்மாவைக் கூட்டிக் கொண்டு வருவதற்காகப் போயிருக்கார். முன் கூட்டியே ஒரு போன்

பண்ணியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் தான். ஆனால் போன் பண்ணிவிட்டு வருவதை நான் விரும்பலை. அதான் உடனடியா நேராகவே வந்திட்டோம்...''

''ஓஹோ...?''

''அப்புறம் இன்னொரு விசயம் மனோஜ். அவன்தான் உனக்கு அங்கிள். நான் உனக்கு அப்பா முறை. என்னை நீ சித்தப்பா.. பெரியப்பா.. எப்படி வேணும்னாலும் கூப்பிட்டுக்கலாம். ஓகே..?'' தில்லைநாயகத்தின் சொற்களே அவரது சம்மதத்தை உணர்த்திவிட மனோஜ் ஆனந்தத்தில் திக்கு முக்காடிப் போனான்.

ஆராதனாவிற்கும் அவனுக்கும் இடையில் இருந்த காதல் இத்தனை விரைவாக இருவீட்டாரின் அங்கீகாரத்தைப் பெற்று விடும் என்பதை கனவில் கூட எதிர்பார்க்கவில்லை அவன். அவன் மகிழ்வுடன் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே நல்லசிவம் தமயந்தியை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

கணவரின் பின்னால் சைக்கிளில் அமர்ந்து வந்த தமயந்தி அவசரமாகத் தன் முந்தானையை இழுத்துத் தோள்களின் மீது போர்த்திக் கொண்டே சைக்கிளை விட்டு இறங்கி அவர்களை நோக்கித் திரும்பினாள்.

மரியாதை நிமித்தமாக அமர்ந்திருந்த இடத்திலேயே நிமிர்ந்து அமர்ந்த நந்தகுமாரும் தில்லைநாயகமும் தங்களை நோக்கிக் கரம் குவித்தபடி வந்த தமயந்தியைப் பார்த்ததும் தீயை மிதித்தவர்களைப் போல அதிர்ச்சி



யுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு வேகமாக எழுந்து நின்றுவிட்டார்கள்.

அவர்களின் அருகில் வந்து கரம் குவித்தபடி அவர்கள் இருவரின் முகத்தையும் பார்த்த தமயந்தியும் அதிர்ச்சியில் உறைந்தவளாக அப்படியே நின்றுவிட்டாள்.



# 27

அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்ட அன்னையையும் மற்றவர்களையும் புரியாமல் பார்த்த மனோஜ் திகைப்புடன் தந்தையைப் பார்த்தார். அவரும் எதுவும் புரியாதவராக தமயந்தியைப் பார்த்தார்.

''தில்லை... போகலாம்...'' அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காதவராக நண்பரின் கைப்பற்றி இழுத்தார் நந்தகுமார்.

கால்கள் அசைவற்று ஓய்த்தவரைப் போல நகரமுடியாதவராக தமயந்தியைப் பார்த்தவாறே நின்று இருந்தார் தில்லைநாயகம்.

''அங்கிள்... ஏன் உடனே கிளம்பிட்டீங்க?'' புரியாமல் கேட்ட மனோஜை வெறித்துப் பார்த்தார் நந்தகுமார்.

''இந்தக் கல்யாணம் நடக்காது தம்பி. என் பொண்ணை மறந்துடுங்க. அதுதான் எல்லோருக்கும்

நல்லது...'' நந்தகுமாரின் குரலில் தெரிந்த மிரட்டல் தொனியில் நிமிர்வுடன் அவரைப் பார்த்தான் மனோஜ்.

''ஏன்... எதனால இந்தத் திடீர் முடிவுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா அங்கிள்..?''

''ஏன்... எதனால்? ம்ம்ம்...? இதை எல்லாம் நீ உங்க அம்மாகிட்டக் கேளு. அவங்க சொல்வாங்க எல்லாத்தையும். ஆனா நீ ஆராதனாவை மறந்துடு.''

''அதை நீங்க என்ன சொல்வது அங்கிள்? உங்க கிட்ட பர்மிசன் கேட்டுக்கிட்டா நான் ஆராதனாவைக் காதலிச்சேன்?''

''மனோஜ்... ஆராதனா என் பொண்ணு. நீ அவளை விரும்பிட்டேங்கிறதுக்காக பிடிக்காத உனக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துட மாட்டேன். அவளை மறந்துவிடுவதுதான் நல்லது...''

''எனக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்ல என் அம்மா, அப்பா இருக்காங்க சார். நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்க போய் உங்க பொண்ணுகிட்ட இதையெல்லாம் சொல்லி என்னை மறக்க வைக்க டிரை பண்ணுங்க...''

''கண்டிப்பாகச் செய்வேன்டா. என் மகளை எப்படி கண்டிக்கணும்னு எனக்குத் தெரியும். நீ அதைச் சொல்ல வேண்டிய தேவையில்லடா. வா.. தில்லை.''

''சரிங்க சார்... போங்க. போய் உங்க மகளைக் கண்டிச்சு என்னை மறந்துடச் சொல்லுங்க. ஆனா ஒண்ணை மட்டும் தெளிவாகக் கேட்டுக்குங்க. ஆராதனா என்னை



நினைச்சாலும் சரி... மறந்தாலும் சரி. இந்த ஜென்மத்தில் அவள்தான் எனக்கு எல்லாமே. அதை மட்டும் உங்க பொண்ணு.. வேண்டாம்.. வேண்டாம்.. நீங்க நினைவில வெச்சுக்குங்க. இப்பக் கிளம்புங்க...'' கை கட்டி விடை கொடுத்தவனின் முகத்தைக் கூட பார்க்காமல் தில்லைநாயகத்தின் கைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றுவிட்டார் நந்தகுமார்.

நடப்பது எதுவுமே கவனத்தில் பதியாதவராய் தமயந்தியின் முகத்தையே பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றிருந்தார் நல்லுச்சாமி.

கால்கள் நடுங்கக் கட்டிலில் தளர்வாக அமர்ந்த தமயந்தி கண்களில் நிறைந்த கண்ணீருடன் நல்லுச்சாமியை நிமிர்ந்து பார்த்தாள்.

''தமயந்தி...!'' மனைவியின் கண்ணீரைக் கண்டு பதறியவராக ஓடி அவர் அருகில் அமர்ந்தார் நல்லுச்சாமி.

''இவர்தான் அந்த தில்லைநாயகம்...'' கணவரின் கண்களை நேராகப் பார்த்தபடி கூறினாள் தமயந்தி.

''எந்தத் தில்லைநாயகம் தமயந்தி. எனக்கு எதுவும் புரியலடி.. நீ ஏன் இப்படிக் கலங்குற... புரியற மாதிரி சொல்லு தமயந்தி...''

''அதாங்க... எங்க அண்ணன்கள் எனக்குப் பார்த்த மாப்பிள்ளை தில்லைநாயகம். எந்த மாப்பிள்ளை வேண்டாம்னு வந்தேனோ... வேரோட சொந்தத்தை அறுத்துக்கிட்டு நீங்களே எல்லாமுன்னு நினைச்சு வந்தேனோ... அந்த மனுசன்தான் இவரு...''

மனைவியின் துன்பத்திற்கான காரணம் புரிந்த நல்லுச்சாமி கோபத்துடன் திரும்பி மகனைப் பார்த்தார்.

''அப்பா?''

''ஏன்டா இந்த பணக்காரங்க எல்லோருமே ஒரே மாதிரியாவே இருக்காங்க? பணத்தைச் சம்பாதிக்கத் தெரிந்த இவர்களுக்கு மனிதர்களின் மனதைப் புரிஞ்சுக்கத் தெரியலியே? இவ என்ன குத்தம் செஞ்சான்னு காலம் முழுவதும் இவளுக்குத் தண்டனை கொடுத்துக்கிட்டே இருக்காங்க?'' மனம் குமுற கண்களில் கனல் தெறிக்கக் கேட்ட நல்லுச்சாமியின் கேள்வி மனோஜின் இயத்திலும் தீயாய் எரிய வைத்தது.

''அம்மா?''

''ஒருத்தரை மனதார விரும்பி அவனையே தன் கணவனாக எண்ணி வாழும் ஒருத்தியை அடுத்தவனைக் கட்டிக்க சொல்லி இவங்க வற்புறுத்துறது நியாயமாம்! ஆனால் அதை ஏத்துக்க முடியாமல் மனதால் நினைச்சவனோட வாழணும்னு ஒரு பொண்ணு முடிவெடுக்கிறது தப்பாம்? என்ன நியாயம்டா இது?''

''..........''

''இப்ப வந்துட்டுப் போனவங்களுக்கு என்னடா வேணுமாம்? என்னை நினைச்ச இவ என் நினைவுகளோட இவளைக் கட்டிக்கிட்டு மனதால ஒருத்தன் கூடவும் உகைத்துக்காக இன்னொருத்தன் கூடவும் வாழணுமா? இவனுங்க எல்லாம் இதைத்தான் எதிர்பார்க்கிறானுங்களா? அதற்குப் பேர் வாழ்க்கையாடா? அதோட பேர் வேறடா..?''



''அப்பா... எமோசன் ஆகாதீங்கப்பா. பொறுமையா இருங்க'' மனோஜ் அமைதிப்படுத்த முயன்றும் அமைதியற்றவராக குமுறிக் கொண்டிருந்தார் நல்லுச்சாமி.

''இவன்... இந்த தில்லைநாயகம்... நியாயவாதியா இருந்தால் என்னடா செஞ்சிருக்கணும்? தன்னைக் கட்டிக்கப் போற பொண்ணுகிட்ட தன்னை கல்யாணம் பண்ணிக்க விருப்பமான்னு கேட்டிருக்கணும். இவன் கேட்டானா? இல்லையே. தன்னோட வாழ்நாள் முழுவதும் வாழப்போகிற ஒருத்தியோட விருப்பத்தைக் கூட மதிக்காத இவன் எப்படி என் தமயந்தியை நல்லா வாழ வெச்சிருப்பான்? என் தமயந்தியைக் குறை கூற இவனுக்கு என்ன யோக்கியதை இருக்கு?''

''என்னங்க.. வேண்டாங்க... விட்டுவிடுங்க. நான் ஏதோ ஆதங்கத்தில் கண்ணீர் விட்டுட்டேன். அதை நினைச்சு நீங்க இவ்வளவு ஆத்திரப்படுறது உங்க உடம்புக்கு நல்லதில்லைங்க?'' கவலையுடன் கணவனின் காலருகில் அமர்ந்து அவர் முகம் பார்த்து சமாதானம் கூறிய தமயந்தியின் கன்னங்கள் இரண்டையும் தன் கைகளால் ஏந்திக் கொண்டார் நல்லுச்சாமி. அவரது கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் தமயந்தியின் மடியை நனைத்தது.

''இவ என்னடா பாவம் பண்ணினா? என்னைக் காதலிச்ச பாவத்திற்கு சொத்து சுகம் உறவுன்னு அத்தனையையும் விட்டு விட்டுத் தானடா வெளியேறினா. என் மனைவியாக ஆனதுக்கு பிறகு அவங்ககிட்ட எதையாவது இவ எதிர்பார்த்தாளா... இல்லை... நான்தான்

எதிர்பார்க்க விட்டிருப்பேனா. தங்கமாத் தாங்கி வளர்த்த உறவுகளும், தூக்கித் தலையில் வெச்சுக் கொண்டாடிய சுற்றத்தாரும் வெறுத்து ஒதுக்கிற தண்டனையை விட பெரிய தண்டனை வேற ஏதாவது இந்த உலகத்தில் இருக்கா மனோஜ்?''

தன்னைக் கேட்ட தந்தைக்குப் பதில் கூற வார்த்தைகள் இல்லாமல் தலைகுனிந்தான் மனோஜ்.

''அப்பேர்ப்பட்ட தண்டனையை தான் செய்யாத குத்தத்திற்காக ஏத்துக்கிட்ட தங்கம்டா உங்கம்மா. எத்தனை இரவுகளில் தூங்காமல் அழுதிருப்பா இவ? எத்தனை நாட்கள் சாப்பிடாம பட்டினி கிடந்திருப்பா இவ? இன்னும் மனசு ஆறாமல் எங்களை தேடி வந்து வேட்டையாடுற அளவுக்கு நாங்க செஞ்ச குற்றம் என்னடா? கொலைகாரனுக்குக் கூட அவங்க பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொல்ல டைம் குடுக்கிற இந்த சமுதாயம் எங்களை மட்டும் எதுக்காகடா இப்படி வாழ்நாள் முழுவதும் வேதனைப்படுத்துது?''

தாய் தந்தை இருவரையும் பார்த்த மனோஜ் குற்ற உணர்ச்சியோடு அங்கிருந்த கட்டிலில் தலையைக் கையில் தாங்கிக் கொண்டு சரிந்தான்.

ஆராதனாவோ தனக்கிருக்கும் காதல் தங்களது குடும்பத்தில் அனைவரையும் துன்பத்தில் ஆழ்த்தியிருப்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன் குடும்பத்திற்கும் ஆராதனாவின் குடும்பத்திற்கும் இடையில் இருக்கும் அந்தஸ்து ஒன்று மட்டும் தான் தங்களது காதலுக்கு குறுக்காக நிற்கும் என்கிற



எதிர்பார்ப்போடு இருந்த மனோஜ் அதை நிவர்த்தி செய்ய என்னென்ன முயற்சிகளைச் செய்ய வேண்டுமோ அதற்கான முயற்சிகள் அனைத்தையும் செய்து கொண்டிருந்தான்.

கேம்பஸ் இண்டர்வியூவிற்காக அவன் கடுமையாக முயற்சி செய்ததும்கூட அதற்காகத்தான். அது தவிர அவனே புதிதாக வடிவமைந்திருந்த சாப்ட்வேர் ஒன்றினையும் மாதிரிக்காக ஒரு வெளிநாட்டுக் கம்பெனிக்கு அனுப்பும் முயற்சியிலும் அவன் இறங்கி இருந்தான். அவனது சாப்ட்வேரினை அந்தக் கம்பெனி ஒத்துக் கொண்டால் அதன் பிறகு தங்களது வாழ்க்கையே வேறு ஒரு தளத்திற்கு உயர்ந்துவிடும் என்ற நம்பிக்கையோடு இருந்தான் அவன்.

பணத்திற்கு இடையில் இருந்த இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில் இருந்த மனோஜிற்கு இரு குடும்பங்களின் இடையில் இருந்த மனங்களின் வேற்றுமையைத் தீர்க்கும் வகை தெரியாமல் திகைப்பில் ஆழ்ந்துவிட்டான் அவன்.



## 28

''அம்மா...''

மாலையில் இருந்து அமர்ந்த இடத்திலேயே சிலையாக அமர்ந்திருந்த கணவரின் மடியில் தலை வைத்து

தானும் ஒரு சிலையாக அமர்ந்து விட்ட தமயந்தி மனோஜின் குரலைக் கேட்டுத் தலை நிமிர்ந்தாள்.

இருட்டி வெகு நேரமாகிவிட்டதை அப்போதுதான் உணர்ந்தவளாக வேகமாகத் தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்தவள் கண வரின் தோளில் கை வைத்து அவரையும் தன்னிலைக்குத் திரும்பும்படி அறிவுறுத்தினாள்.

தமயந்தியை நிமிர்ந்து பார்த்த நல்லுச்சாமி அமைதி யாக எதுவும் பேசாதவராக எழுந்து வீட்டிற்குள் செல்ல அவரைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்ற தமயந்தி நேராக சமையல் அறைக்குச் சென்று இரவு உணவிற் கான வேலைகளில் கவனத்தினை திசை திருப்ப முனைந்தாள்.

வழக்கமாக எதையாவது மனைவி மகனுடன் பேசிக் கொண்டே உணவருந்தும் வழக்கம் கொண்ட நல்லுச் சாமி அன்று எதையும் பேசும் மனநிலை இல்லாதவராக பெயருக்கு எதையோ கொறித்துவிட்டு எழுந்து செல்வதை வேதனையுடன் உணர்ந்த மனோஜிற்கும் உணவு தொண்டைக்குள் இறங்க மறுத்தது. அவனும் பெயரளவில் உண்டுவிட்டு எழுந்துவிட்டான்.

சமைத்த உணவு பாத்திரங்களில் அப்படியே இருக்க பெயருக்குக் கூட சாப்பிட மனமில்லாதவளாக அனைத் தையும் ஒதுங்க வைத்துவிட்டு படுக்கையில் சரிந்த தமயந்திக்கு உறக்கம் வர மறுத்தது.

அந்த வீட்டில் இருந்த அனைவருக்குமே அது தூங்காத இரவாக அமைய விடியலுக்காகக் காத்திருந்த படியே கண்மூடிக் கொண்டிருந்தார்கள் அனைவரும்.



''அப்பா நான் போயிட்டு வர்றேம்பா'' கல்லூரி செல்ல மனமே இல்லாதவனாக நல்லுச்சாமியிடம் கூறிக் கொண்டே காலில் செருப்பை மாட்டிக் கொண்டிருந்த மனோஜை பதட்டமாக தடுத்தாள் தமயந்தி.

''ஐயா... என்னய்யா இது? சாப்பிடாம இப்படிக் காலேஜிக்கும் போனா படிக்கிறதுக்கு தெம்பு வருமா?''

''வேண்டாம்மா. சாப்பிடப் பிடிக்கல. நான் வர்றேன். ஏற்கனவே லேட் ஆகிடுச்சும்மா...'' வேகமாக வெளியேறப் போன மனோஜை நல்லுச்சாமியின் குரல் அழைத்தது.

அப்படியே நின்று திரும்பிப் பார்த்தவனின் அருகில் வந்த நல்லுச்சாமி அவனைக் கட்டிலில் அமர வைத்துத் தானும் அவன் அருகில் அமர்ந்தார்.

''அப்பா... லேட் ஆகிடுச்சுப்பா. கிளாஸ் ஆரம்பிச் சுடும்'' தயக்கத்துடன் தந்தையிடம் கூறினான் மனோஜ்.

''பரவாயில்ல மனோஜ். இன்னிக்கு ஒரு நாள் லேட் டாப் போனா பரவாயில்லைப்பா. இத்தனை வருசத்தில நீ ஒருநாள் கூட லேட்டாப் போனதில்லையே... அத னால ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. நான் உன்கிட்டக் கொஞ்சம் பேசணும் மனோஜ்'' தந்தையின் பேச்சைத் தட்ட முடியாதவனாக கையில் இருந்த பேக்கை அருகில் இருந்த நாற்காலியில் வைத்தான் மனோஜ்.

''சொல்லுங்கப்பா...''

''ஆராதனாவைப் பத்தி நீ என்ன முடிவுக்கு வந்திருக்க மனோஜ்..?'' தந்தையின் முகத்தைப் பார்க்கத்

தயங்கியவனாக சற்று நேரம் அமைதியாக தன் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த மனோஜ் ஒரு தீர் மானத்திற்கு வந்தவனாக அவரை ஏறிட்டான்.

"உண்மையைச் சொல்லப் போனால் எனக்குத் தெரியலப்பா. ஒரே குழப்பமாக இருக்கு. ஆனால் ஒன்று மட்டும் உறுதிப்பா. என்னால் அவளைத் தவிர யாரையும் என்னோட மனைவியாக நினைச்சுக்கூடப் பார்க்க முடியாது."

மகனது இந்தப் பதிலையே எதிர்பார்த்திருந்தவராக அவனது முதுகைத் தடவிக் கொடுத்தார் நல்லுச்சாமி.

"இருக்கட்டும்ப்பா. நானும் இந்தப் பதிலைத்தான் உன்கிட்ட இருந்து எதிர்பார்த்தேன். ஏன்னா நானும் உன்னோட வயசையும், அனுபவத்தையும் கடந்து வந்தவன்தானே? அதான்..."

"எனக்கும் தெரியும்ப்பா.."

"ஆனால் மனோஜ்... நான் செய்த செயலை நீயும் ஆராதனாவும் செய்து விடாதீங்க. ஆராதனாவிற்கு உன் மேல இருக்கும் விருப்பம் எந்த அளவிற்கு இருக்குன்னு முதலில் நல்லாத் தெரிஞ்சுக்க மனோஜ்..."

"என்னப்பா சொல்றீங்க நீங்க? இதில் தெரிஞ்சுக்க என்ன இருக்கு?"

"நிறைய இருக்கு மனோஜ். அந்தப் பொண்ணுக்கு நீ முக்கியமா இல்ல உன்னைவிட அவளோட பெத்தவங்க முக்கியமான்றதை தெரிஞ்சுக்கணும் நீ. அப்படி அந்தப்



பொண்ணு பெத்தவங்கதான் முக்கியம்கிற முடிவுக்கு வந்ததுன்னா அதன் பிறகு நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் அவ வாழ்க்கைக்குக் குறுக்காக நிக்கக் கூடாது. இது என் மேல சத்தியம் மனோஜ்..."

"அப்பா.. அப்படியெல்லாம் நான்..."

"இரு மனோஜ். நான் இன்னும் பேசி முடிக்கலை. நான் வாழ்க்கையின் நிதர்சனத்தைப் பேசிக்கிட்டு இருக்கேன் மனோஜ். அப்படி அந்தப் பொண்ணு பெத்தவங்களை விட நீதான் முக்கியம்னு சொல்லுச் சுன்னா..."

"அதுக்கப்புறம் யாராலேயும் எங்களைப் பிரிக்க முடியாதுப்பா. நான் அவளை என்னோடவே..."

"இதைத்தான் சொல்ல வந்தேன். அவசரப்படாம நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளு. புரிஞ்சுக்கவும் முயற்சி பண்ணு மனோஜ்..."

"சாரிப்பா... சொல்லுங்க..."

"அப்படி அந்தப் பொண்ணு உன்னைத்தான் முக் கியமா நினைச்சா அவளை அவங்க பெத்தவங்க கிட்ட அவ வீட்டில் இருந்தே போராடச் சொல்லு..."

"அப்பா..."

"அப்பாதான் சொல்றேன் மனோஜ். விரும்பின வாழ்க்கையா இருந்தாலும் அது பெத்தவங்களோட ஆசீர்வாதத்தை அடிப்படையாக் கொண்டு ஆரம்பிச் சால்தான் உங்க வாழ்க்கை நிம்மதியா இருக்கும்..."

''என்னப்பா நீங்க...''

''இல்லை மனோஜ். இதுதான் சரியாக இருக்கும். ஆயிரம் தான் நீ தங்கமாத் தாங்கினாலும் அந்தப் பொண்ணோட ஆழ் மனசுல அவ அப்பா, அம்மா, சொந்தங்களைப் பத்தின ஏக்கம் இருக்கும்டா. அப்புறம் எப்படி உங்க வாழ்க்கை நிறைவான வாழ்க்கையா இருக்கும். முதலில் போராடிப் பார்க்கச் சொல்லு. உங்கம்மா வீட்டில் நடந்ததைப் போல நடந்ததுன்னா அதன்பிறகு என்ன செய்யணுமோ அதை நாம பார்த்துக்கலாம்.''

''சரிப்பா...''

''அப்புறம் மனோஜ். காதலிக்கிறதும் அதே பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிறதும் பெரிசுல்ல... அந்தப் பொண்ணை காலம் முழுவதும் கண்கலங்காம வெச்சுக் காப்பாத்தும் வாழ்க்கையில்தான் உன் காதலின் பெருமையே அடங்கியிருக்கு. நீ உன்னை அதற்காக தயார் பண்ணிக்க மனோஜ். ஒரு கோடீஸ்வரியைக் கை பிடிக்கும் தகுதியை நீ முதலில் வளர்த்துக்க. வசதியா வாழ்ந்த பெண் உன் மேல இருக்கும் அன்பினால் அத்தனையையும் விட்டுட்டு உன் பின்னால் வருதுன்னா... அதுக்கு அந்த வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதுதான் உன்னோட கடமையா இருக்கணும் மனோஜ். அதுக்காக என்ன முயற்சி பண்ணனுமே அதை நீ பண்ணு. அந்தப் பொண்ணு அதோட அன்பின் ஆழத்தை அவங்க பெத்தவங்களுக்கு நிரூபிச்சுக் காட்டட்டும்.. அதன் பிறகு என்ன செய்யணுமோ அதை நான் பார்த்துக்கறேன். புரியுதா...?''



''புரியுதுப்பா. நான் உங்க மகன்ப்பா. நீங்க சொல்வது மாதிரி நான் முன்னேறுவதற்கான முயற்சிகளை செய்துக்கிட்டுதான் இருக்கேன்ப்பா. இது என் காதலுக்காக மட்டும் இல்லப்பா. எனக்காக பெண் கேட்டுப் போகும் போது நீங்க தலைநிமிர்ந்து நிக்கணும்ப்பா. அவங்க அந்தஸ்துக்குக் குறையாத கவுரவத்தோடு நீங்க இருக்கணும். உரிய மரியாதையோட என் பொண்டாட்டி உங்களுக்கு மருமகளா வரணும். அதுக்காகத்தான்ப்பா நான் உழைச்சுக்கிட்டு இருக்கேன். அதை நான் முழுமையா செயல்படுத்தியும் காட்டுவேன்ப்பா.'' மனோஜின் வார்த்தைகளில் தெரிந்த உறுதியும் தன் னம்பிக்கையும் அவனைப் பெற்றவர்களின் மனதினை குளிர வைத்தது.



# 29

**வ**ழக்கம் போல பால்கனியின் ஊஞ்சலில் அமர்ந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்த ஆராதனாவின் கையில் காபி கப்பைத் திணித்த அன்னம்மாவின் முகத்தில் உற்சாகமில்லாதது ஆராதனாவின் கவனத்தில் பதிந்தது.

முதல்நாள் காலையே தில்லைநாயகமும் நந்தகுமாரும் மனோஜின் வீட்டிற்குச் செல்லப் போவதை ஆராதனாவிற்கு அன்னம்மா கூறிவிட்டாள். ஆரா

தனாவின் முகத்தில் தெரியும் ஆனந்தத்தை முதன் முதலாக தான்தான் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அன்னம்மாவிற்கு.

ஆராதனாவைக் குழந்தைப் பருவத்தில் இருந்து தூக்கி வளர்த்தவள் அன்னம்மா. அதனாலேயே ஆராதனாவை அவள் பெற்ற பெண் போல எண்ணி அளவில்லாத பாசம் காட்டி வந்தாள் அவள். தன் பாசத்திற்குரிய ஆராதனாவிற்கு அவள் விரும்பிய வாழ்க்கை அமையப் போவதை எண்ணி மகிழ்ச்சியில் கூத்தாடிக் கொண்டிருந்தாள் அன்னம்மா. மாலை தில்லைநாயகமும் நந்தகுமாரும் கிளம்பிச் சென்றவுடனேயே சமையல் அறைக்குள் சென்றுவிட்ட அன்னம்மா அவர்கள் இருவரும் திரும்பி வருவதற்குள் விருந்து சாப்பாட்டையே வடை பாயாசத்துடன் செய்து வைத்துவிட்டு அவர்களின் வரவிற்காக ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அன்னம்மா எதிர்பார்த்ததிற்கு மாறாக ஒரு பூகம்பத்தையே உள்ளடக்கிய அமைதியுடன் இறுகிய பாறையைப் போன்ற முகத்துடன் இருவரும் திரும்பி வந்ததைப் பார்த்த அன்னம்மாவின் உள்ளுணர்வு தன்னுடைய அன்பிற்குரிய ஆராதனாவின் வாழ்வை இருள் சூழப் போவதை முன்கூட்டியே அவருக்கு உணர்த்திவிட்டது. அவள் திகிலுடன் மார்பில் கை வைத்து சுவரில் சாய்ந்து நின்றுவிட்டாள். வேகமாக வந்த தில்லைநாயகமும் நந்தகுமாரும் கண்களால் தத்தமது மனைவியை அழைத்துக் கொண்டே நந்தகுமாரின் அறைக்குள் சென்றுவிட சமையல்காரியான



அன்னம்மா நடந்தவற்றை அறிய முடியாத தவிப்புடன் சமையல் அறை வாசலைப் பிடித்துக் கொண்டு நின்று விட்டாள்.

வெகுநேரம் கழித்து வெளிவந்த வாசுகியின் அழுது வீங்கிய கண்களும், நந்தகுமாரின் இறுக்கமான முகமும் தன்னுடைய உள்உணர்வு கூறியது உண்மைதான் என்பதை அன்னம்மாவிற்கு உணர்த்திவிட அவள் உணவு வகைகளை சாப்பாட்டு மேஜையில் எடுத்து வைக்கக் கூட மறந்தவளாக தன்னுடைய அறைக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

சாப்பாட்டு மேஜையில் அமர்ந்த நந்தகுமார் ஆராதனாவின் முகத்தை தீவிரமாகக் கண்காணித்தபடியே இருந்ததை கண்களை உயர்த்தாமலேயே அறிந்து கொண்ட ஆராதனாவிற்கு தன் காதலின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அவள் நந்தகுமாரை விட தீவிரமான உறுதியை மனதிற்குள் வரவழைத்தவளாக அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''ஆரா...'' தந்தையின் அழைப்பை எதிர்பார்த்திருந்த ஆராதனா உடனடியாக தந்தையைப் பார்த்தாள்.

நந்தகுமாரின் முடிவினை ஏற்கனவே அறிந்திருந்த வைகுந்தனோ மனதின் துன்பத்தை மறைக்காத கண்களுடன் ஆராதனாவை பரிதவிப்போடு பார்த்தான்.

''சொல்லுங்கப்பா..'' உறுதியினை மறைத்த குரலில் நந்தகுமாரிடம் கேட்ட ஆராதனாவின் கண்கள்

வைகுந்தனை ஒருமுறை அழுத்தமாகப் பார்த்துவிட்டு மீண்டது.

''ஆரா... அப்ப சொல்வதைக் கேட்பாயில்லடா...''

''கண்டிப்பாக் கேட்பேன்ப்பா. அதிலென்ன சந்தேகம் உங்களுக்கு? நான் உங்க பொண்ணுப்பா...'' மகளது வார்த்தைகள் நந்தகுமாரின் கண்களை நனைக்க அவர் ஒரு பெருமையோடு தன்னைச் சுற்றிலும் இருந்த வர்களின் மீது பார்வையைச் சுழற்றினார்.

''ரொம்பப் பெருமையா இருக்குடா ஆரா... நீ நல்லா இருட்டா. சாப்பிடு'' அதற்கு மேல் எதுவும் கூறாத தந்தையை எந்தக் கேள்வியும் ஆராதனா விரைவாக சாப்பிட்டுவிட்டு ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து தந்தையின் வரவிற்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

அவளது எதிர்பார்ப்பினைப் பொய்யாக்காத நந்த குமார் தானும் உணவினை முடித்த கையோடு ஆராத னாவின் அருகில் வந்து அமர அவர்களுடன் குடும் பத்தின் மற்றவர்களும் அமர்ந்தார்கள்.

''சொல்லுங்கப்பா...'' ஒற்றை வார்த்தையில் கேட்ட மகளது புத்திக்கூர்மையை என்றும் போல மனதிற்குள் பாராட்டிக் கொண்டார் நந்தகுமார்.

''ஆரா.. உன் விருப்பத்திற்கு நான் என்னிக்குமே தடையாக இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனா உன் ஆசைகளை நிறைவேற்றத்தான் நான் வாழுவதன் அர்த்தமாகவே நினைப்பவன் நான்..'' தந்தையின்



அன்பினை உணர்ந்திருந்த ஆராதனாவின் கண்கள் பனித்தது.

''தெரியும்ப்பா...''

''ஆனால் உன் வாழ்க்கையின் மிகப்பெரிய ஆசையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைக் கைதியாக நிக் கிறேன்ம்மா நான். அதை நான் விதின்னு சொல்வதா இல்லை என் கடமைன்னு சொல்வதான்னு எனக்குத் தெரியலடா...''

''அப்படி என்னப்பா நடந்தது... என்னால் புரிஞ்சுக்க முடியும்னு நினைச்சா சொல்லுங்கப்பா...''

நந்தகுமார் தங்கையின் முகத்தை சங்கடத்துடன் பார்த்தாலும் தில்லைநாயகத்தின் திருமணம் நின்ற தையும், அவரை மறுத்துவிட்டு தமயந்தி நல்லுச்சாமியை மணந்ததையும், தன் நண்பரின் மானத்தைக் காக்க நந்தகுமார் தன் தங்கையையே தில்லைநாயகத்திற்கு மணமுடித்து வைத்ததையும் மறைக்காமல் ஆராதனா விடம் எடுத்துரைக்க தில்லைநாயகம் அன்று நடந்த அவமானத்தை இன்றும் உணர்பவராகத் தலைகுனிந்து கொண்டார். அவரை ஆதரவுடன் பார்த்த வைரமணி அவரது கையைப் பிடித்துக் கொண்டாள்.

திருமண மேடை வரை வந்த கல்யாணம் நின்று போவதை விட ஒரு பெண்ணால் மறுக்கப்படுவது அந்த ஆணின் மனதில் என்னவிதமான வலியை உரு வாக்கிடும் என்பதையும், அவனது ஆண்மை கொள்ளும் அவமானத்தையும் உணர்ந்து கொண்ட மனதோடு தந்தையைப் பார்த்தான் வைகுந்தன்.

நடந்தவற்றை மறைக்காமல் கூறிய நந்தகுமார் ஆராதனாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

''உன்னுடைய விருப்பத்திற்காக இந்தக் கல்யாணத்தை நான் நடத்தினாலும் உன் மாமாவால் ஒரு மனதாக அதை ஒத்துக்க முடியுமா ஆராதனா. இனிமேல் அந்தக் குடும்பத்தோட உறவை புதுப்பித்துக் கொள்ளும் மனசு அவருக்கு இருக்குமா ஆரா? நீயே சொல்லு...''

''.......''

''ஆராதனா, எனக்கு நீ எப்படியோ அப்படித்தான் என் தங்கையும். ஒரு கண்ணிற்கு நன்மை செய்வதற்காக நான் என் இன்னொரு கண்ணை இழக்க முடியாது. இரண்டு கண்களும் ஒன்றாகப் பார்த்தால்தான் காட்சியில் தெளிவு இருக்கும். அதனால் இந்தக் கல்யாணம் நடக்காது ஆரா...''

''அதெல்லாம் சரிப்பா. இதற்கு மாமா என்ன சொல்றாங்கன்னு கேட்டீங்களா? என்னா இதில் நேரடியாக சம்பந்தப்பட்டு இருப்பது மாமாதானே?'' ஆராதனாவின் கேள்வியை எதிர்பார்க்காத தில்லைநாயகம் திகைப்புடன் அவளைப் பார்த்தார்.

''இதில் நான் சொல்ல என்ன இருக்கு ஆரா? ஆனால் நான் உன்னோட கல்யாணத்தை நிறுத்தச் சொல்லலடா.''

''ஆனால் உங்களால என் மனோஜோட அப்பா அம்மாவை சொந்தமா ஏத்துக்க முடியுமா மாமா?''



''அது... வந்து... எனக்குத் தெரியல ஆரா. ஆனால் உனக்காக நான் அவங்களை ஏத்துக்க முயற்சி பண்றேன்டா...'' அவரது வார்த்தைகளைக் கேட்ட வைரமணியின் கண்களில் தெரிந்த வேதனையை ஆராதனா உணர்ந்து கொண்டாள்.

''ஏன் மாமா... நீங்க தமயந்தி அத்தைகிட்ட உங்களைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமான்றதை கேட்டீங்களா?'' ஆராதனாவின் கேள்வி தில்லைநாயகத்தின் மனதில் ஈட்டியாகப் பாய்ந்தது.

''இல்லை ஆராதனா. ஆனால் எங்களுடைய காலத்தில் இதையெல்லாம் கேட்கும் வழக்கமும் இல்லை...''

''அதெப்படி மாமா... இது என்ன நியாயம்? வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வரும் சொந்தமான மனைவியின் விருப்பத்தை தெரிந்து கொள்ளணும்கிற ஆசை உங்களுக்கு இல்லையா?''

''அவங்க வீட்டில அவளைப் பார்க்கவே விடலை ஆராதனா. நான் அவளைப் பார்த்ததே கோவிலுக்கு அவ அவங்க குடும்பத்தோட வருகிற போதுதான். அதனால அவளைத் தனியாப் பார்க்கிற சந்தர்ப்பம் கூட எனக்குக் கிடைக்கல. நிச்சயத்தைக் கூட கல்யாணத்துக்கு முதல் நாள் பந்தலிலேயே வைத்துக்கலாம்னு அவளோட அண்ணன்களும் அப்பாவும் சொல்லிட்டாங்க. அப்புறம் நான் என்ன செய்வது?''

''இதில் அத்தையோட தவறு ஏதாவது இருக்கா மாமா? ஆண்பிள்ளையான நீங்களே உங்க மனதைத் தெரிவிக்க முயற்சி எடுக்காதபோது பெண்பிள்ளையான அவங்க மட்டும் உங்ககிட்ட எல்லாத்தையும் எப்படி மாமா சொல்வாங்க? அவங்க சொல்வதற்கான வாய்ப்பு எப்படி அவங்களுக்குக் கிடைத்திருக்கும்?''

''ஆரா...''

''செய்ற தப்பையெல்லாம் நீங்களும் சேர்ந்துதான் செய்திருக்கீங்க மாமா? அப்புறம் அவங்களை மட்டும் குறை சொல்வது சரியா? அப்ப மட்டும் இல்லை மாமா... இப்பவும் நீங்க தப்பு தான் பண்றீங்க...''

''இப்பவா... நானா?''

''ஆமாம். உங்களை விரும்பாமல் போன ஒரு பெண்ணை நீங்க அன்னிக்கே தலை முழுகியிருக்கணும். அவளோட நினைவுகள் கூட உங்ககிட்ட இருந்திருக்கக் கூடாது. அதுதானே உங்களை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்ட எங்க அத்தைக்கு நீங்க செய்யும் நியாயம்?''

''ஆரா... நான்.''

''நீங்க தான் மாமா. நீங்க மட்டும் தான். எங்க அத்தையைப் பாருங்க... அவங்க கண்களில் தெரியுற அடிபட்ட வேதனையைப் பாருங்க. அதை உங்களால் புரிஞ்சுக்க முடியுதா? உங்களை வேணாம்னு சொன்னவங்களை நேருக்கு நேராகப் பார்த்தாலும் நீ எனக்குத் தேவையில்லைங்கிற முடிவோடு தெளிவா நீங்க



இருந்திருந்தா எங்க அத்தை கண்ணில் இத்தனை வேதனை வந்திருக்குமா? அவங்களைப் பார்த்தவுடன் உங்களுக்கு உங்க அவமானம்தான் ஞாபகம் வந்ததேயொழிய எங்கத்தையோட அன்பு உங்களுக்கு ஞாபகம் வரலியா?''

''போதும் ஆராதனா...''

''இல்லை மாமா... நான் கேட்க வந்ததைக் கேட்காமல் நிறுத்த மாட்டேன். உங்க மனைவியா தமயந்தி அத்தை வந்திருந்தால் கூட உங்களோடு இத்தனை அன்பா நிறைவா வாழ்ந்திருப்பாங்களா? மனதில் ஒருவரை வைத்துக் கொண்டு உங்களோடு வாழற வாழ்க்கை அவங்களுக்கு ஜென்ம தண்டனை இல்லையா?''

''சேச்சே.. என்ன ஆரா இது?''

''கேட்கவே அருவெறுப்பா இருக்கிறதை செயல்படுத்தாம போனதற்காக அவங்களுக்கு நீங்க நன்றி சொல்லணும் மாமா. அத்தோட உங்களோடு இத்தனை வருசமா உண்மையா வாழ்ந்த எங்க அத்தைகிட்ட நீங்க நன்றி சொல்வதா இல்லை மன்னிப்பு கேட்பதா என்பதை நீங்களே முடிவு பண்ணிக்கங்க...'' அதற்கு மேல் பேச விரும்பாதவளாக எழுந்து சென்றுவிட்ட ஆராதனாவின் முதுகை வெறித்துப் பார்த்தவராக நிலைகுலைந்து அமர்ந்துவிட்டார் தில்லைநாயகம்.



# 30

மனிதர்கள் அனைவரும் எதையே பிடிக்கப் போகும் அவசரத்துடன் விரைந்து கொண்டிருக்க அமைதியுடன் அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு காரில் அமர்ந்து இருந்தாள் ஆராதனா. அவளது அமைதியை அடிக்கடி திரும்பி நம்ப முடியாத ஆச்சரியத்தோடு பார்த்தான் வைகுந்தன்.

அன்று காலை என்றும் போல அமைதியுடன் விடிந்திருந்தது. முதல் நாள் இரவு நடந்த எதுவுமே நினைவில் இல்லாதவளைப் போல கல்லூரி செல்ல தயாராகி வந்த ஆராதனாவைப் பார்த்து புருவம் உயர்த்தினார் நந்தகுமார்.

''ஆராதனா.. இங்க வாடா...'' ஹாலில் அமர்ந்து இருந்த தந்தையின் அழைப்பைக் கேட்ட ஆராதனா தன் கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு அவர் அருகில் சென்று அமர்ந்தாள்.

''நீ நேற்று பேசினதெல்லாம் நியாயம்தான்டா...''

''தேங்க்ஸ்ப்பா...'' ஒருவித எச்சரிக்கையோடு கூறினாள் ஆராதனா. அவளுக்கு நந்தகுமாரைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் ஒரு முடிவெடுத்துவிட்டால்



அத்தனை சீக்கிரமாக தன்னுடைய முடிவில் இருந்து அவர் பின்வாங்க மாட்டார்.

''ஆனால் நீ சொன்னபடி என் பேச்சைக் கேட்பாய் தானே ஆராதனா?''

''ம்ம்ம்.. நிச்சயம்ப்பா...''

''இந்தக் கல்யாணம் நடக்காது ஆராதனா...''

''ம்ம்... சரிப்பா...'' தன் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் உடனே ஒத்துக்கொண்ட மகளை ஆச்சரியமாக பார்த்தார் நந்தகுமார்.

''வெரிகுட்.. வெரிகுட்... இப்படித்தான் தெளிவாக இருக்கணும் ஆரா. உன் கவனத்தைச் சிதற விடாம படிப்பில் கவனம் செலுத்து ஆரா. மத்ததை நான் பார்த்துக்கறேன்.''

''படிப்பில் கவனம் செலுத்தறேன்ப்பா. ஆனா... மத்ததைன்னா... எதைப்பா?'' புரியாதவளாக கேட்டாள் ஆராதனா.

''என்னடா கேள்வி இது? உன்னை இப்படியே படிச்சுக்கிட்டே இருக்க விட முடியுமா என்ன?''

''அப்புறம்?'' கேட்டுவிட்டு உறுதியாக தந்தையை கண்ணோடு கண் பார்த்தாள் ஆராதனா.

''அப்புறம் என்னடா? உனக்கும் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்க வேண்டாமா? இப்பவே பார்க்க ஆரம்பித்தால்தானே உன் படிப்பு முடிந்தவுடன் கல்யாணத்தை

முடிக்க முடியும்? நல்ல பையனா... நம்ம அந்தஸ்துக்கு ஏத்தவனா...''

''அப்படியெல்லாம் செய்து இன்னொரு தமயந்தியை உருவாக்கி விடாதீங்கப்பா. நான் உங்களோட மகளா.. உங்களுக்கு உண்மையா இருக்கணும்னு ஆசைப் படறேன்...'' தெளிவுடன் அதே நேரத்தில் உறுதியுடன் ஒலித்த ஆராதனாவின் வார்த்தைகளை கேட்ட நந்த குமார் திக்பிரமை அடைந்தவராக அமர்ந்துவிட்டார்.

''ஆராதனா...!''

''ஆராதனாதான்பா சொல்றேன். நான் உங்களோட பேச்சைக் கேட்கறேன். படிக்கிறேன். உங்களுக்கு அன் பான மகளா.. அத்தை மாமாவுக்கு அன்பான மருமகளா... ஆதித்யாவுக்கு அன்பான அக்காவா... இங்கயே... நம்ம வீட்டிலேயே இருந்துடறேன். அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவுமே இல்லை....''

''அதெப்படிம்மா உன்னை அப்படியே இருக்க விட முடியும். ஒரு தகப்பனா நான் என் கடமையைச் செய்ய வேண்டாமா?''

''செய்ய விடாமல்தான் உங்க சூழ்நிலை உங்களைத் தடுக்கதேப்பா. நான் என்ன செய்ய முடியும்? ஒரு மகளாக உங்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தற மாதிரி நான் நடக்க மாட்டேன்ப்பா.''

''ஆரா!''

''அதே மாதிரி என்னை வேற முடிவு எடுக்கிற மாதிரியான சூழ்நிலைக்கு நீங்களும் கொண்டு வந்துட



வேண்டாம். நான் உங்க விருப்பம் இல்லாம மனோஜைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்ப்பா. அதே நேரத்தில் என் உயிரைக் கூட விடுவேனே யொழிய இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கவும் மாட்டேன். உங்களுக்கு விருப்பம் இருந்தால் மனோஜோட என்னைச் சேர்த்து வைங்கப்பா. இல்லா விட்டால் நான் உங்க பொண்ணா உங்க கூடவே இருந்திடறேம்ப்பா... இதுதான் என் இறுதியான முடிவு. இதற்கு மேல் இதைப்பத்தி யாரும் என்கிட்ட பேச வேண்டாம்ப்பா... ப்ளீஸ்..'' உறுதியுடன் கூறிவிட்டு பேக்கை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு கல்லூரிக்குக் கிளம்பிவிட்டாள் ஆராதனா.

''ஸாரி ஆரா...'' வைகுந்தனின் வார்த்தைகளில் தெரிந்த உண்மையான அன்பு ஆராதனாவின் உள்ளத்தைத் தொட்டது. அவனது வார்த்தைகளின் அன்பில் உடைந்தவளாக கண்களில் நீர் வழிய வேதனையுடன் அழுதுக் கொண்டே சீட்டில் சாய்ந்து கொண்டாள் ஆராதனா.

ஆராதனாவின் வேதனையைக் குறைக்கும் வகை தெரியாத வைகுந்தன் தன்னுடைய கையாலாகா தனத்தை எண்ணித் தானே நொந்து கொண்டான்.

''வேண்டாம் ஆரா... அழாதே. நீ அழுவதை என்னால் பார்க்க முடியலை. உன்னை அழவிட்டு வேடிக்கை பார்க்கும் நிலை வருமென்று நான் கனவில் கூட நினைச்சதில்லை...''

"இதுதான் என் தலைவிதின்னா அதுக்கு நீ என்ன செய்ய வைகுந்த்? நான் மனோஜை அவருக்காக மட்டும்தான் விரும்பினேன் வைகுந்த். எனக்கு அவரோட அந்தஸ்து குடும்பப் பின்னணி எதுவும் தேவையில்லை. அவருக்காக அவர்களின் அத்தனை உறவுகளையும் அவங்களோட நிறை குறையோடு அப்படியே நான் ஏற்றுக் கொள்வேன் வைகுந்த்..."

"எனக்குப் புரியுது ஆரா. இந்தக் குணம் அளவில்லாத காதலால் மட்டுமே சாத்தியம்..."

"என் மனோஜ் தான் எனக்கு எல்லாமும். இனி வாழ்க்கை அவரோட மட்டும் தான் வைகுந்தன். எனக்கு நம்பிக்கை இருக்கு. என் அன்பு அப்பாவோட மனசை மாத்தி விடும். அந்த நாளுக்காக நான் காத்திருப்பேன் வைகுந்த். அதுக்கு எத்தனை வருடங்கள் ஆனாலும் சரி.. நான் காத்திருப்பேன்."

"ஆனா மனோஜ்...?"

"அவரைப் பத்தி எனக்குத் தெரியும் வைகுந்த். எனக்காக அவர் இந்த ஜென்மம் முழுவதும் கூட காத்திருப்பார். நாங்க ரெண்டு பேரும் இப்பவே மனதால ஒன்று தான் வைகுந்த். நான் நினைப்பதைத்தான் அவர் நினைப்பார். அவர் நினைப்பதைத்தான் நான் செய்வேன்..." அளவில்லாத காதல் தந்த நம்பிக்கையுடன் ஆராதனா கூறுவதைக் கேட்ட வைகுந்தனின் உள்ளத்தில் அவளது காதலுக்குப் பாத்திரமான மனோஜின் மீது லேசான பொறாமை தோன்றியது.



'இப்படியொரு பரிசுத்தமான காதலைப் பெற மனோஜ் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டவனிடம் இருந்த அவனையறியாமல் ஒரு பெருமூச்சு வெளிவந்தது.



# 31

வகுப்பறையில் இருந்த அனைவரின் கவனமும் ஆசிரியர் நடத்திக் கொண்டிருந்த பாடத்தில் இருக்க ஆராதனாவின் பார்வை மட்டும் ஜன்னலின் வழியாகத் தெரிந்த கல்லூரி வாசலையே பார்த்துக் கொண்டிருந்தது.

இரண்டு மூன்று முறைகளாக ஆராதனாவைக் கவனித்தும் அவளது திறமையை அறிந்து கொண்டிருந்த ஆசிரியரும் எதையும் கவனிக்காதவராக பாடத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். ஆராதனாவின் கவனத்தைத் திசை திருப்ப முயன்ற ராதிகாவும் முடியாமல் தோல்வியுடன் திரும்பிக் கொண்டாள்.

மதிய உணவு இடைவேளை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திற்கே கல்லூரி வந்த மனோஜின் பார்வையும் கல்லூரி வாசலை மிதித்தவுடனேயே உயர்ந்து ஆராதனாவின் கிளாஸைப் பார்க்க ஆராதனாவின்

கண்கள் குளமாகியது. இத்தனை அன்பு கொண்ட இருவரையும் பிரிக்கும் எண்ணம் மட்டுமே கொண்ட பெரியவர்களை எண்ணி வேதனைப்பட்டாள் அவள்.

கல்லூரிக்கு வந்தும் தன்னுடைய வகுப்பறைக்கு செல்லாத மனோஜ் வாசலில் போடப்பட்டிருந்த சிமிண்ட் பெஞ்ச்சில் ஆராதனாவின் பார்வையில் படும் படியாக வாகாக அமர்ந்து கொண்டான். அவன் கிளாசைப் புறக்கணித்துப் பார்த்திராத ஆராதனா நகத்தைக் கடித்துக் கொண்டே அந்த பீரியட் முடியும் நேரத்தை எதிர்பார்த்து காத்திருக்க ஆரம்பித்தாள். மனோஜ் தனக்காகவே காத்திருக்கிறான் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட ஆராதனாவிற்கு அதற்குமேல் கிளாஸில் இருப்புக் கொள்ளவில்லை.

நெருப்பின் மீது அமர்ந்தவளைப் போலத் துடித்துக் கொண்டிருந்த ஆராதனாவின் நிலையை உணர்ந்து கொண்ட ராதிகாவிற்கு அவள்மேல் பரிதாபம் தொற்றியது. ஈ, எறும்புக்குக் கூட பாவம் பார்க்கும் மென்மையான குணம் கொண்ட ஆராதனாவிற்காக அவளது சொந்தங்களே பாவம் பார்க்காத விதியை எண்ணி நொந்து கொண்டது ராதிகாவின் மனம்.

அந்த பீரியட் முடிந்தவுடன் தன் இடத்தில் இருந்து எழுந்து அடுத்த பீரியடிற்கான ஆசிரியர் வருவதற்குள் வகுப்பில் இருந்து வேகமாக வெளியேறிய ஆராதனாவை ராதிகா தடுக்க முயலவில்லை. அவளது எண்ணத்தைப் புரிந்தவளாக ஆராதனாவின் புத்தகத்தையும் நோட்டையும் அவளது பேக்கிற்குள் வைத்துப் பூட்டிய



ராதிகா ஆராதனா மனோஜிடம் சென்று விட்டதை ஜன்னலின் வழியாகப் பார்த்து உறுதி செய்து கொண்டு பின் பாடத்தில் கவனமானாள்.

ஆராதனா வருவதைப் பார்த்த மனோஜ் அவளது வரவை எதிர்பார்க்காதவனாக அமைதியுடன் எழுந்து சென்று தனது பைக்கை ஸ்டார்ட் செய்ய ஆராதனா அவன் பின்னால் ஏறி அமர்ந்து கொண்டாள்.

ஆற்றில் வெள்ளம் அளவாக அழகாக ஓடிக் கொண்டிருக்க கரையோரம் வளர்ந்திருந்த நாணல் புற்கள் ஆனந்தமாக காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் அமர்ந்திருந்த இருவரின் முகத்திலும் அந்த ஆனந்தம் காணாமல் போக அதனைத் தங்களின் முன்னால் இருந்த காற்றில் தேடிக் கொண்டிருப்பவர்களாக மௌனமாக ஒருவரையொருவர் பார்த்தவாறு அமர்ந்திருந்தார்கள் மனோஜும் ஆராதனாவும். இரவெல்லாம் அழுது வீங்கிய கண்களும் கவனமற்ற ஆடை அலங்காரமும் இலக்கில்லாமல் வெறித்த பார்வையும் ஆராதனாவின் மனநிலையை மனோஜிற்கு எடுத்துரைக்க அவன் கை நீட்டி ஆராதனாவை இழுத்துத் தன் அணைப்பில் அமர்த்திக் கொண்டு கலைந்திருந்த அவளது முடியைக் கோதி விட்டான்.

ஆயிரம் வார்த்தைகள் உணர்த்த முடியாத அன்பையும் ஆறுதலையும் மனோஜின் ஒரே ஒரு அணைப்பில் உணர்ந்து கொண்ட ஆராதனா மனோஜின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்

டாள். மூடிய இமைகளில் இருந்து வழிந்த கண்ணீர் மனோஜின் மார்பை நனைக்க அவளது வேதனை தனக்குள் இறங்கியவனாக மனோஜின் கண்களும் ஈரமாகியது.

"ஆராதனா... என்னைப் பாருடா.. என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"உங்களை நம்பாமல் நான் யாரை நம்புவேன் மனோஜ்?"

"அப்புறம் ஏன்டி இப்படி அழுதுக்கிட்டு இருக்க? நீ இப்படி வேதனைப்படுறதுக்காகவா நான் உன்னைக் காதலிச்சேன். உன்னோட அழுகையைப் பார்க்கும் போது என் மேலயே எனக்கு வெறுப்புத் தோணு தடி.." அவனது வார்த்தைகளில் தெரிந்த துக்கத்தை உணர்ந்த ஆராதனா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"இங்க பாரு ஆராதனா.. என்னை நிமிர்ந்து பாரேன்." அவளது முகவாயை நிமிர்த்தி அவளது கண்ணோடு தன் கண்ணைக் கலக்க விட்ட மனோஜிற்குத் தான் பேச வந்ததே மறந்து விட்டது.

ஆராதனாவின் அகன்ற கண்களில் தெரிந்த அளவில் லாத வேதனை கலந்த துயரம் மனோஜின் இதயத்தைக் கூறுகூறாகக் கிழித்துப் போட்டது.

"ஆராதனா..." அவளை இழுத்துத் தனக்குள் இறுக்கிக் கொண்ட மனோஜின் விழிகள் அவன் ஒரு ஆண்



என்பதையும் மறந்து கண்ணீரை அருவியாகப் பொழிய அவனது உடல் அழுகையில் குலுங்கியது.

மனோஜின் அணைப்பில் ஆனந்தமாக அடங்கி இருந்த ஆராதனா அவன் உடல் அழுகையில் குலுங்கு வதை அறிந்து உயிரெல்லாம் பதறியவளாக நிமிர்ந்து பார்த்து அவன் முகத்தைத் தன் கைகளால் ஏந்திக் கொண்டாள்.

"*சீச்சீ*.. மனோஜ்.. என்ன இது சின்னப்பிள்ளை யாட்டம். இப்படி அழுதுகிட்டு.. மனோஜ் இங்க பாருங்களேன்..." அவள் எவ்வளவோ ஆறுதல் கூறியும் அடங்க மறுத்துக் கண்ணீரைப் பொழிந்து கொண்டிருந்த மனோஜின் இமைகளில் தன் இதழ்களை பதித்தாள் ஆராதனா. உடல் சிலிர்க்க அவளை அணைத்துக் கொண்ட மனோஜை இறுகத் தழுவியவளாக சரிந்த ஆராதனாவின் மேல் படர்ந்த மனோஜிற்கு உலகமே மறந்தது.

தன் மேல் படர்ந்த மனோஜை விலக விடாமல் அவனைத் தன்னுடன் இறுக்கிக் கொண்ட ஆராத னாவைத் திகைப்புடன் பார்த்தான் மனோஜ். அவனது திகைப்பை சட்டை செய்யாதவளாக அவனைத் தொடர்ந்து முன்னேறச் செய்த ஆராதனா அவனிடம் தன்னை ஒப் படைக்கும் முடிவில் அவனை முன்னேற அனுமதித்துக் கொண்டிருந்தாள்.

ஆவேசத்துடன் முன்னேறினாலும் ஒரு எல்லை யுடன் விலகி அமர்ந்த மனோஜ் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு கண் மூடிப் படுத்திருந்த

ஆராதனாவின் நெற்றியில் முத்தமிட்டு விலகி அமர்ந்து கொண்டாள்.

அவனது விலகலை அறிந்த ஆராதனாவின் முகத்தில் ஏமாற்றம் தெரிய அவள் ஒரு சிணுங்கலுடன் எழுந்து அமர்ந்து கொண்டாள். அவளது ஏமாற்றத்தைப் பார்த்த மனோஜின் மனதில் தென்றல் வீச அவன் செல்லமாக அவள் தலையை முட்டிச் சிரித்தான்.

''என்ன சிரிப்பு இப்ப...'' கோபத்தில் வெடித்தாள் ஆராதனா.

''ஏய் இப்ப எதுக்கு இப்படிக் கோபப்படுற? எனக்கு உன்னோட பீலிங்க்ஸ் புரியுது ஆராதனா.. ஆனால் என் மேல நீ வெச்சிருக்கிற நம்பிக்கைக்கு நானும் மதிப்புக் கொடுக்கணுமில்ல. அதனாலதான்...''

''நான் கேட்டேனா உங்களை மதிக்கச் சொல்லி?''

''நீ கேட்காட்டியும் இது என்னோட கடமைடி. அத்தோட நீ எனக்குச் சொந்தமாகிறபோது என்னோட மனைவியாகி இருக்கணும் ஆராதனா. அதுதான் எனக்கு சந்தோசத்தைக் கொடுக்கும். இப்ப இப்படி நான் உன்னை உரிமையாக்கிக்கிட்டா என் மனசுல இந்த உணர்ச்சிதான் தோன்றும் ஆராதனா. சந்தோசம் தோன்றாது?''

தானே உரிமை கொடுத்தும் எல்லை மீறாத அவனது கண்ணியத்தை எண்ணிப் பெருமையுடன் அவனைப் பார்த்தாள் ஆராதனா.

''இன்னும் ஒரே மாசத்தில் ஃபைனல் செமஸ்டர் வந்து விடும் ஆராதனா. அதனால இனி என் கவனம் முழு



வதும் படிப்பில் தான் இருக்கும். இது நம் எதிர்காலத் திற்காக நான் உழைக்க வேண்டிய நேரம் ஆராதனா. நீ இதைப் புரிந்து கொள்வாய்னு நினைக்கிறேன்.''

''கண்டிப்பா மனோஜ். நீங்க கவலையில்லாமல் படிங்க. நான் உங்களைத் தொந்தரவு பண்ண மாட் டேன்.''

''ஏய். நான் உன்னை தொந்தரவு பண்ண வேண் டாம்னு சொன்னேனாடி. ஏன் இப்படி ஓவர் ரியாக்ட் பண்ற. உன்னைப் பார்க்காமல் இருந்தால்தான் என்னால படிக்க முடியாது.''

''இப்ப என்னை என்னதான் பண்ணச் சொல்றீங்க?''

''நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். என் மேல நம்பிக் கையுடன் சிரிச்ச முகமா இரு. அது போதும் எனக்கு. இனி எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்.''

''இல்லை மனோஜ். நேற்றில் இருந்து வீட்டில் ஒரே பிரச்சினையா இருக்கு. என்னால நிம்மதியா இருக்க முடியல.''

''தெரியும்...'' அமைதியுடன் அழுத்தமாகக் கூறிய மனோஜின் குரல் ஆராதனாவிற்குள் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

''தெரியுமா? எப்படி?''

''வைகுந்தனுக்கு போன் பண்ணி எல்லாவற்றையும் கேட்டு விட்டேன். உன்னோட காதலின் ஆழத்தையும் நான் புரிஞ்சுக்கிட்டேன் ஆராதனா. இனி நான் இந்த

உலகத்தையே ஜெயிப்பேன்டா. அந்த உறுதியையும் வெறியையும் எனக்கு நீதான் கொடுத்திருக்க ஆராதனா.''

''நான் கொடுக்கல மனோஜ். நம்மோட அன்பு நம் ரெண்டு பேருக்குமே நம்பிக்கையைக் கொடுத்திருக்கு. நீங்க முன்னேறிப் போங்க மனோஜ். உலகத்தோட எந்த மூலைக்கும் போங்க. உங்களுக்காக நான் காத்திருப்பேன். அப்படி என்னால காத்திருக்க முடியாத சூழ்நிலை வந்தா... நான் காற்றோடு கலந்து உங்களுடன் வந்திடு வேன். ஆனா நான்...'' அதற்கு மேல் பேச முடியாமல் உதட்டைக் கடித்து அமைதியாகி விட்டவளை ஆவேசமாக இதழ் கவ்வி தழுவிக் கொண்டான் மனோஜ்.

''நான் இருக்கேன் ஆராதனா. உன்னால காத்திருக்க முடியாத சூழ்நிலை வந்தால் எனக்கு ஒரு போன் பண்ணுடா. அது போதும். உன்னைப் பாதுகாக்க என் உயிரையும் குடுக்க நான் இருக்கும்போது நீ இப்படி நம்பிக்கையில்லாமல் பேசலாமா... என்னால் தாங்க முடியாதுடி..''

''தாங்கணும் மனோஜ். எல்லாத்தையும் தாங்கப் பழகணும். நம்மைப் பெத்தவங்க ஆசீர்வாதத்தோடு நாம ஒண்ணு சேரணும்னா எல்லாத்தையும் தாங்கி நின்னு போராடணும்.''

''கண்டிப்பா போராடலாம் ஆராதனா. நான் இந்த எக்ஸாம் முடிஞ்சவுடனேயே மும்பை போகணும். நான் அனுப்பிய சாப்ட்வேரை அங்க இருக்கிற ஒரு மல்டி



நேஷனல் கம்பெனி அக்செப்ட் பண்ணி இருக்கு. அந்த வேலையைத் தொடர நான் அங்கே போயாகணும். கண்டிப்பா இது சக்சஸ் ஆனா நம்ம எதிர்காலம் பொன்னா அமையும் ஆராதனா. அதற்கு மேல் நீ காத்திருக்க வேண்டியதில்லை'' நம்பிக்கையுடன் கண்கள் மின்னக் கூறியவனை புன்னகையுடன் ஏறிட்டாள் ஆராதனா.

''உங்க திறமைமேல எனக்கு நம்பிக்கை இருக்கு மனோஜ். நீங்க போய் உங்க திறமையை இந்த உலகத் துக்கு நிரூபிச்சுக் காட்டுங்க. அதுதான் எனக்கும் பெருமை. நான் இங்க என்னோட படிப்பையும் முடிச்சுக் கிறேன். அதற்குப் பிறகு காலம் என்ன வழியைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்குதோ அதன்படி நாம நம்ம பாதையை அமைச்சுப்போம். கண்டிப்பாக அந்தப் பாதை நாம விரும்பற பாதையாகத்தான் இருக்கும்னு நாம நம்புவோம் மனோஜ்.''

உண்மையான காதலை அடைந்த ஒருவனுக்கு அந்தக் காதலே முன்னேற்றத்துக்கான உந்து சக்தியாக மாறி விடுவதை அறிந்து கொண்ட மனோஜ் பைக்கில் ஆராதனாவுடன் ஏறி எதிர்காலத்தைக் கிழித்துக் கொண்டு பயணிக்க ஆரம்பித்தான்.



## 32

கெட்டி மேளம் முழங்கிக் கொண்டிருந்தது. மந் திரங்கள் ஒலிக்க ராதிகாவின் கழுத்தில் வைகுந்தன்

முதல் முடிச்சுப் போட அவனது சகோதரி ஸ்தானத்தில் இருந்து ஆராதனா மற்ற இரண்டு முடிச்சுக்களைப் போட்டு விட்டாள்.

முன்னிருக்கையில் அமர்ந்திருந்த தமயந்தியும் நல்லுச்சாமியும் மங்கல அரிசியைத் தூவி ஆசீர்வதிக்க இரு கைகளைக் குவித்து வணங்கி அந்த ஆசீர்வாதத்தை ஏற்றுக் கொண்டார்கள் மணமக்கள்.

தாலி கட்டி முடித்தவுடன் மற்ற சம்பிரதாயத்துக்கும் விளையாட்டுக்களும் தொடங்கி விட அதற்கு மேல் மேடையில் நிற்க விரும்பாத ஆராதனா மெதுவாக மேடையை விட்டிறங்கி முன் வரிசையில் அமர்ந்திருந்த தமயந்தியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள்.

சன்னக் கரையிட்ட பட்டுப் புடவையும், கழுத்தில் ஒரு அட்டிகையும், மெல்லிய ஒற்றைக் கல் வரிசையுடன் கூடிய ஆரமும் அணிந்து, இடைதாண்டி நீண்ட பின்னலில் மல்லிகைச் சரத்தை இரண்டு சரங்களாகத் தொங்கும்படி அணிந்து அவர்களது செல்வாக்கிற்கு ஒப்பாத எளிமையான தோற்றத்துடன் இருந்த ஆராதனாவின் முகத்தை அன்புடன் பார்த்த தமயந்தி அவளது கையை தன் கைக்குள் அடக்கிக் கொண்டாள்.

பொக்கிஷமாக தன் கைகளைத் தனக்குள் அடக்கிக் கொண்ட தமயந்தியின் செயல் வார்த்தைகளால் புரிய வைக்க முடியாத அன்பினைப் புரிய வைக்க நெஞ்சம் நெகிழ தமயந்தியைப் பார்த்தாள் ஆராதனா.

காதில் வைரக்கம்மலும், கழுத்தில் கனத்த தங்க தாலிக் கொடியும், வைர முகப்புடன் கூடிய மூன்று வட



செயினும், கை நிறையத் தங்க வளையலும், அகலக் கரையிட்ட பட்டுப் புடவையும் தமயந்தியின் அப்போதய செல்வச் செழிப்பை உணர்த்த அந்தச் செழிப்பிற்குக் காரணமான ஆராதனாவோ அதனை அறியாத அமைதியுடன் ராதிகாவையும் வைகுந்தனையும் சிறிதும் பொறாமையற்ற கண்களுடன் நெஞ்சம் நிறைந்தவளாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனோஜ் ஆராதனாவிடம் கூறியதைப் போலவே படிப்பு முடிந்த கையுடன் மும்பை சென்றுவிட அவன் இல்லாத கல்லூரியில் அவனது கால்கள் பதித்த தரையில் நடக்கும் பாக்கியத்தை எண்ணிக் கொண்டே படிப்பினைத் தொடர்ந்து கொண்டிருந்தாள் ஆராதனா.

சரியாக ஒரே மாதத்தில் மனோஜ் அவளுடைய சாப்ட்வேரை அவளது கம்பெனி ஒப்புக் கொண்டதையும் அதற்கு மேலும் அவளது சேவை தங்களது வெளிநாட்டுக் கிளைக்குத் தேவைப்படுவதால் அவனை வெளிநாட்டிற்கு அனுப்ப கம்பெனி முடிவெடுத்து இருப்பதாகவும் ஆராதனாவிற்குத் தகவல் தெரிவித்து விட்டார்கள்.

அவனது முன்னேற்றத்தை எண்ணிப் பெருமைப் படுவதா அல்லது கடல் கடந்து தன்னைப் பிரிந்து செல்லப் போகும் மனோஜை எண்ணிக் கவலைப் படுவதா என்பது புரியாத குழப்பமான மனநிலையில் தவித்தாள் ஆராதனா. ஆனால் தங்களது பிரிவைவிட மனோஜின் முன்னேற்றமே முக்கியம் என்பதை உடனடியாக தன்னுடைய உள்ளத்திற்கு அறிவுறுத்திக்

கொண்ட ஆராதனா கல்லூரி முடிந்து வெளியே வந்தாள். சாவி கொடுத்த பொம்மையாக கடமையைச் செய்யும் மனநிலையுடன் தங்களது காரை நெருங்கிய ஆராதனாவின் விழிகள் வியப்பில் விரிந்தது. எங்கோ கண்காணாமல் ஒளிந்து கொண்டிருந்த அவளது உயிர் மீண்டும் அவளிடம் வந்ததைப் போன்ற துடிப்புடன் வேகமாக காரை நோக்கி ஓடிய ஆராதனாவை புரியாமல் பார்த்த ராதிகா அவளுக்கு எதிரில் நின்று கொண்டிருந்த மனோஜைப் பார்த்தவுடன் அப்படியே இடைவெளி விட்டு நின்று விட்டாள்.

தன் கண் முன் நிற்பவன் மனோஜ்தானா என்பதை நம்ப முடியாமல் அவனருகில் சென்று அவன் முகத்தைப் பார்த்தபடியே சில நிமிடங்கள் நின்று விட்ட ஆராதனா ஒரு பெரும் கேவலுடன் மனோஜின் மார்பில் சாய்ந்து அவனைக் கட்டிக் கொள்ள, தங்களை மற்றவர்கள் பார்க்கும் முன்பாக ஆராதனாவைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு கார்க் கதவைத் திறந்து அதனுள் சென்று அமர்ந்து விட்டான் மனோஜ். சுற்றுப்புறம் மறந்தவளாக மனோஜின் மடியில் அமர்ந்து கண்ணீர் விட்டவளின் காதல் மனோஜின் இதயத்தைக் கரைத்தது. அவன் எதுவும் கூறமுடியாத அமைதியுடன் அவளது முதுகை தடவிக் கொடுத்தபடி அமர்ந்து விட்டான்.

''ஆரா.. நான் ரொம்ப நேரம் இங்க இருக்க முடியாதுடா. இன்னிக்கு நைட் பிளைட்டில் நான் பாரின் கிளம்பணும்...'' அவன் கூறிய வார்த்தைகள் உயிரை உலுக்க பதறிப் போய் நிமிர்ந்து பார்த்தாள் ஆராதனா.



''இன்னிக்கே கிளம்பறீங்களா...'' திகைப்புடன் கேட்டவளை கலைந்திருந்த முடிக்கற்றைகளை சரி செய்து கொண்டே அவளைப் பார்த்த மனோஜின் கண்களிலும் பிரிவின் துயர் தெரிந்தது.

''வேற வழியில்லை ஆராதனா. நான் போய்த்தான் ஆகணும். இது நமக்கு நல்ல ஆப்பர்சூனிட்டி. இதை நாம மிஸ் பண்ணக் கூடாதுடா.''

''ம்ம்ம்...''

''ஆராதனா. நீ சிரித்த முகமாய் எனக்கு பர்மிஷன் கொடுத்தால்தான் நான் போவேன். இல்லைன்னா நான் மும்பைக்குக் கூட போகாமல் இங்கேயே இருந்துடுவேன்.''

''இல்லை மனோஜ். நான் வருத்தப்படலை. நீங்க போய்விட்டு வாங்க. நல்லபடியா சக்சஸ்புல்லா உங்க வொர்க்கை முடிச்சுட்டு வாங்க...'' வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் கூறினாள் ஆராதனா.

''ம்ம்.. உன் கையைக் குடு..'' அவள் புரியாமல் நீட்டிய கையின் மோதிர விரலில் அழகிய பூ ஒன்று மலர்ந்த தோற்றத்துடன் இருந்த மோதிரத்தை அணிவித்தான் மனோஜ். சிறிய மலர் இதழ்களின் நடுவில் படுத்திருந்த பெரிய வெள்ளைக் கல்லின் மாயா ஜாலத்தை விழி விரியப் பார்த்தாள் ஆராதனா. தன்னுடைய மனோஜ் தனக்கு அளிக்கும் முதல் பரிசு இது என்பதை உணர்ந்த ஆராதனாவின் உள்ளம் பூரிப்படைந்தது.

''பிடிச்சிருக்கா?'' கேட்டவனை விழிகளில் ஆனந்தம் பொங்கப் பார்த்தாள் ஆராதனா

''என் மனோஜ் எனக்காகத் தந்த பரிசு இது. புடிக்காமல் போகுமா? ரொம்பப் புடிச்சிருக்கு'' தன் கையில் இருந்த மோதிரத்தில் இதழ் பதித்தாள் ஆராதனா.

''என்னோட விலை மதிப்பில்லாத பொக்கிஷம்டி நீ. உனக்கு இந்தப் பரிசெல்லாம் சாதாரணம். ஒரு வைரக்கல் உன் அழகான விரல் நகத்தைவிட பிரகாசிக்க முடியலையே. ஆச்சரியம்தான் ஆராதனா...'' கூறிக் கொண்டே அவள் மேல் சரிந்தவனைத் தன் மேல் படர அனுமதித்து அவனுடன் ஒன்றிக் கொண்டாள் ஆராதனா.

''ஆராதனா... நீ என் உயிர்டி.. நீயில்லாமல் நான் ஒன்றுமேயில்லை.''

''அது எனக்குத் தெரியும் மனோஜ். ஆனா நம்மை உயிரா நினைக்கிற பெத்தவங்க இருக்காங்க மனோஜ். அதையும் நீங்க மறக்கக் கூடாது.''

''..... இப்ப எதுக்கு உன்னைப் பெத்தவங்க ஞாபகம் உனக்கு? அதான் நான் பாரின் போனதுக்கப்புறம் நீ அவங்களோட தான இருக்கப்போற? இன்னும் சொல்லப் போனா அவங்க மட்டும் நம்ம கல்யாணத்துக்கு தடை சொல்லாம இருந்திருந்தா நான் உன்னையும் என்னோடவே பாரினுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிருப் பேன். நமக்குள்ள இந்தப் பிரிவே இருந்திருக்காது. போடி.. போ.. உன்னை பெத்தவங்க கிட்டவே போ...''



அவளைத் தள்ளிவிட்டு விலகி எழுந்து காரைத் திறக்கப் போனவனின் கையைப் பிடித்துத் தடுத்தாள் ஆராதனா.

''என்னடி.. இன்னும் என்ன சொல்லப் போற?''

''நான் சொன்னது என்னைப் பெத்தவங்களைப் பத்தி இல்லை. உங்களோட பேரண்ட்ஸைப் பத்தித்தான் சொன்னேன்.''

''அவங்களுக்கென்ன இப்ப?''

''முதல் மாச சம்பளம் வந்தவுடனேயே வைர மோதிரம் வாங்கிட்டு வந்துட்டீங்க. ஆனா அத்தை மாமாவோட வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நீங்க என்ன செஞ்சீங்க.''

''ஆராதனா!''

''நீங்க சம்பாதிச்சு வாழ்க்கைத்தரம் உயர்வடையுறது ஒரு பக்கம் இருக்கட்டும். உங்களைப் பெத்தவங்களை அவங்க தலை நிமிர்ந்து வாழறபடி உயர்த்துங்க. அதுதான் முக்கியம்.''

''இப்ப என்னை என்னதான்டி பண்ணச் சொல்ற?''

''இப்பத்தான் நீங்க நல்லா சம்பாதிக்க ஆரம்பிச் சுட்டீங்கள்ள? அதை மூலதனமா வெச்சு மாமாவைத் தொழில் தொடங்கச் சொல்லுங்க. தொழில்னவுடனே ஏதோ பேக்டரி ஆரம்பிக்கச் சொல்றேன்னு நினைக்க வேண்டாம். நல்ல சென்டரான இடமா பார்த்து டவுனில் ஒரு கடையை ஆரம்பிக்கச் சொல்லுங்க. அந்தக்

கடையில நம்ம தோட்டத்துக் காய்கறி, பழவகைகள் நாமளே தயார் பண்ற வத்தல், அத்தையோட ஸ்பெஷல் ஊறுகாய் வகைகள் எல்லாத்தையும் பெருசா வியாபாரம் பண்ணிக்கலாம். பத்தாக் குறைக்கு தேவைப்படற காய்கறி, பழங்களை வெளியிலும் வாங்கிக்கலாம். மாமா தொழில் நுணுக்கம் தெரிஞ்சவங்க. அதனால நீங்க கவலைப் படாம அவங்களை தொழில் ஆரம்பிக்க வைங்க.''

ஆராதனாவின் வாக்கு பொன்னானது. முதலில் வாடகைக்குக் கடை பிடித்து தொழிலை ஆரம்பித்த நல்லுச்சாமி கூடிய விரைவிலேயே தொழிலில் முன்னேறி சொந்தக் கட்டிடத்தில் தொழிலை நடத்த ஆரம்பித்தார்.

செயற்கை உரங்கள் போடாமல் இயற்கை உரங்களைக் கொண்டு விளைவிக்கப்பட்ட நல்லுச்சாமியின் தோட்டக் காய்கறிகளில் சுவையும் அவரது தோட்டத்துக் கனிகளின் தரமும் மிக விரைவாக அவரது கடைக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுத்துவிட ''தனா பழமுதிர் சோலை' தனது கிளையை டவுனிலேயே இன்னும் பல இடங்களில் பரப்பி கிளைவிரித்து நின்றது.

சாமர்த்தியசாலியான நல்லுச்சாமி தனது வருமானத்தை சிதற விடாமல் தோட்டத்தினை விரிவு படுத்தியும், அருகில் உள்ள தோப்புகளை விலைக்கு வாங்கியும் தங்களது தொழிலுக்கான வளமான அடித்தளத்தினை அமைத்துக் கொண்டார். கிராமத்தில் விவசாயத்தை விரிவுபடுத்திய கையோடு டவுனிலேயே இடம் வாங்கி அதில் அழகான பங்களாவையும் கட்டி முடித்து மகனது வரவிற்காக காத்திருக்கத் தொடங்கியிருந்தார்.



இடைப்பட்ட காலத்தில் மனோஜின் சாப்ட்வேர் உருவாக்கம் அவனுக்குக் கை கொடுக்க மனோஜ் அவன் வேலை பார்த்த கம்பெனியில் இருந்து விலகி நண்பர்களுடன் இணைந்து தானே சொந்தமாக ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியைத் தொடங்கி அதனை வெற்றிகரமாக நடத்தவும் தொடங்கி விட்டான்.

அனைத்திற்கும் அடித்தளம் இட்டுக் கொடுத்த ஆராதனாவோ தன் வாழ்க்கையின் அடித்தளத்தை பெற்றோர் அமைத்துக் கொடுக்கும் நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.



## 33

அந்தப் பெரிய கல்யாண மண்டபம், பூ வேலைப் பாடுகளால் தேவலோகத்தையும் தாண்டிய அழகோடு ஜொலித்துக் கொண்டிருந்தது. மலர் வேலைப்பாடுகளையும் மிஞ்சிக் கொண்டு கண்கவரும் வண்ண விளக்குகள் சரம் சரமாக தொங்கிக் கொண்டு ஒளி வீசி காண்பவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

திருமணத்திற்கு வருகை தந்திருந்த வெளிநாட்டவரின் கேள்விகளுக்குச் சளைக்காமல் ஆங்கிலத்திலேயே பதிலளித்துக் கொண்டிருந்த கணவரை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் தமயந்தி. அவளது அடக்கமான குடும்பப் பாங்கான அழகினைக்

கண்ட வெளிநாட்டு மங்கைகள் அவளுக்குத் தெரியாமல் அந்த அழகினைத் தங்களது கேமராவில் பதிய வைத்துக் கொண்டார்கள்.

தலைமுதல் கால் வரை வைரக்கற்கள் பதித்த நகைகளை அணிந்து கொண்டு மனோஜிற்கு அருகில் நின்றிருந்த ஆராதனா அசையும் போதெல்லாம் ஒளி வெள்ளத்தையும் வர்ண ஜாலத்தையும் வாரி வழங்கிக் கொண்டிருந்தன வைர நகைகள்.

அழகான இளம் ரோஜா வண்ணப் பட்டுப் புட வையில் தானும் ஒரு ரோஜாவாக மென்மையான அழகுடன் காட்சியளித்துக் கொண்டிருந்த ஆராதனா வின் அருகில் இறக்கத்துடன் நின்று கொண்டிருந்தான் மனோஜ். கழுத்தில் அணிந்திருந்த டியூலிப் மலர் மாலைகளின் மறைவில் அடுத்தவர் அறியாமல் ஆரா தனாவின் இடையை அணைத்து விலகிக் கொண் டிருந்தது அவனது கைகள்.

ராதிகாவின் திருமணத்தை அன்புடன் பார்த்துக் கொண்டிருந்த மகளைப் பார்த்த நந்தகுமாரின் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. தன்னுடைய அருமை மகளையும் இப்படிக் கல்யாணக் கோலத்தில் பார்ப்ப தற்காக அவரது பெற்ற மனம் துடித்தது. அதே தவிப் பினைக் கண்களில் காட்டியவளாக அவரது அருகில் வந்து நின்ற வாசுகியை நிமிர்ந்து பார்க்க முடியாத குற்ற உணர்ச்சியில் அவர் தலை குனிந்து கொண்டார்.

''நாம நம்ம பொண்ணையும் இப்படியொரு கோலத்தில் பார்க்கத்தான் தவமிருந்தோம். எல்லாம்



நல்லபடியாக நடந்திருந்தால் நாமளும்...'' வார்த்தை களை முடிக்க முடியாமல் விம்மிய வாசுகியை கண்களில் நீருடன் பார்த்தார் நந்தகுமார்.

''நான் மட்டும் அந்த ஏக்கம் இல்லாமல் இருக்கேன்னு நினைச்சியா வாசுகி. யார் வீட்டுக் கல்யாணமா இருந் தாலும் அந்தக் கல்யாணக் கோலத்தில் நம்ம பொண்ணு தான் என் கண் முன்னால நிக்கிறா வாசுகி. நான் என் ஆதங்கத்தை யாரிடம் சொல்ல...'' வேதனையுடன் கேட்டார் அவர்.

''மனசில இவ்வளவு ஆசையை வெச்சுக்கிட்டு அதை நிறைவேத்த எந்த முயற்சியும் பண்ணாம இருந்தால் எப்படிங்க? நம்ம வீம்பையும் வெட்டிக் கோபத்தையும் நம்ம பொண்ணோட வாழ்க்கையில்தான் காட்ட ணுமா?''

''என்னடி சொல்றே நீ? நான் வீம்பா பண்ணிக்கிட்டு இருக்கேன்.''

''அப்புறம் நீங்க நடந்துக்கிட்டு இருக்கறதுக்குப் பேர் என்னங்க? சின்னஞ் சிறுசுக அதுகூட நமக்காக அவங்க வாழ்க்கையையே தியாகம் பண்ணிவிட்டு தனி மரமா நிக்கிது. ஆனா நீங்க அவங்களுக்காக உங்க கோபத்தைத் தள்ளி வெச்சா என்னங்க.'' மனைவியின் கேள்வியில் இருந்த நியாயம் நந்தகுமாரின் இதயத்தைத் தொட்டது.

''ஆனால் வாசுகி.. நான் நம்ம வைரமணியோட மனதையும் நினைச்சுப் பார்க்கணுமில்ல'' தயக்கத்துடன் கூறிய கணவரை தீர்க்கமாகப் பார்த்தாள் வாசுகி.

''நான் இப்படிக் கேட்கிறேனேன்னு நீங்க தப்பா நினைக்க வேண்டாம். இத்தனை வயசுக்கு மேலயும் உங்க தங்கச்சி மனசு நோகக்கூடாதுன்னு நீங்க நினைக்கிறீங்க. ஆனா உங்க தங்கச்சி பச்ச மண்ணான என் பொண்ணு மனசு நோகக் கூடாதுன்னு நினைச்சாளா?''

''வாசுகி.. நீ என்ன சொல்ற?''

''என் மனசுக்கு நியாயம்னு பட்டதைச் சொல்றேங்க. தவிர தங்கச்சியை மனசுல வெச்சுக்கிட்டுத்தான நம்ம பொண்ணோட கல்யாணத்துக்கு சம்மதம் சொல்ல நீங்க தயங்குறீங்க? ஆனா என் பொண்ணு இப்படி மனசு நொந்து நிக்கிறப்ப அவ அவளோட மகனுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுருக்கக் கூடாதுல்ல? அதுதான நியாயம்?''

''அப்படியில்ல வாசுகி. ராதிகா வீட்டுல அவசரப்பட்டாங்கல்ல?''

''ஆமாங்க அவசரப்பட்டாங்கதான். ஆனா வைரம் வைகுந்தனோட கல்யாணத்தை முடிவு பண்றதுக்கு முன்னால நம்ம ஆராதனாவோட கல்யாணத்தைப் பத்தி உங்ககிட்ட பேசியிருக்கணும். இல்ல? உங்க மனசை மாத்த முயற்சியாவது செய்திருக்கணுமில்ல? எதையாவது செஞ்சுச்சா? ஆராதனா அவ வயித்துல பொறந்த பொண்ணா இருந்தா வைரம் இப்படி இருப்பாளா? ஆராதனாவுக்கு ஒரு நல்லதை நடத்தி வெச்சுட்டுத் தானே வைகுந்தனுக்கும் கல்யாணம் பண்ணியிருப்பா?''



வாசுகி கேட்ட ஒவ்வொரு கேள்வியிலும் இருந்த நியாயம் நந்தகுமாரை ஈட்டியாகத் துளைத்தது. வைரமணியின் உள்ளத்தில் விகல்பமான எண்ணங்கள் இல்லையென்பதைப் புரிந்து கொண்டாலும் அவள் தனது மகனது திருமணத்தை தள்ளி வைத்து இருக்க வேண்டும் என்ற எண்ணமே நந்தகுமாருக்குத் தோன்றியது.

''வாசுகி நடந்தது எதுவாக இருந்தாலும் நான் வைரத்தை குறை சொல்ல மாட்டேன். அது மனசு நோகும்படி ஒரு வார்த்தைகூட நீயும் பேசக்கூடாது.''

''நீங்க என்னைப் புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானா? வைரம் உங்களுக்கு மட்டுமில்லை, எனக்கும் தங்கை தான். ஆனா தங்க ஊசியாக இருந்தாலும் கண்ணில குத்திக்க முடியுமா? நம்ம பொண்ணோட வாழ்க்கைக் காக நான் இப்பக்கூட நியாயத்தைப் பேசலேன்னா இனி எப்பவும் பேச முடியாமல் போகுமேங்க.. நமக்கு நம்ம பொண்ணோட வாழ்க்கையும் முக்கியமில்லையா? அவளை இப்படியே வாழ்ந்து கருகிப் போகச் சொல் றீங்களா?'' வாசுகியின் வாயில் தன் கையை வைத்து அவசரமாகப் பொத்தினார் நந்தகுமார்.

''என்ன வார்த்தைடி சொல்ற? நம்ம பொண்ணு வாழ்வாங்கு வாழ வேண்டியது...''

''அப்பப் போய் தமயந்திகிட்டயும் அவ புருசன் கிட்டயும் பேசுங்க. நம்ம பொண்ணை வாழ வையுங்க.''

''அது மட்டும் என்னால முடியாது வாசுகி. ப்ளீஸ். நான் இதுவரை வேண்டாம்னு சொன்ன கல்யாணத்தை

இப்பப் போய் எனக்கு சம்மதம்னு சொன்னா, அது அவங்க வசதியானவங்களா மாறிட்டதுனால சொல்வதா நினைச்சுக்கிட்டா நான் என்ன செய்வது? காசு பணத்துக்கு ஆசைப்பட்டவள்னு என்னை அவங்க தப்பா நினைக்க மாட்டாங்களா?''

''ஒரு போதும் அப்படி நினைக்க மாட்டேண்ணா. நானும் உங்க தங்கைதான்'' கணவரது வார்த்தைகளை கவலையுடன் கேட்டுக் கொண்டிருந்த வாசுகியும், கண்ணீருடன் மனைவியுடன் கூறிக் கொண்டிருந்த நந்தகுமாரும் தங்களுக்குப் பின்புறம் இருந்து கேட்ட குரலைக் கேட்டு ஆனந்தத்துடன் திரும்பிப் பார்த்தனர்.

ஒரு கையால் ஆராதனாவை அணைத்துக் கொண்டு அவர்கள் அருகில் வந்த தமயந்தி தன் மறுகையால் வாசுகியின் கைகளை நன்றியுடன் பற்றிக் கொண்டாள்.

''அண்ணா, உங்க வாயில் இருந்து இப்படியொரு வார்த்தையைக் கேட்க நாங்க தவமிருக்கும்போது உங்களை எப்படிண்ணா நாங்க தவறாக நினைப்போம். ஆராதனா எங்க வாழ்க்கையோட அர்த்தம்ண்ணா. அவ எங்க அத்தனை பேரோட ஜீவன். அவ வரும் நாளை எதிர் பார்த்து நாங்க மூணு பேரும் நடைபிணமா வாழ்ந்துக் கிட்டிருக்கோம். தயவு பண்ணி நீங்க மனசு மாறிடாம எங்க உயிரை எங்ககிட்டக் கொடுத்திடுங்கண்ணா'' கை கூப்பிக் கெஞ்சியவளின் கைகளை ஆனந்தமாகப் பற்றிக் கொண்ட வாசுகி கணவரின் முகத்தை நிம்மதியுடன் பார்த்தாள்.

அதற்கு மேல் நல்லுச்சாமி ஒரு நிமிடத்தைகூட வீணாக்க விரும்பவில்லை. மறுநாளே மனோஜிற்கும்



ஆராதனாவிற்கும் கல்யாணத்தை அடுத்த முகூர்த்தத்தி லேயே குறித்து விட்டார்.

செய்தியைக் கேள்விப்பட்ட மனோஜ் அடுத்த பிளைட்டிலே ஊருக்கு வந்துவிட கல்யாண வேலைகள் ஜரூராக நடக்கத் தொடங்கின.

திருமணத்திற்கு மூன்று நாட்கள் இருக்கும்போது தன் கையில் சிறிய ப்ரீப்கேசுடன் வந்த மனோஜை வரவேற்ற நந்தகுமார் வியப்புடன் அவன் கையில் இருந்த பெட் டியைப் பார்க்க அதனை ஆராதனாவின் கையில் கொடுத்தான் அவன்.

''இது எல்லாமே உனக்காக நான் பார்த்துப் பார்த்து வாங்கின நகைங்க ஆராதனா. நம் கல்யாணத்தில் நீ உச்சி முதல் உள்ளங்கால் வரை நான் வாங்கிக் கொடுத் திருக்கும் நகைகளைப் போட்டு, நான் வாங்கித் தந்த பட்டுப் புடவையைக் கட்டிக்கிட்டு முழுக்க முழுக்க என்னுடையவளா வரணும், அதற்கு மேலும் அப்படித் தான் நீ வாழணும்.''

அதன்படியே அவன் கொடுத்த நகைகளையே அணிந்து கொண்டு தேவதையாய் அவனருகில் அமர்ந்து மனோஜின் தாலியை கழுத்தில் வாங்கிக் கொண்டு அவனது மனைவியானாள் ஆராதனா.

அறையெங்கும் மலர்களின் நறுமணம் சூழ்ந்திருக்க ஆராதனாவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான் மனோஜ். அவனது தலையை அன்புடன் வருடிக்

கொண்டே அவன் முகத்தை ஆசையுடன் பார்த்துக் கொண்!டிருந்தாள் ஆராதனா.

எத்தனையோ வருடங்களாக ஆராதனாவிற்காக ஏங்கிய மனோஜின் இதயம் இன்று அவளைத் தன் சொந்தமாக ஆக்கிக் கொண்ட மகிழ்வுடன் திருப்தி யடைந்திருந்தது. மனோஜிற்காகப் பிறந்திருக்கும் எண்ணத்துடன் அவனுக்காக அவனையெண்ணியே வாழ்ந்து கொண்டிருந்த ஆராதனா தன் வாழ்வின் முழுமையை அடைந்துவிட அமைதியுடன் மனோஜின் மார்பில் சாய்ந்து கொள்ள அவளைத் தன்னுடன் ஒன் றாக்கிக் கொண்டான் அவனது கணவனான மனோஜ். இருவரின் வாழ்வையும் ஒன்றாக்கி விட்ட நிம்மதியோடு அவர்களைக் கடந்து சென்றது இரவு.